කාර්යසාධන වාර්තාව

செயற்திறன் அறிக்கை

Performance Report

# 2014

# දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
# வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
# Department of Divineguma Development

නිවාස හා සමෘද්ධි අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு
Ministry of Housing & Samurdhi

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | நன்றி | 03 |
| | நோக்கு மற்றும் பணிகள் | 04 |
| 1. | பணிப்பாளர் தலைமையதிபதியின் செய்தி | 05 |
| 2. | நிர்வாகப் பிரிவின் செயற்திறன் | 09 |
| 3. | 2014.31.12இல் உத்தேச கருத்திட்டத்தின் திட்டமிடலும் அதன் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றமும் | 20 |
| 4. | 2014.31.12இல் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (வலய மற்றும் மாவட்ட ரீதியாக) | 22 |
| 5. | சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரியின் 2014.12.31இல் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (மாவட்ட மற்றும் பிரிவு ரீதியாக) | 24 |
| 6. | சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலன் பிரிவின் செயற்திறன் | 27 |
| 7. | சமூக அபிவிருத்திப் பிரிவின் செயற்திறன் | 35 |
| 8. | சமுதாய அடிப்படை அமைப்பு பிரிவின் செயற்திறன் | 40 |
| 9. | வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவின் செயற்திறன் | 44 |
| 10. | தகவல் தொழில்நுட்ப பிரிவின் செயற்திறன் | 59 |
| 11. | ஊடகப் பிரிவின் செயற்திறன் | 59 |
| 12. | சமுதாய அடிப்படை வங்கி பிரிவின் செயற்திறன் | 61 |
| 13. | கணக்கு அறிக்கைகள் | 89 |

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

### நன்றி

2013ம் ஆண்டின் 1ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றி நாட்டுக்கும் நாட்டின் வறிய மக்களுக்கும் செயற்திறன் மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவை ஒன்றினை நிறைவேற்றும் பொருட்டு 2014ம் ஆண்டில் அர்ப்பணிப்போடு செயற்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சகல பணியாளர்களுக்கும் முதலில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மேலுள்ள பிரகாரம் மக்கள் பணியினை கவனத்திற் கொள்ளும் போது முறையான வழிகாட்டல்களை வழங்கி இத்திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக நிதி அமைச்சின், திறைசேரியின் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உரிய சகல உத்தியோகத்தர்களுக்கும் சகல பணியாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், நிவாரணங்கள் மற்றும் சமூக நலன்புரிச் சேவைகளை உரிய பிரகாரம் செயற்படுத்தப்படுவதற்கு நாட்டின் சகல மாவட்டச் செயலாளர்கள்/ மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள், பிரதேச செயலாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பினையும் கடமை அர்ப்பணிப்பினையும் நன்றியுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

இறுதியாக 2014ம் ஆண்டில் எமது திணைக்களத்தின் கடமை நடவடிக்கைகளை செயற்படுத்திச் செல்லும் போது பல்வேறு வகையில் ஒத்துழைப்பினை வழங்கிய உரிய சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏனைய உரிய நிறுவனங்கள் மற்றும் ஆட்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் தலைமையதிபதி

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்.

## எமது நோக்கு

‘‘வறுமை நிலையினை ஒழித்து வாழ்வாதார பொருளாதார நடவடிக்கைகளின் ஊடாக வலுவூட்டப்பட்ட சமூகம் ஒன்று’’

## எமது பணி

‘‘மக்களை வலுவூட்டச் செய்வித்தல், மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல் அத்துடன் கிராமிய உட்கட்டமைப்பு வசதியின் அபிவிருத்தி ஊடாக தேசிய அபிவிருத்தியினை விரைவுபடுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல், மற்றும் உணவுப் பாதுகாப்பு நிலையினை உறுதிப்படுத்தி, வறுமை நிலையினை ஒழித்து சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் சுபீட்சமிகு தேசம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு பிரபலமாக பங்களிப்புச் செய்தல்’’

**01. பணிப்பாளர் தலைமையதிபதியின் செய்தி:**

1995ம் ஆண்டின் 30ம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை சமுர்த்தி அதிகார சபை 1996ம் ஆண்டின் 18ம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் 2005ம் ஆண்டின் 26ம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகிய மூன்று அதிகார சபைகளும் உடரட்ட கிராமிய புனருத்தாபன திணைக்களம் மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் ஆகிய இரு திணைக்ளங்களும் உட்பட்டதாக 05 அரசாங்க நிறுவனங்களை ஒன்றினைத்து 2013ம் ஆண்டின் 1ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. வாழ்வின் எழுச்சி சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைய கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் 2014ம் ஆண்டு ஜனவரி 03ம் திகதியின் 1843/07 இலக்கத்தினையுடைய வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் இத்திணைக்களம் தாபிக்கப்பட்டது. பின்னர் மேற்படி 05 நிறுவனங்களிலும் கடமையாற்றுகின்ற 26000இற்கும் மேற்பட்ட ஊழியர்களை புதிய திணைக்களத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். இத்திணைக்களத்தின் செயற்பாடானது நாட்டின் 25 மாவட்டங்களும் 331 பிரதேச செயலகப் பிரிவுகளும் 14022 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்குகின்றவாறு வியாபித்துள்ளது. மேலும் 2014.10.10ம் திகதியின் 1844/69 என்ற இலக்கத்தினையுடைய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 06 வலயங்களைத் தாபித்து நாட்டின் 25 மாவட்டங்களும் 06 வலயங்களுக்கு கீழுள்ள பிரகாரம் உள்ளடங்குகின்றவாறு வகுத்து திணைக்களத்தின் நிருவாகத்தினையும் முகாமைத்துவத்தினையும் பேணிச் செல்வதற்கு குறித்த கட்டமைப்பு தாபிக்கப்பட்டது.

| **வலயம்** | **வலயங்களுக்குச் சொந்தமான மாவட்டங்கள்** |
|---|---|
| வலய இலக்கம் 01 – | கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி |
| வலய இலக்கம் 02 – | கம்பஹா, குருணாகலை, கேகாலை, புத்தளம் |
| வலய இலக்கம் 03 – | கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை |
| வலய இலக்கம் 04 – | அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை |
| வலய இலக்கம் 05 – | அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு |
| வலய இலக்கம் 06 – | யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு |

நாட்டின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதனை நோக்காகக் கொள்ளும் பொருட்டு வறுமைத் தன்மையினை ஒழிக்கும் மற்றும் சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் தேசிய கொள்கையினை அமுல்படுத்தி தனிநபர், குடும்பம், குழு மற்றும் மக்களை மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவது இத் திணைக்களத்தின் ஒரு பிரதான குறிக்கோளாகும். இதன் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்புக்களைத் தாபித்து தேசிய, வலய மற்றும் மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்பு வலயமைப்புக்களை கட்டியெழுப்புவதன் ஊடாக குறுநிதி வங்கிக் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதன் ஊடாக சமூக மட்டத்தில் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மக்களை ஒன்று திரட்டுவது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் இன்னுமொரு அடிப்படைக் குறிக்கோளாகும். இதன் பொருட்டு

2013ம் ஆண்டின் 1ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் ஒழுங்குக்கமைய திணைக்களமானது கீழுள்ள பிரகாரம் பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது.

I. உத்தியோகபூர்வ அமைப்புடனான திணைக்களப் பிரிவு
II. சமுதாய அடிப்படை வங்கித் தொகுதிப் பிரிவு
III. சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவு

## I. உத்தியோகபூர்வ அமைப்புடனான திணைக்களப் பிரிவு

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அமைப்பானது கீழுள்ள பிரகாரமாகும். அவையாவன தலைமைக்காரியாலயம், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் நிர்வாகம், சமூக பாதுகாப்பும் சமூக நலன்புரியும், சமூக அபிவிருத்தி, சமுதாய அடிப்படை அமைப்பு, வாழ்வாதார அபிவிருத்தி,திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு,தகவல் தொழில்நுட்பம், ஊடகம், சமுதாய அடிப்படை வங்கி மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பிரிவுத் தலைவர்களைக் கொண்ட 11 பிரிவுகள் அந்தந்த ஒவ்வொரு பிரிவுகளிலும் பணிகளை மேற்கொள்கின்றனர். 06 வலய அலுவலகங்களில் மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள் 06 பேரைத் தமைமையாகக் கொண்ட பணிப்பாளர்களும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகளின் நெறிப்படுத்தலின் கீழ் (மாவட்டச் செயலாளர்கள்) மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்கள் மற்றும் அப் பணிப்பாளர்கள் மூலம் வலய மற்றும் மாவட்ட மட்டத்தில் குறித்த பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகள், சமுதாய அடிப்படை அமைப்புக்களை கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவது பிரதேச செயலாளர்களின் தலைமையில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட ஏனைய சகல அலுவலக மற்றும் கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

## II. சமுதாய அடிப்படை வங்கித் தொகுதிப் பிரிவு

இப் பிரிவின் பணிப்பொறுப்பானது கீழுள்ளவாறாகும். அவையாவன

தலைமைக் காரியாலயத்தின் வங்கி நிதிப் பணிப்பாளரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பணியாளர்கள் மூலம் மற்றும் நாடுபூராகவும் உள்ள 331 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய சமுதாய அடிப்படைச் சங்கங்கள், மகா சங்கங்கள் மற்றும் கிராம மட்டத்தில் செயற்படும் 1074 வங்கிகளுக்குரிய சகல பணிகளும் இப் பணியாளர்கள் மூலம் இந்த வங்கி வலையமைப்பு செயற்படுகின்றது. அதன் மூலம் சமுர்த்தி நிவாரணங்களை வழங்குதல், பயனாளிகளின் கட்டாய சேமிப்பு வைப்புக்களைப் பராமரித்துச் செல்லல் பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் குறுநிதிக் கடன்களை வழங்குதல், சேமிப்பு நிதியங்களை அதிகமாக நன்மைகள் கிடைக்கின்ற நிதிக் காரணிகளில் முதலீடு செய்தல் மற்றும் பிற சமூக நலன்புரி நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2014.12.31ம் திகதியில் சகல வங்கிகளிலும் ரூபா மில்லியன் 48 இற்கான முதலீடுகள் இருந்தன. வாழ்வாதார நடவடிக்கைகளின் பொருட்டு கடன் வசதிகள் அத்தியாவசியமான கிராமிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகையானது ரூபா பில்லியன் 128 ஆகும். 2014ம் ஆண்டின் இறுதியில் மொத்தக் கடன்களின் திரட்டிய பெறுமானமானது ரூபா பில்லியன் 30 ஆகும். மேலும் இப் பிரிவின் சகல நடவடிக்கைகளும் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டு மக்களுக்கு செயற்திறன் மிக்கதும்

தரமானதுமான சேவையொன்றினை வழங்க உத்தேசித்துள்ளது. இப் பிரிவுக்குரிய வினைத்திறன் தொடர்பான தகவல்கள் 08ம் இலக்க அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### III. சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவு

வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 09, 10, 11 மற்றும் 12ம் இலக்க பிரிவுகளுக்கமைய சமுதாய அடிப்படை அமைப்புக்களை தாபிப்பது தொடர்பிலான ஒழுங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டத்தின் குறித்த பிரிவின் அமைப்பு விதிக்கேற்ப உத்தியோகபூர்வமாக சமுதாய அடிப்படை அமைப்புக்கள் தாபிக்கப்படவுள்ளதுடன் தற்போது அதற்குரிய அமைப்புவிதி நகல் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை அமைப்புக்களை பலப்படுத்தி மக்களை வலுவூட்டி அவர்களை பொருளாதார, சமூக மற்றும் ஆத்மீக ரீதியில் பலப்படுத்தி அபிவிருத்தி செய்து சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டத்தின் பொருட்டு ஈடுபடுத்தச் செய்யும் நோக்கில் 2014ம் ஆண்டிற்குள் 38696 சமுதாய அடிப்படை அமைப்புக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு அதற்குரிய முன் நடவடிக்கைகளையும் அடுத்து வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ளது. இப் பிரிவுக்குரிய வினைத்திறன் தொடர்பான விபரங்களுடனான தகவல்கள் 05ம் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வாழ்வாதார அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

2014ம் ஆண்டின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 3146.88 இற்கான நிதி ஒதுக்கீட்டினை வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டு ஒதுக்கப்பட்டது. வாழ்வாதார அபிவிருத்தி பிரிவில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களிடத்தே விவசாய அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்திக் கருத்திட்டங்கள், மீன்பிடி அபிவிருத்திக் கருத்திட்டங்கள், சுயதொழில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றது. இங்கு 2014ம் ஆண்டிற்குள் ரூபா மில்லியன் 1715.82ஐ செலவிட்டு மொத்தமாக 94797 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இப் பிரிவின் கீழ் மேலே காட்டப்பட்ட உப பிரிவுகள் மற்றும் மாவட்ட ரீதியாக செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் அதன் பொருட்டு செலவு செய்த தொகை மற்றும் கருத்திட்டப் பயனாளிகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 01, 02 மற்றும் 03 அதனுடன் 06ம் இலக்க அத்தியாயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### ஏனைய பிரிவுகளின் வினைத்திறன்

2014ம் ஆண்டிற்குள் சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரிப் பிரிவுக்கு உரியதாகப் பெற்றுக் கொண்ட வினைத்திறன் தொடர்பான விபரங்களுடனான தகவல்கள் 03ம் இலக்க அத்தியாயத்தின் கீழும் சமூக அபிவிருத்தி பிரிவின் வினைத்திறன் தொடர்பான தகவல்கள் 04வது அத்தியாயத்தின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக உதவிச் சேவைகளாக 2014ம் ஆண்டிற்குள் நிருவாகப் பிரிவு பெற்றுக் கொண்ட வினைத்திறனானது 02ம் இலக்க அத்தியாயத்தின் கீழும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் வினைத்திறன் 07ம் இலக்க அத்தியாயத்தின் கீழும் ஊடகப் பிரிவின் வினைத்திறன் 08ம் இலக்க அத்தியாயத்தின் கீழும் கணக்கு அறிக்கைகள் தொடர்பான விபரங்கள் 10ம் இலக்க அத்தியாயத்தின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமானது உத்தியோகபூர்வமாக தாபிக்கப்பட்டது 2014.01.08ம் திகதியிலாகும். அதன் பின்னர் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் 06 வலயக் காரியாலயங்களும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது 2014ம் ஆண்டின் ஏப்ரல்

இறுதிப் பகுதியிலாகும். ஆகையினால் அவ்வாண்டிற்குள் நிறைவேற்றக்கூடியதாக இருந்தமையானது. இத் திணைக்களத்தோடு ஒன்றிணைந்த 05 அரசாங்க நிறுவனங்களின் பணியாளர்கள் தேசிய, வலய, மாவட்ட மற்றும் பிரதேசம் ஆகிய மட்டங்களில் அமைந்துள்ள அலுவலகங்களில் இணைப்புச் செய்தல் அந்த மட்டங்களில் அலுவலகத் தொகுதிகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் தலைமைக் காரியாலய பிரிவுகளை அமைத்தல், தலைமைக் காரியாலயத்திலிருந்து கிராம உத்தியோகத்தர் பிரிவு வரையில் பரந்துள்ள பணியாளர்களை தர்க்க ரீதியாக அமர்த்துவது, அதனூடாக அடிப்படை மட்டம் வரையிலான அபிவிருத்தி, வங்கிச் சேவைகள், சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரி ஆகிய பிரதான கடமைகள் மற்றும் ஏனைய சகல கடமைகளையும் செயற்படுத்தும் பணிப்பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக திணைக்களம் அமைக்கப்படும் போது அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் திணைக்களத்தில் சேர்வதற்கு விருப்பத்தினை தெரிவித்த (அதாவது முதல் நியமனத் திகதியுடனான ஓய்வூதியம் என்ற அடிப்படையில் 8373 பேரும் புதிய நியமனம் என்ற அடிப்படையில் 14159 பேரும் ஊழியர்களாகக் கொண்ட பணியாளர்களை திணைக்களத்தில் உள்ளீர்ப்புச் செய்து கொள்ளல், நட்ட ஈட்டினைப் பெற்று விலகுவதற்கு விருப்பத்தினைத் தெரிவித்த 1801 ஊழியர்களுக்கு நட்ட ஈட்டினை வழங்கி பணியிலிருந்து விலகுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல், 03 அதிகார சபைகளினது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்து கடமையாற்றிய மற்றும் தொடர்ந்து அந்த அடிப்படையிலேயே திணைக்களத்தில் இணைந்து கடமையாற்றுவதற்கு விருப்பத்தினை தெரிவித்துள்ள 1068 பணியாளர்களுக்கும் அதற்குரிய பணி நடவடிக்கைகளை வழங்குவதும் 2014ம் ஆண்டிற்குள் மேற்கொண்ட பிரதான கடமையாகும்.

மேலே காட்டப்பட்ட பின்னணியில் பல்வேறு நடைமுறை முரண்பாடுகள் மற்றும் சிக்கல்களுக்கு முகம்கொடுத்து ரூபா மில்லியன் 1,715.82 ஐ செலவிட்டு 94797 பயனாளிக் குடும்பங்களில் அத் தொகைக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்களை நாடு பூராகவும் செயற்படுத்துவதற்கு கிடைத்தமை திணைக்களம் பெற்றுக்கொண்ட ஒரு வெற்றியாகும். அதனூடாக வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 4வது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை ஓரளவாவது அடைந்து கொள்ளக் கிடைத்தமையினையும் குறிப்பிடுகின்றேன். அத்துடன் எமது நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மக்களை வலுவூட்டி வாழ்வாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்தி அவர்களை வறுமையிலிருந்து மீட்பதற்கும்,நாட்டின் பிரதான பொருளாதாரப் பிரிவில் செயற்பாடுள்ளதாகவும் நிலையான பங்குதாரர்களாகவும் ஆக்குவதன் மூலமும் சிறந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இத் திணைக்களத்திற்கு மேலும் பல தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. ஆகையினால் முன்வரும் ஆண்டுகளில் அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு ஊக்குவிக்கப்பட்ட மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட மனித வளத்தினை உருவாக்கும் நோக்கத்திலும் முன் வேலைத்திட்டத்தினை தயாரிக்கப்படுவதனையும் குறிப்பிடுகின்றேன்.

ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க
பணிப்பாளர் தமைமையதிபதி
திவிநெகும அபிவிருத்தி திணைக்களம்

## 2. நிருவாகப் பிரிவின் வினைத்திறன்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிருவாகப் பிரிவு – தாபன, மனித வளங்கள் பயிற்சிகள் மற்றும் விசாரணைப் பிரிவுகளுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. நிர்வாகத்தில் முகங்கொடுக்கின்ற அன்றாட நடவடிக்கைகள் மற்றும் கொள்கையடிப்படையிலான தீமானங்களை செயற்படுத்துவதும் இப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணியாகும்.

### 2.1 மனித வளப் பிரிவு

நிர்வாகப் பிரிவு நிர்வாகப் பணிப்பாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இப் பிரிவின் ஊழியர்களது எண்ணிக்கையானது 59 பேரைக் கொண்டதாகும். மனித மற்றும் பௌதீக வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதும் தாபன அபிவிருத்தியின் பொருட்டு அர்ப்பணிப்புச் செய்வதும் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளின் பணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உதவிச் சேவைகளை வழங்குவதும் நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்படுகின்ற ஆரம்ப பணிகளாகும்.

#### 2.1.1 பிரதான குறிக்கோள்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டதிலிருந்து இது வரையில் இவை தொடர்பில் அமைச்சுடன் நடைபெறும் விசேட கலந்துரையாடல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ❖ ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு முறைகளைச் செயற்படுத்துதல்
- ❖ பணியாளர்களின் சிறந்த செயற்பாடுகள், ஒழுக்கம், பராமரித்துச் செல்லல் நாளாந்த செயற்பாடுகளை இலகுவாக்கும் பொருட்டு செயற்படுதல்.
- ❖ நிறுவனத்தின் சிறந்த செயற்பாட்டினை உறுதிப்படுத்துதல்
- ❖ அலுவலக ஆளணியினரை ஒழுங்கு செய்வதும் அலுவலக ஒழுங்குப் பதிவினை தயாரித்தலும்.

#### 2.1.2 நாளாந்த கடமைகள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரையில் இது தொடர்பாக அமைச்சுடன் நடைபெறும் விசேட கலந்துரையாடல்களின் வேலைத்திட்டம்.

- ❖ நாளாந்த தபால் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ பிரிவுகள் மற்றும் பிரிவுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பினைப் பேணிச் செல்லுதல்
- ❖ மக்கள் கோரிக்கைகளை செயற்படுத்துதல்
- ❖ ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் செயற்படுதல்
- ❖ பணியாளர்களின் தனிநபர் கோவை பராமரிப்பு, பேணிச் செல்லல் மற்றும் முறைமைப்படுத்துதல்.
- ❖ போக்குவரத்து அலகினை முகாமைத்துவம் செய்தல்
- ❖ ஊழியர் சம்பளங்கள், கொடுப்பனவுகள், மற்றும் பிரயாணப் படிகள் மற்றும் சகல கொடுப்பனவுகள் தொடர்பான பற்றுச் சீட்டுக்களை செலுத்துவதற்குரிய நடவடிக்கைகள்.

### 2.1.3 விசேட ஒப்படைகள்

- ❖ நிருவாகப் பிரிவுக்குரிய பாராளுமன்ற கேள்விகளுக்கு குறித்த பதில்களை வழங்குதல்.
- ❖ நிருவாகப் பிரிவுக்குரிய கணக்காய்வு விசாரணைகளின் பொருட்டான பதில்களை தயாரிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.
- ❖ பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அது தொடர்பில் பிரிவுத் தலைவர்களை விளக்கமளிப்பதும்.
- ❖ வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை மற்றும் ஏனைய பதவி உயர்வுப் பரீட்சைகளை நடாத்துவது/ தொடர்பாடல் பணிகளை வழங்குதல்.

### 2.1.4 பணியாளர் குழு

களத்துறைப் பணிகளில் ஈடுபட்டுள்ள வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் உட்பட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மொத்த பணியாளர் குழுவானது 23,635 ஆகும்.


**அட்டவணை 01**

**உத்தேச பணியாளர் குழுவும் வெற்றிடங்களும்**


**பொழிப்பு**


| பதவி | அங்கீகரித்த தொகை | தற்போதுள்ள தொகை | வெற்றிடம் |
|---|---|---|---|
| **நிர்வாக மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணியாளர்கள்** | | | |
| பணிப்பாளர் தலைமையதிபதி | 1 | 1 | 0 |
| மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி | 7 | 1 | 6 |
| பணிப்பாளர்கள் | 19 | 8 | 11 |
| மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்கள் | 25 | 24 | 1 |
| பிரதிப் பணிப்பாளர்கள்/ உதவிப் பணிப்பாளர்கள் | 21 | 12 | 9 |
| மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரதிப் பணிப்பாளர்கள் | 50 | 14 | 36 |
| தேர்தல் தொகுதி வாழ்வின் எழுச்சி உதவிப் பணிப்பாளர்கள் | 160 | 0 | 160 |
| பிரதேச வாழ்வின் எழுச்சி உதவிப் பணிப்பாளர்கள் | 332 | 0 | 332 |
| நிருவாக உத்தியோகத்தர்கள் | 7 | 2 | 5 |
| சிரேஷ்ட வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள் | 205 | 0 | 205 |
| வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள் | 2557 | 2415 | 142 |
| வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 27437 | 20344 | 7093 |
| முகாமைத்துவ உதவியாளாகள் | 477 | 371 | 106 |
| **உப மொத்தம்** | **31298** | **23192** | **8106** |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **நிதிப் பிரிவின் பணியாளர்கள்** | | | |
| பிரதான கணக்காளர் | 7 | 1 | 6 |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் | 1 | 0 | 1 |
| கணக்காளர்கள் | 27 | 4 | 23 |
| உள்ளகக் கணக்காய்வாளர்கள் | 8 | 4 | 4 |
| நிதி உதவியாளர்கள் | 7 | 1 | 6 |
| சிரேஷ்ட உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் | 25 | 0 | 25 |
| உள்ளக்க கணக்காய்வு உத்தியோகத்தர்கள் | 78 | 77 | 1 |
| உள்ளக கணக்காய்வு உதவியாளர்கள் | 128 | 120 | 8 |
| **உப மொத்தம்** | **281** | **207** | **74** |
| **தொழில்நுட்ப பிரிவின் பணியாளர்கள்** | | | |
| பொறியியலாளர்கள் | 6 | 2 | 4 |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| மொழி பெயர்ப்பாளர் | 7 | 2 | 5 |
| சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| பயிற்சி மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 35 | 10 | 25 |
| ஊடக உத்தியோகத்தர் | 2 | 1 | 1 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 6 | 6 | 0 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 365 | 0 | 365 |
| **உப மொத்தம்** | **423** | **23** | **400** |
| **ஏனைய பணியாளர்கள்** | | | |
| சாரதிகள் | 297 | 133 | 164 |
| அலுவலக உதவியாளர்கள் | 441 | 67 | 374 |
| අරක්කැමි | 8 | 1 | 7 |
| தொழிலாளர்கள் | 16 | 12 | 4 |
| **உப மொத்தம்** | 762 | 213 | 549 |
| **மொத்தம்** | **32764** | **23635** | **9129** |




1. நிர்வாகம் 2.சட்டம் 3.நெறிப்படுத்தல் 4.சமூக நலன்புரி 5.சமூக பாதுகாப்பு


மாவட்ட மட்ட கட்டமைப்பு
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்
கணக்காளர்
மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரதிப் பணிப்பாளர் (வாழ்வாதாரம் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பு)
மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரதிப் பணிப்பாளர் (குறுநிதி)
சி.வா.மு (நிதி)
சி.வா.மு (வாழ்வாதார
சி.வா.மு (சமுதாய அடிப்படை)
சி.வா.மு (சமூக அபிவிருத்தி)
சி.வா.மு (நிர்வாகம்
பி.மு.உ
மேம்படுத்தல் உத்தியோகத்தர் – 2 (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி)
சி.வா.மு (1-3) (விசாரணை)
சி.வா.மு (வங்கி அலுவல்கள்)
சி.வா.மு (வங்கி விசாரணை)
வா.எ.உ - 2 மு.உ - 2
வா.எ.உ - 2
வா.எ.உ - 2
வா.எ.உ - 1
வா.எ.உ – 4 மு.உ - 1
வா.எ.உ - 1 மு.உ - 1
மு.உ - 1
த.தொ. உ
வா.எ. உ - 2
வா.எ. உ – 2-12




- விவசாயம்
- கால்நடை வளர்ப்பு
- மீன்பிடிக் கைத்தொழில்
- பயிர்ச்செய்கை
- நெசவுக் கைத்தொழில்
- கைப்பணி
- பால்பொருள் உற்பத்தி
- இரத்தினக்கல் உற்பத்தி
- கோழிவளர்ப்பு
- மாடுவளர்ப்பு
- பாரம்பரியக் கைத்தொழில்
- தேனீ வளர்ப்பு
- கித்துல் சார்ந்த உற்பத்திகள்

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின்

## பதவி நிலை உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் - 2014

1. திரு.ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க - பணிப்பாளர் தலைமையதிபதி
2. திரு.ஆர்.பி.பீ.திலகசிறி - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
3. திரு.எச்.எம்.ஜயதிலக்க ஹேரத் - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
4. திரு.அமரானந்த வீரசிங்க - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
5. திரு.ஏ.பீ.எஸ்.ரஞ்சித் குணசேகர - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
6. திரு.எஸ்.கே.லியனகே - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
7. திரு.ஆர்.ஏ.டபிள்யூ.ஏ.குமாரசிறி - மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி

### பிரதான கணக்காளர்கள் பதவி

1. திரு.எஸ்.எம்.எஸ்.ஜீ.ரத்னாயக்கா
2. திருமதி.சுனந்த பியசீலி
3. திரு.கே.எம்.குலரத்ன
4. திரு.ஜே.எம்.எஸ்.பண்டார
5. திரு.கே.ஜீ.எஸ்.கே.வீரக்கொடி
6. திரு.எஸ்.எஸ்.கே.லியனகே
7. திரு.எஸ்.பாலராஜா

### கணக்காளர் பதவி

1. திரு.பி.ஏ.எஸ்.ஜே.குமார
2. திரு.கே.கே.எல்.சந்திரதிலக்க

### பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

திரு.ரீ.கே.த.கொஸ்தா

### பணிப்பாளர் பதவிகள்

1. திரு.சீ.டீ.களுஆரச்சி - பணிப்பாளர் (நிருவாகம்)
2. திரு.எஸ்.எம்.ஆர்.எஸ்.பண்டார - பணிப்பாளர் (வாழ்வாதார அபிவிருத்தி)
3. திரு.ஜே.கே.பத்மசிறி - பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல்)
4. திருமதி.காந்தி திசாநாயக்க - பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)
5. திருமதி.ராஜனீ ஷ்ரீயலத்தா - பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி)

### வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர்கள்

1. திரு.கே.ஏ.எம்.பெரேரா
2. திருமதி.பீ.ஏ.எஸ்.உதயங்கனி
3. திருமதி.டபிள்யூ.எம்.டீ.யூ.விஜேரத்ன
4. திரு.எம்.எஸ்.எம்.சப்(f)ராஜ்

5. திரு.எம்.எம்.சீ.எஸ்.ஹேரத்
6. திரு.எஸ்.ஆர்.கமகே
7. திரு.கே.டீ.விக்ரமசூரிய
8. திருமதி.எம்.எம்.எஸ்.கே.கே.ஹேரத்
9. திரு.திரமான்ன
10. திரு.பீ.டீ.எம்.இர்(f)பான்
11. திருமதி.எச்.ஆர்.சிரிநாம
12. திரு.யூ.பீ.எஸ்.ஏ.பியதாச
13. திரு.பீ.ஜீ.அபேசேகர
14. திருமதி.எம்.சந்திமா
15. திருமதி.ஜெயவாணி கணேசமூர்த்தி
16. திருமதி.ஏ.ஏ.எல்.அமரசேகர
17. திரு.ஐ.ஏ.நீல் பர்னாந்து
18. திரு.கே.ஏ.எல்.சிரில்
19. திரு.என்.ஜீ.ஜே.பீ.ரோகித
20. திரு.பீ.குணரத்னம்
21. திரு.எஸ்.ஏ.என்.பிரியசாந்த
22. திரு.நிரஞ்சன் ருவன் ராஜசில்ப
23. திரு.கே.மகேஸ்வரன்
24. திரு.டீ.எம்.கே.பீ.வீரசிங்க
25. திரு.கே.சசிதரன்

**பிரதிப் பணிப்பாளர் பதவிகள்**

1. திரு.மகேஷ் பெரேரா
2. திரு.எஸ்.லியனாராச்சி
3. திரு.எச்.கே.ரணவீர
4. திருமதி.ஆர்.எம்.எல்.டபிள்யூ.எல்.ரத்னாயக்க
5. திரு.பீ.ஜீ.எல்.ஆர்.எஸ்.எஸ்.பண்டார
6. திரு.எஸ்.ஆர்.விஜேசேக்கரா
7. திரு.ரீ.ஏ.ரணசிங்க
8. திரு.எஸ்.வன்னிகம
9. திரு.கபில மாஸகோரல
10. திருமதி.எஸ்.டி.கல்யாணி
11. திரு.ரஞ்சித் டி.சில்வா

**பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

திரு.பி.ஆர்.டி.எச்.அனுரவன்ச

**உதவிப் பணிப்பாளர் பதவிகள்**

1. திரு.ஆனந்த கமகே
2. திரு.எஸ்.பி.வனிகதுங்க
3. திருமதி.எம்.எஸ்.பி.யாப்பா
4. திருமதி.ஜே.எம்.எம்.டபிள்யூ.ஜயசிங்க
5. திருமதி.டபிள்யூ.ஏ.பி.எம்.வீரசூரிய
6. திருமதி.ஐ.டி.என்.சஞ்ஜீவனீ

7. திரு.ஐ.சீ.ஜே.குணரத்ன
8. திரு.பீ.எம்.டி.டபிள்யூ.டி.பள்ளாவல
9. திரு.ஏ.பீலிக்ஸ் பிரணாந்து
10. திரு.டபிள்யூ.பீ.எஸ்.விக்ரமசிங்க
11. திரு.பீ.டீ.ஆர்.கே.பெரேரா
12. திருமதி.டி.எம்.கே.திசாநாயக்க

**பொறியியலாளர் பதவி**

2. திரு.ஏ.எல்.எம்.மாஹிர்

**நிருவாக உத்தியோகத்தர் பதவி**

1. திரு.பீ.ஜீ.உப்புல் ஜயசாந்த
2. திருமதி.பீ.எல்.எஸ்.பொரலுகொ

### 2.2 பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

2014ம் ஆண்டின் நடுப்பகுதியில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவு தாபிக்கப்பட்டது. அதற்கு முன்னர் சமுர்த்தி அதிகார சபை இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் செயற்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி வங்கித் துறையில் இணைக்கப்பட்டு கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு குறுநிதி விடயத்தின் கீழ் இலங்கை வங்கியியலாளர்களின் நிறுவனத்தின் மூலம் 600 உத்தியோகத்தர்களுக்கு இப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்திற்குச் சொந்தமான சனச நிறுவனம் மற்றும் கணக்கீடு மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் வாழ்வின் எழுச்சி வங்கிகளில் பணிபுரிபவர்களுக்கென்றே கணக்கீடு, வர்த்தக, நிர்வாகம் என்ற விடயங்களுக்குரியவாறு 600 பேர் மட்டளவிலானோருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் இறுதி அரைப் பகுதியில் மேற்படி பாடநெறியினைக் கற்கும் பொருட்டு முன்வைக்கப்பட்ட குழு ஒன்று இதுவரையிலும் பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு தாபிக்கப்பட்டதன் பின்னர் கீழ் குறிப்பிடப்படும் வேலைத்திட்டங்களை நடாத்தும் பொருட்டு திட்டமிடப்பட்டது.

#### 2.2.1 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்களைத் தயாரிப்பது தொடர்பான பட்டறை

இந்த பட்டறையினை நடாத்தும் பொருட்டு பொருத்தமான புத்திஜீவிகள் குழு ஒன்றும் பட்டறையினை நெறிப்படுத்தும் பொருட்டு சிறந்த அனுபவமுள்ள வளங்களை இனங்கண்டு உரிய செலவு மதிப்பீட்டினையும் கருத்திட்ட அறிக்கையினையும் அங்கீகரித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பயிற்சிகளை நடாத்தும் பொருட்டு 03 சந்தர்ப்பங்களில் திட்டமிடப்பட்டிருந்தாலும் பங்கு பற்றுவோரின் வேலைப்பழு காரணமாக காலவரையறையின்றி பிற்போடப்படவேண்டியேற்பட்டது.

**2.2.2 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் தொடர்பில் களத்துறை உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் பட்டறை.**

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களையும் பிரதிநிதிப்படுத்துகின்றவாறு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வாழ்வின் எழுச்சி வங்கி மற்றும் களப்பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டம் தொடர்பில் 437 விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்தும் பொருட்டு தேவையான மதிப்பீடுகள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டாலும் மேற்படி நோக்குப் பணி மற்றும் குறிக்கோள்களைத் தயாரிக்கும் பட்டறை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதன் மூலம் தயாரிக்கப்படுகின்ற பணிக்கூற்று போன்றவை இந்த பட்டறையின் பொருட்டு தேவைப்படுவதனால் மேற்படி வேலைத்திட்டம் நடாத்தப்படாத காரணத்தினால் இந்த வேலைத்திட்டத்தினையும் நடாத்த முடியாமல் போனது.

**2.2.3 கணக்குப் பிரிவின் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் பொருட்டு கணக்காளர்களுக்கு Payroll மற்றும் CIGAS மென்பொருள் பற்றிய பயிற்சியளித்தல்.**

சகல வலய அலுவலகங்களும் பிரதிநிதிப்படுத்துகின்ற பிரகாரம் அரச கணக்கீட்டு திணைக்களத்தின் மூலம் கணக்காளர்களுக்கு இதன் கீழ் பயிற்றுவிக்கப்பட்டது. இப்பயிற்சியானது நிதி அறவீடின்றி நடாத்தப்பட்டது.

**2.3.4 வாழ்வின் எழுச்சி முகாமையாளர்களின் உளப்பாங்கினை விருத்தி செய்யும் பயிற்சிப் பட்டறை.**

வாடிக்கையாளர்களின் கவர்ச்சியினை அதிகரிக்கும் நோக்கில் நாடு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ள 1074 வாழ்வின் எழுச்சி வங்கிகளிலும் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களையும் பயிற்றுவிக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டத்தினை நடாத்தும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக 2014ம் ஆண்டில் அப்போது இருந்த வலய அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மூலமாகவும் பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்து உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

**2.3 விசாரணைப் பிரிவு**

**2.3.1 நோக்கம்**

நிறுவனத்தில் பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் கிடைக்கின்ற முறைப்பாடுகள், கணக்காய்வு அறிக்கைகள் உட்பட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய சகல பணிகளையும் மேற்கொண்டு மோசடிகளற்ற சிறந்த நிறுவனம் ஒன்றாக ஆக்குதல்.

**2.3.2 பணிகள்**

1. ஆரம்ப விசாரணை
2. குற்றப்பத்திரிகை வழங்குதல்/ விளக்கம் கோரல்
3. முறையான ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குதல்
4. முறையான ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்
5. மேன்முறையீட்டினை கவனத்திற் கொள்ளல்

1. 2014ம் ஆண்டுக்குரியவாறு முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கை – 25
2. 2014ம் ஆண்டுக்குரியவாறு முறையான ஒழுக்காற்று விசாரணைக்குரிய கட்டளைகள் - 20
3. 2014ம் ஆண்டுக்குரியவாறு ஆரம்ப விசாரணைகள், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் - 16
4. 2014ம் ஆண்டுக்குரியவாறு குற்றப்பத்திரிகை வழங்கப்படவில்லை.
5. 2014ம் ஆண்டுக்குரியவாறு மேன்முறையீட்டுச் சபை கீழுள்ள பிரகாரம் தீர்மானங்களை வழங்கியுள்ளது.
    - தண்டனையுடன் மீள கடமையினை வழங்குதல் - 13
    - தண்டனைகளைக் குறைத்தல் - 06
    - நிராகரித்தல் - 18

# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
## வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டம் 2014
### *2014.12.31ம் திகதியில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்*

| வலயம் | மாவட்டம் | ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | அனுப்பிய நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | விடுவித்த கட்டுநிதி (ரூ.மில்) | விவசாயக் கருத்திட்டம் | | கால்நடை வளக் கருத்திட்டம் | | மீன்பிடிக் கருத்திட்டம் | | கைத்தொழில் கருத்திட்டம் | | சந்தைப்படுத்தல் கருத்திட்டம் | | மொத்தக் கருத்திட்டங்கள் | | முடிவுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | | |
| இல. 01 | கொழும்பு | 300.00 | 255.00 | 377.1 | 503 | 16.25 | 739 | 27.06 | 74 | 3.86 | 5676 | 223.78 | | | 6992 | 270.95 | 2979 | 87.6 |
| | களுத்துறை | 160.00 | 136.00 | | 3449 | 26.58 | 551 | 11.11 | 57 | 0.21 | 2298 | 55.82 | 1327 | 21.77 | 7682 | 115.49 | 6134 | 77.13 |
| | இரத்தினபுரி | 180.00 | 153.00 | | 2318 | 38.54 | 340 | 8.91 | | | 2639 | 84.17 | 810 | 20.35 | 6107 | 151.97 | 3472 | 71.53 |
| | காலி | 200.00 | 170.00 | | 4413 | 40.62 | 1186 | 13.89 | 497 | 8.35 | 4843 | 75.29 | 2748 | 40.82 | 13687 | 178.97 | 7018 | 84.62 |
| | மாத்தறை | 140.00 | 119.00 | | 1527 | 23.21 | 264 | 8.48 | 1468 | 10.80 | 3620 | 79.03 | | | 6879 | 121.52 | 3370 | 57.21 |
| ***உப மொத்தம்*** | | | ***833.00*** | ***377.1*** | ***12210*** | ***145.20*** | ***3080*** | ***69.45*** | ***2096*** | ***23.22*** | ***19076*** | ***518.09*** | ***4885*** | ***82.94*** | ***41347*** | ***838.90*** | ***22973*** | ***378.09*** |
| இல. 02 | கம்பஹா | 260.00 | 221.00 | 437.0 | 856 | 16.90 | 951 | 24.93 | 177 | 6.38 | 7883 | 208.92 | | | 9867 | 257.13 | 4566 | 116.68 |
| | குருணாகல் | 280.00 | 238.00 | | 4764 | 70.57 | 3255 | 90.60 | 42 | 1.45 | 4106 | 105.50 | 592 | 12.38 | 12759 | 280.5 | 5466 | 135.44 |
| | புத்தளம் | 120.00 | 102.00 | | 933 | 16.86 | 2234 | 41.71 | 425 | 9.24 | 2012 | 51.54 | | | 5604 | 119.35 | 3227 | 60.17 |
| | கேகாலை | 180.00 | 153.00 | | 3120 | 45.70 | 1938 | 24.72 | 3427 | 89.24 | 738 | 19.17 | | | 9223 | 178.83 | 6097 | 96.59 |
| ***உப மொத்தம்*** | | | ***714.00*** | ***437.0*** | ***9673*** | ***150.03*** | ***8378*** | ***181.96*** | ***4071*** | ***106.31*** | ***14739*** | ***385.13*** | ***592*** | ***12.38*** | ***37453*** | ***835.81*** | ***19356*** | ***408.88*** |
| இல. 03 | கண்டி | 260.00 | 221.00 | 496.3 | 2479 | 56.14 | 2268 | 62.83 | 14 | 1.35 | 4945 | 139.68 | | | 9706 | 260.00 | 8243 | 206.56 |
| | மாத்தளை | 80.00 | 68.00 | | 1061 | 13.97 | 592 | 17.71 | 2 | 0.03 | 1742 | 47.57 | | | 3397 | 79.28 | 3397 | 78.28 |
| | நுவரெலியா | 100.00 | 85.00 | | 652 | 17.12 | 1315 | 32.97 | 10 | 1.94 | 936 | 25.34 | | | 2913 | 77.37 | 2420 | 52.06 |
| | பதுளை | 180.00 | 153.00 | | 4559 | 67.77 | 2352 | 58.28 | 19 | 0.27 | 1759 | 48.92 | | | 8689 | 175.24 | 8421 | 153.18 |
| ***உப மொத்தம்*** | | | ***527.00*** | ***496.3*** | ***8751*** | ***155.00*** | ***6527*** | ***171.79*** | ***45*** | ***3.59*** | ***9382*** | ***261.51*** | ***0.00*** | ***0.00*** | ***24705*** | ***591.89*** | ***22481*** | ***490.08*** |
| இல. 04 | அம்பாந்தோட்டை | 100.00 | 85.00 | 209.0 | 1610 | 27.97 | 219 | 7.88 | 108 | 3.70 | 2110 | 59.75 | | | *4047* | *99.30* | *2899* | 64.20 |
| | மோனராகலை | 80.00 | 68.00 | | 1626 | 10.10 | 231 | 5.71 | 20 | 0.43 | 21948 | 51.13 | 38 | 0.63 | *23863* | *68.00* | *5829* | 39.46 |
| | அம்பாறை | 100.00 | 85.00 | | 1646 | 20.98 | 1891 | 33.31 | 192 | 4.63 | 1781 | 40.58 | | | *5510* | *99.50* | *4472* | 75.92 |
| ***உப மொத்தம்*** | | | ***238.00*** | ***209.0*** | ***4882*** | ***59.05*** | ***2341*** | ***46.90*** | ***320*** | ***8.76*** | ***25839*** | ***151.46*** | ***38*** | ***0.63*** | ***33420*** | ***266.80*** | ***13200*** | ***179.58*** |
| இல. | அனுராதபுரம் | 140.00 | 119.00 | | 5537 | 55.41 | 2967 | 41.27 | 126 | 2.64 | 1202 | 29.76 | 508 | 9.63 | 10340 | 138.71 | 5369 | 76.50 |

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05 | பொலன்னறு வை | 116.20 | 104.20 | 275.7 | 2560 | 23.81 | 3169 | 33.31 | 141 | 1.16 | 1102 | 23.50 | 447 | 10.30 | 7419 | 92.08 | 6409 | 73.4 |
| | திருகோணம லை | 110.68 | 81.12 | | 3260 | 35.06 | 1298 | 27.68 | 1051 | 14.62 | 2119 | 36.41 | | | 7728 | 113.77 | 1604 | 33.32 |
| | மட்டக்களப்பு | 60.00 | 51.00 | | 485 | 7.73 | 2333 | 38.21 | 91 | 1.66 | 386 | 9.33 | 247 | 3.06 | 3542 | 59.99 | *1936* | *51.01* |
| ***உப மொத்தம்*** | | | ***355.32*** | ***275.7*** | ***11842*** | ***122.01*** | ***9767*** | ***140.47*** | ***1409*** | ***20.08*** | ***4809*** | ***99.00*** | ***1202*** | ***22.99*** | ***29029*** | ***404.55*** | ***15318*** | ***234.24*** |
| இல. *06* | *வவுனியா* | | *5.00* | *25.0* | 50 | 1.43 | 75 | 2.54 | 1 | 0.01 | 29 | 1.01 | | | 155 | 4.99 | 155 | 4.99 |
| | *யாழ்ப்பாணம்* | | *5.00* | | 55 | 1.44 | 88 | 1.46 | 29 | 0.81 | 33 | 0.74 | 14 | 0.53 | 219 | 4.98 | 219 | 4.99 |
| | *மன்னார்* | | *5.00* | | 5 | 0.12 | 643 | 4.41 | 1 | 0.02 | 15 | 0.42 | | | 664 | 4.97 | 664 | 4.98 |
| | *முல்லைத்தீவு* | | *5.00* | | 200 | 2.00 | 136 | 3.00 | | | | | | | 336 | 5.00 | 336 | 4.99 |
| | *கிளிநொச்சி* | | *5.00* | | | | 45 | 2.50 | 50 | 2.50 | | | | | 95 | 5.00 | 95 | 5.00 |
| ***உப மொத்தம்*** | | | ***25.00*** | ***25.0*** | ***310*** | ***4.99*** | ***987*** | ***13.91*** | ***81*** | ***3.34*** | ***77*** | ***2.17*** | ***14*** | ***0.53*** | ***1469*** | ***24.94*** | ***1469*** | ***24.95*** |
| ***முழு மொத்தம்*** | | | **2692.32** | **1820.2** | **47668** | **636.28** | **31080** | **624.48** | **8022** | **165.30** | **73922** | **1417.36** | **6731** | **119.47** | **167423** | **2962.89** | **94797** | **1715.82** |

# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

## வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டம் 2014

***2014.12.31ம் திகதியில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (வலய மற்றும் மாவட்ட ரீதியில்)***

| வலயம் | மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | அனுப்பிய நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | விடுவித்த கட்டுநிதி (ரூ.மில்) | உத்தேச மொத்த கருத்திட்டங்கள் | | முடிவுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | அனுப்பியுள்ள கட்டுநிதிக்கு ஏற்ற செலவு வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | *எண்ணிக்கை* | *தொகை (ரூ.மில்)* | | | |
| இல.01 | கொழும்பு | 300.00 | 255.00 | 377.1 | 6992 | 270.95 | 2979 | 87.6 | 100.26% |
| | களுத்துறை | 160.00 | 136.00 | | 3914 | 101.84 | 6134 | 77.13 | |
| | இரத்தினபுரி | 180.00 | 153.00 | | 6107 | 151.97 | 3472 | 71.53 | |
| | காலி | 200.00 | 170.00 | | 13687 | 178.97 | 7018 | 84.62 | |
| | மாத்தறை | 140.00 | 119.00 | | 7282 | 124.7 | 3370 | 57.21 | |
| ***உப மொத்தம்*** | | | ***833.00*** | ***377.10*** | ***37982*** | ***828.43*** | ***22973*** | ***378.09*** | **100.26%** |
| இல.02 | கம்பஹா | 260.00 | 221.00 | 437.0 | 9867 | 257.13 | 4566 | 116.68 | 93.56% |
| | குருணாகல் | 280.00 | 238.00 | | 12759 | 280.5 | 5466 | 135.44 | |
| | புத்தளம் | 120.00 | 102.00 | | 5604 | 119.35 | 3227 | 60.17 | |
| | கேகாலை | 180.00 | 153.00 | | 9223 | 178.83 | 6097 | 96.59 | |
| ***உப மொத்தம்*** | | | ***714.00*** | ***437.04*** | ***37453*** | ***835.81*** | ***19356*** | ***408.88*** | 93.56% |
| இல.03 | கண்டி | 260.00 | 221.00 | 496.30 | 9706 | 260.00 | 8243 | 206.56 | 98.75% |
| | மாத்தளை | 80.00 | 68.00 | | 3397 | 79.28 | 3397 | 78.28 | |
| | நுவரெலியா | 100.00 | 85.00 | | 2913 | 77.37 | 2420 | 52.06 | |
| | பதுளை | 180.00 | 153.00 | | 8689 | 175.24 | 8421 | 153.18 | |
| ***உப மொத்தம்*** | | | ***527.00*** | ***496.30*** | ***24705*** | ***591.89*** | ***22481*** | ***490.08*** | 98.75% |
| இல.04 | அம்பாந்தோட்டை | 100.00 | 85.00 | 209.40 | 4047 | 99.30 | 2899 | 64.20 | 85.76% |
| | மோனராகலை | 80.00 | 68.00 | | 23863 | 68.00 | 5829 | 39.46 | |
| | அம்பாறை | 100.00 | 85.00 | | 5510 | 99.50 | 4472 | 75.92 | |
| ***உப மொத்தம்*** | | | ***238.00*** | ***209.40*** | ***33420*** | ***266.80*** | ***13200*** | ***179.58*** | 85.76% |
| இல.05 | அனுராதபுரம் | 140.00 | 119.00 | 275.7 | 10340 | 138.71 | 5369 | 76.50 | 84.95% |
| | பொலன்னறுவை | 116.20 | 104.20 | | 7419 | 92.08 | 6409 | 73.41 | |
| | திருகோணமலை | 110.68 | 81.12 | | 7728 | 113.77 | 1604 | 33.32 | |
| | மட்டக்களப்பு | 60.00 | 51.00 | | 3542 | 59.99 | *1936* | *51.01* | |
| ***உப மொத்தம்*** | | | ***355.32*** | ***275.74*** | ***29029*** | ***404.55*** | ***15318*** | ***234.24*** | 84.95% |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல.*06* | *வவுனியா* | | *5.00* | 25.00 | 155 | 4.99 | 155 | 4.99 | 99.80% |
| | *யாழ்ப்பாணம்* | | *5.00* | | 219 | 4.98 | 219 | 4.99 | |
| | *மன்னார்* | | *5.00* | | 664 | 4.97 | 664 | 4.98 | |
| | *முல்லைத்தீவு* | | *5.00* | | 336 | 5.00 | 336 | 4.99 | |
| | *கிளிநொச்சி* | | *5.00* | | 95 | 5.00 | 95 | 5.00 | |
| ***உப மொத்தம்*** | | | ***25.00*** | ***25.00*** | ***1469*** | ***24.94*** | ***1469*** | ***24.95*** | 99.80% |
| ***முழு மொத்தம்*** | | | **2692.32** | **1820.58** | **164058** | **2952.42** | **94797** | **1715.82** | **94.25%** |

** வலயம் 02 மற்றும் வலயம் 03இற்கு அனுப்பிய மேற்படி கட்டுநிதியிலிருந்து புத்தளம் ஓட்டு வேலைத் திட்டத்திற்கு ரூ.மில்.30உம் அம்பாந்தோட்டை வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கு ரூ.மில்.24.95உம் செலவிடப்பட்டுள்ளது.*

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

### **வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டம் 2014**

***2014.12.31ம் திகதியில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (மாவட்ட மற்றும் பிரிவு ரீதியில்)***

| வலயம் | மாவட்டம் | ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | அனுப்பிய நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | விடுவித்த கட்டுநிதி (ரூ.மில்) | முடிவுக் கருத்திட்டம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விவசாயக் கருத்திட்டம் | | கால்நடை வளக் கருத்திட்டம் | | மீன்பிடிக் கருத்திட்டம் | | கைத்தொழில் கருத்திட்டம் | | சந்தைப்படுத்தல் கருத்திட்டம் | | மொத்தம் | |
| | | | | | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| இல.01 | கொழும்பு | 300.00 | 255.00 | 377.1 | 300 | 5.57 | 278 | 6.22 | 29 | 1.62 | 2061 | 67.58 | 311 | 6.61 | 2979 | 87.60 |
| | களுத்துறை | 160.00 | 136.00 | | 2753 | 18.15 | 238 | 4.83 | 33 | 1.05 | 2475 | 42.61 | 635 | 10.49 | 6134 | 77.13 |
| | இரத்தினபுரி | 180.00 | 153.00 | | 1281 | 17.61 | 118 | 2.49 | | | 1520 | 42.11 | 553 | 9.32 | 3472 | 71.53 |
| | காலி | 200.00 | 170.00 | | 3288 | 27.01 | 655 | 5.49 | 54 | 0.78 | 1944 | 35.79 | 1077 | 15.55 | 7018 | 84.62 |
| | மாத்தறை | 140.00 | 119.00 | | 801 | 11.26 | 101 | 1.89 | 501 | 3.01 | 1412 | 32.01 | 555 | 9.04 | 3370 | 57.21 |
| ***உப மொத்தம்*** | | | ***833.00*** | ***377.10*** | ***8423*** | ***79.60*** | ***1390*** | ***20.92*** | ***617*** | ***6.46*** | ***9412*** | ***220.10*** | ***3131*** | ***51.01*** | ***22973*** | ***378.09*** |
| இல.02 | கம்பஹா | 260.00 | 221.00 | 437.0 | 246 | 4.91 | 418 | 10.38 | 64 | 2.93 | 3171 | 86.06 | 667 | 12.4 | 4566 | 116.68 |
| | குருணாகல் | 280.00 | 238.00 | | 1546 | 26.12 | 1453 | 43.12 | 6 | 0.17 | 2028 | 57.72 | 433 | 8.31 | 5466 | 135.44 |
| | புத்தளம் | 120.00 | 102.00 | | 562 | 9.02 | 1424 | 21.38 | 287 | 6.78 | 722 | 18.38 | 232 | 4.61 | 3227 | 60.17 |
| | கேகாலை | 180.00 | 153.00 | | 2017 | 27.76 | 1596 | 10.85 | 4 | 0.12 | 2268 | 53.23 | 212 | 4.63 | 6097 | 96.59 |
| ***உப மொத்தம்*** | | | ***714.00*** | ***437.04*** | ***4371*** | ***67.81*** | ***4891*** | ***85.73*** | ***361*** | ***10.00*** | ***8189*** | ***215.39*** | ***1544*** | ***29.95*** | ***19356*** | ***408.88*** |
| இல.03 | கண்டி | 260.00 | 221.00 | 496.30 | 2203 | 31.81 | 1922 | 51.31 | 8 | 0.24 | 3372 | 110.42 | 738 | 12.78 | 8243 | 206.56 |
| | மாத்தளை | 80.00 | 68.00 | | 1061 | 13.76 | 592 | 17.29 | 2 | 0.04 | 1742 | 47.19 | | | 3397 | 78.28 |
| | நுவரெலியா | 100.00 | 85.00 | | 662 | 7.55 | 1041 | 28.09 | 8 | 1.66 | 566 | 12.52 | 143 | 2.24 | 2420 | 52.06 |
| | பதுளை | 180.00 | 153.00 | | 5136 | 66.70 | 1719 | 41.05 | 51 | 0.40 | 1193 | 41.10 | 322 | 3.93 | 8421 | 153.18 |
| ***உப மொத்தம்*** | | | ***527.00*** | ***496.30*** | ***9062*** | ***119.82*** | ***5274*** | ***137.74*** | ***69*** | ***2.34*** | ***6873*** | ***211.23*** | ***1203*** | ***18.95*** | ***22481*** | ***490.08*** |
| இல.04 | அம்பாந்தோட்டை | 100.00 | 85.00 | 209.00 | 1139 | 18.4 | 43 | 2.03 | 45 | 1.16 | 1477 | 41.09 | 195 | 1.52 | *2899* | *64.20* |
| | மோனராகலை | 80.00 | 68.00 | | 1949 | 13.96 | 226 | 4.29 | 17 | 0.38 | 667 | 16.79 | 2970 | 4.04 | *5829* | *39.46* |
| | அம்பாறை | 100.00 | 85.00 | | 1471 | 18.02 | 1474 | 23.55 | 156 | 3.66 | 1171 | 27.74 | 200 | 2.95 | *4472* | *75.92* |
| ***உப மொத்தம்*** | | | ***238.00*** | ***209.00*** | ***4559*** | ***50.38*** | ***1743*** | ***29.87*** | ***218*** | ***5.20*** | ***3315*** | ***85.62*** | ***3365*** | ***8.51*** | ***13200*** | ***179.58*** |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல.05 | அனுராதபுரம் | 140.00 | 119.00 | 275.7 | 2527 | 29.06 | 1557 | 24.80 | 73 | 1.58 | 989 | 16.79 | 223 | 4.27 | 5369 | 76.50 |
| | பொலன்னறுவை | 116.20 | 104.20 | | 2197 | 21.85 | 2604 | 20.21 | 69 | 2.00 | 1053 | 25.50 | 486 | 3.85 | 6409 | 73.41 |
| | திருகோணமலை | 110.68 | 81.12 | | 594 | 7.60 | 18 | 0.36 | 208 | 4.08 | 318 | 10.14 | 466 | 11.14 | 1604 | 33.32 |
| | மட்டக்களப்பு | 60.00 | 51.00 | | 481 | 7.61 | 776 | 30.44 | 90 | 1.61 | 358 | 8.4 | 231 | 2.95 | 1936 | 51.01 |
| ***உப மொத்தம்*** | | | ***355.32*** | ***275.74*** | ***5799*** | ***66.12*** | ***4955*** | ***75.81*** | ***440*** | ***9.27*** | ***2718*** | ***60.83*** | ***1406*** | ***22.21*** | ***15318*** | ***234.24*** |
| இல.*06* | *வவுனியா* | | *5.00* | *25.00* | 50 | 1.43 | 75 | 2.54 | 1 | 0.01 | 26 | 0.87 | 3 | 0.14 | 155 | 4.99 |
| | *யாழ்ப்பாணம்* | | *5.00* | | 55 | 1.44 | 88 | 1.46 | 29 | 0.81 | 26 | 0.70 | 21 | 0.58 | 219 | 4.99 |
| | *மன்னார்* | | *5.00* | | 5 | 0.12 | 643 | 4.42 | 1 | 0.02 | 12 | 0.32 | 3 | 0.10 | 664 | 4.98 |
| | *முல்லைத்தீவு* | | *5.00* | | 200 | 2.00 | 136 | 2.99 | | | | | | | 336 | 4.99 |
| | *கிளிநொச்சி* | | *5.00* | | | | 45 | 2.50 | 50 | 2.50 | | | | | 95 | 5.00 |
| ***உப மொத்தம்*** | | | ***25.00*** | ***25.00*** | ***310*** | ***4.99*** | ***987*** | ***13.91*** | ***81*** | ***3.34*** | ***64*** | ***1.89*** | ***27*** | ***0.82*** | ***1469*** | ***24.95*** |
| ***முழு மொத்தம்*** | | | **2692.32** | **1820.18** | **32524** | **388.72** | **19240** | **363.98** | **1786** | **36.61** | **30571** | **795.06** | **10676** | **131.45** | **94797** | **1715.8** |

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2014

***நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் கருத்திட்ட வகைக்கேற்ப 2014.12.31ம் திகதியில்***

| வலயம் | **கருத்திட்ட வகைப்படுத்தல்** | | | | | | | | | | **முழு மொத்தம்** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *விவசாயக் கருத்திட்டம்* | | *கால்நடை வளர்ப்புக் கருத்திட்டம்* | | *மீன்பிடிக் கருத்திட்டம்* | | *கைத்தொழில் கருத்திட்டம்* | | *சந்தைப்படுத்தல் கருத்திட்டம்* | | | |
| | *முடிந்த எண் ணிக்கை க* | *செலவு ரூ.மில்.* | *முடிந்த எண்ணிக் கை* | *செலவு ரூ.மில்.* | *முடிந்த எண்ணிக் கை* | *செலவு ரூ.மில்.* | *முடிந்த எண்ணிக் கை* | *செலவு ரூ.மில்.* | *முடிந்த எண்ணிக் கை* | *செலவு ரூ.மில்.* | *முடிந்த எண்ணிக் கை* | *செலவு ரூ.மில்.* |
| இல. 01 | 8423 | 79.6 | 1390 | 20.92 | 617 | 6.46 | 9412 | 220.1 | 3131 | 51.01 | 22,973 | 378.09 |
| இல. 02 | 4371 | 67.81 | 4891 | 85.73 | 361 | 10 | 8189 | 215.39 | 1544 | 29.95 | 19,356 | 408.88 |
| இல. 03 | 9062 | 119.82 | 5274 | 137.74 | 69 | 2.34 | 6873 | 211.23 | 1203 | 18.95 | 22,481 | 490.08 |
| இல. 04 | 4559 | 50.38 | 1743 | 29.87 | 218 | 5.20 | 3315 | 85.62 | 3365 | 8.51 | 13,200 | 179.58 |
| இல. 05 | 5799 | 66.12 | 4955 | 75.81 | 440 | 9.27 | 2718 | 60.83 | 1406 | 22.21 | 15,318 | 234.24 |
| இல. 06 | 310 | 4.99 | 987 | 13.91 | 81 | 3.34 | 64 | 1.89 | 27 | 0.82 | 1,469 | 24.95 |
| **மொத்தம்** | **32524** | **388.72** | **19240** | **363.98** | **1786** | **36.61** | **30571** | **795.06** | **10676** | **131.45** | **94,797** | **1715.82** |

### 03. சமூக நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு பிரிவின் வினைத்திறன்கள்


குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார நிலை வறுமை நிலைகளின் கீழ் செல்லாத பிரகாரம் நிலைபேராக வைத்துக் கொண்டு அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கு உதவுதல்.

### 3.1 சமுர்த்தி வேலைத்திட்டம்

1995ம் ஆண்டில் சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் செயற்பட்ட பல்வேறு நிவாரண வேலைத்திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோளானது சமூக நலன்புரி மாத்திரமேயாகும்.

இருப்பினும் சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டமானது மூன்று வித அபிவிருத்திப் பிரவேசத்தின் ஊடாக வறுமையினை ஒழிக்கும் குறிக்கோளாகக் கொண்டு அகில இலங்கை ரீதியாகச் செயற்படுத்தப்பட்டது.

**வரைபடம் - 01**




சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டத்தின் முக்கியமான பண்பானது அது நாட்டின் மொத்த அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு அபிவிருத்திப் பக்கமாக செயற்படுகின்றமையாகும். அதன் காரணமாக சமூகத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் ஆகக் குறைந்த வாழ்க்கை மட்டத்தினை பேணிக்கொள்ளும் பொருட்டு ஏதேனும் நிதி உதவிகள் வழங்கப்படுவதுடன் அவர்களது குடும்பங்களின் வருமான நிலையினை விருத்தி செய்துகொண்டு நாட்டின் மொத்த பொருளாதார செயற்பாட்டுக்கு பயனுள்ள விதத்தில் தொடர்புபடுத்திக் கொள்வதும் ஊக்குவிக்கும் திட்ட வழியாகவும் இதனை அழைக்க முடியும்.

1998ம் ஆண்டிலிருந்து சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுப் படிவம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் வரவு செலவுத் திட்டத்திற்கமைய இதுவரை வழங்கிய சமுர்த்தி நிவாரணம் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஊடாக பயனாளிகளுக்கு பணமாக கொடுப்பனவுகளைச் செலுத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

2014ம் ஆண்டிலும் இச் செயற்பாடுகள் அகில இலங்கை முழுவதும் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டது.

**அட்டவணை - 02**

**2014ம் ஆண்டில் நிவாரண வேலைத்திட்டத்திற்குரியவாறு கொடுப்பனவுகள் பிரிந்து சென்ற விதம்**

| நிவாரணத்தின் பெறுமதி ரூபா. | கட்டாய சேமிப்பு ரூபா. | சமூக பாதுகாப்பு ரூபா. | வீடமைப்பு லொத்தர் ரூபா. | பயனாளிக்கு கிடைக்கின்ற தொகை ரூபா. |
|---|---|---|---|---|
| 1500/- | 300/- | 45/- | 10/- | 1145/- |
| 1200/- | 200/- | 45/- | 10/- | 945/- |
| 750/- | 100/- | 45/- | 10/- | 595/- |
| 210/- | 155/- | 45/- | 10/- | - |

### 3.1.1 கட்டாய சேமிப்புக்கள்

சமுர்த்திப் பயனாளிகளை சேமிப்பின் பொருட்டு பழக்கப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பயனாளியும் கட்டாய சேமிப்புக்கு பங்களிப்புச் செய்து கொள்ளப்படுவதுடன் ஏதேனும் ஒரு முதலீட்டுத் தேவைகளில் திடீர் வைத்தியசாலை அனுமதியின் போதும், உயர் கல்வித் தேவையின் போதும் கட்டாய சேமிப்பு பங்களிப்புத் தொகையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 3.1.2 சமூக பாதுகாப்பு

சமுர்த்திப் பயனாளி குடும்பம் ஒன்றில் ஏற்படுகின்ற மரணம் ஒன்றின் போது, திருமணம் ஒன்றின் போது, வைத்தியசாலை அனுமதியின் போது, பிள்ளைப் பேறின் போது குடும்பமானது பொருளாதார ரீதியாக கீழ்மட்டத்திற்கு தாழ்த்தப்படுவதை தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் பொருட்டு ஒவ்வொரு பயனாளியும் பங்களிப்புச் செய்துகொள்ளப்படுகின்றது.

### 3.1.3 வீடமைப்பு லொத்தர்


பயனாளிக் குடும்பங்களின் வீடமைப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பயனாளிகளினதும் பங்களிப்புத் தொகையிலிருந்து கட்டியெழுப்பப்படுகின்ற வீடமைப்பு நிதியம் ஒன்றாகும்.

### 3.1.4 பயனாளிக்குக் கிடைக்கின்ற தொகை

சமுர்த்தி வங்கிகளின் ஊடாக பயனாளிக்கு கைக்குக் கிடைக்கின்ற தொகையிலிருந்து உணவு அல்லது பிற தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு தமக்கு தேவையான எந்தவொரு இடத்திலிமிருந்து பொருட்கள் அல்லது தேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் - 02**

**சமுர்த்தி நிதி ஒதுக்கீடு சமுர்த்திப் பயனாளியின் கையில் கிடைக்கச் செய்யும் செயற்பாடுகள்**




**அட்டவணை – 03**

**சமுர்த்தி நிவாரண பயனாளிகளின் எண்ணிக்கை (2009 – 2014)**

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2009 | 1,600,786 |
| 2010 | 1,572,129 |
| 2011 | 1,541,318 |
| 2012 | 1,516,543 |
| 2013 | 1,477,173 |
| 2014 | 1,479,811 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 01**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

கடந்த வருடங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துள்ளது.

**அட்டவணை – 04**


**கடந்த ஆறு வருடங்களில் நிவாரண வேலைத்திட்டத்தின் போக்கு (2009 – 2014)**

| ஆண்டு | செலவு - ரூபா. |
|---|---|
| 2009 | 9,274.10 |
| 2010 | 9,239,509,541.96 |
| 2011 | 9,043,442,154.63 |
| 2012 | 10,553,188,655.62 |
| 2013 | 15,255,979,958.73 |
| 2014 | 15,041,799,341.62 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 02**

**2009ம் ஆண்டிலிருந்து 2014ம் ஆண்டு வரை நிவாரண வேலைத்திட்டத்தின் செலவுகளை வரைபட ரீதியாகக் காட்டுதல்**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

அட்டவணை – 03

## சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு மாவட்ட மட்டத்தில் வழங்கிய விதம்

| மாவட்டம் | ரூ.210/- | ரூ.750/- | ரூ.1200/- | ரூ.1500/- | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1,787 | 48,650 | 0 | 237 | 50,654 |
| கம்பஹா | 7,731 | 106,481 | 4,273 | 315 | 118,800 |
| களுத்துறை | 6,241 | 46,033 | 11,748 | 115 | 64,137 |
| கண்டி | 7,944 | 61041 | 21002 | 114 | 90,101 |
| மாத்தளை | 3,330 | 35,743 | 3,466 | 194 | 42,733 |
| நுவரெலியா | 8,124 | 24,946 | 6,617 | 15 | 39,702 |
| காலி | 8,250 | 55,284 | 9,126 | 53 | 72,713 |
| மாத்தறை | 4,982 | 50,076 | 12,799 | 32 | 67,889 |
| அம்பாந்தோட்டை | 6,830 | 26,812 | 21,520 | 5 | 55,167 |
| யாழ்ப்பாணம் | 0 | 38,873 | 10,374 | 4,660 | 53,907 |
| மன்னார் | 0 | 2,636 | 7,875 | 2,655 | 13,166 |
| வவுனியா | 2,805 | 8,234 | 846 | 102 | 11,987 |
| முல்லைத்தீவு | 44 | 2,088 | 7,198 | 1,714 | 11,044 |
| கிளிநொச்சி | 0 | 3,109 | 6,059 | 2,565 | 11,733 |
| மட்டக்களப்பு | 17,296 | 62,143 | 84 | 2 | 79,525 |
| அம்பாறை | 14,324 | 57,720 | 2,858 | 108 | 75,010 |
| திருகோணமலை | 8,175 | 28,385 | 2,208 | 600 | 39,368 |
| குருணாகல் | 9,338 | 120,091 | 20,030 | 485 | 149,944 |
| புத்தளம் | 1,752 | 38,034 | 15,671 | 15 | 55,462 |
| அனுராதபுரம் | 5,671 | 48,124 | 8,743 | 474 | 63,012 |
| பொலனறுவை | 4,484 | 21,742 | 3,235 | 112 | 29,573 |
| பதுளை | 6,419 | 27,553 | 22,956 | 45 | 56,973 |
| மொனராகலை | 7,397 | 30,445 | 9,209 | 96 | 47,147 |
| இரத்தினபுரி | 12,311 | 56,983 | 42,419 | 143 | 111,856 |
| கேகாலை | 8,881 | 37,866 | 21,428 | 33 | 68,208 |
| **மொத்தம்** | **154096** | **1039092** | **271,734** | **14,889** | **1,479,811** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 3.1.5 போசனை வேலைத்திட்டம்

#### 3.1.5.1 ஆரம்பமும் நடவடிக்கைகளும்

சமுர்த்திப் பயனாளி குடும்பங்களில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் போசனை நிலையினை உயர்த்தும் நோக்கில் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் போசனை வேலைத்திட்டத்தினை ஆரம்பித்தது. இந்த வேலைத்திட்டமானது சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பிரதான நிவாரண வேலைத்திட்டங்களில் ஒன்றாகும். இந்த வேலைத்திட்டத்தின் நடவடிக்கைகள் கீழுள்ளவாறாகும்.

- 1992ம் ஆண்டில் கைக்குழந்தை பால்மா நிவாரண வேலைத்திட்டம் என்ற பெயரில் ஆரம்பமான இந்த வேலைத்திட்டத்தின் மூலம் வறிய குடும்பங்களில் புதிதாகப் பிறக்கின்ற குழந்தைகளின் போசனை நிலையினை உயர்த்தும் பொருட்டு மாதம் ஒன்றுக்கு ரூபா.50/- வீதமான பால்மா முத்திரைப் படிவம் ஒன்றினை பிள்ளைகளுக்கு இரண்டு வயது பூர்த்தியாகும் வரை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது இரண்டு பால் பக்கெற்றுக்களை கொள்வனவு செய்யும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.
- கைக்குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த வேலைத்திட்டத்தினை தாய்மார்களின் போசனையினை அடிப்படையாகக் கொண்டு விசேட உணவு முத்திரை வேலைத்திட்டம் என்ற பெயரில் 1994ம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1994ம் ஆண்டு வறிய குடும்பங்களில் புதிதாக பிள்ளைப்பேறு நடந்த தாய் ஒருவருக்கு பிள்ளை பிறந்த மாதத்திலிருந்து தொடர்ந்து 12 மாதங்கள் வரையிலான காலம் வரை விசேட உணவு முத்திரைப் படிவம் ஒன்று வழங்கப்பட்டதுடன் கூட்டுறவுக் கடைகளிலிருந்து பயனாளிக்குத் தேவையான உணவு வகைகளை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா.100/- இற்கான மாதாந்த கொடுப்பனவு ஒன்று கிடைத்தது.
- 1995ம் ஆண்டின் வறுமை நிவாரண உணவு முத்திரை வேலைத்திட்டத்தினை முடிவுறுத்தி சமுர்த்தி வேலைத்திட்டம் ஆரம்பமாகினாலும் இந்த போசனை வேலைத்திட்டமானது சமுாத்திப் பயனாளிக் குடும்பங்களை சார்ந்ததாக தொடர்ந்தும் செயற்பட்டது.
- 2000ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து சிறுவர் மற்றும் தாய்மார் போசாக்கினை உயர்த்தும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவினைப் பெறுகின்ற பயனாளி ஒருவர் தற்போது வழங்கப்படும் ரூபா 100/=இற்கான மாதாந்த கொடுப்பனவினை ரூபா 150/= வரை உயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்து செயற்படுத்தியுள்ளது.
- அத்துடன் அவ்வாண்டில் பெருந்தோட்டங்களில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அங்கத்தவர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது மிகக் குறைந்த வகையிலாகும் என்பதனால் இந்த நிலையினை மாற்றி இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை உரிய பிரகாரம் பெருந்தோட்டங்களில் வதியும் குடும்பங்களும் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.1.5.2 போசனை வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை

மகிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் நிவாரண வேலைத்திட்டத்தினை சிறந்ததாக ஆக்கி முழு இலங்கையும் உள்ளடங்குகின்ற பிரகாரம் 330 பிரதேச செயலகப் பிரிவுகள் பூராகவும் இந்த வேலைத்திட்டம் பரவலாக்கப்பட்டது.

அதற்கமைய கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 500/= பெறுமதியினையுடைய 20 முத்திரைகளைக் கொண்ட முத்திரைப் படிவம் ஒன்று வழங்கப்படுவதுடன் அதில் 08 முத்திரைகள் மகப்பேற்றுக்கு முன்னரான காலத்திற்கும் எஞ்சிய 12 முத்திரைகளும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.


அதன் மூலம் வழங்கப்படுகின்ற உணவு வகைகள்

- ❖ வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி/ சம்பா/ நாட்டரிசி – 5Kg
- ❖ கடலை/ கௌபி/ பயறு/ லங்கா பருப்பு/ மைசூர் பருப்பு – 500g
- ❖ முட்டை/ நெத்தலிக் கருவாடு/ கருவாடு/ ரின் மீன்
  (08 முட்டைகள் அல்லது அப் பெறுமதிக்குப் பொருத்தமான நெத்தலி கருவாடு அல்லது கருவாடு)

இப்போசனைப் பொதிக்குரிய பொருட்கள் வழங்கப்படுவது கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் ஊடாகவேயாகும்.

### 3.4.3 போசனைப் பொதி பயனாளிகளிடம் கிடைக்கும் செயற்பாடுகள்

**வரைபடம் - 03**



### 3.5 சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம்

சமூக பாதுகாப்பு நிதிய நம்பிக்கைச் சபை மூலம் நிர்வகிக்கப்படுவதுடன் அது 1997 ஜனவரி 01ம் திகதியின் நம்பிக்கை உறுதி ஒன்றின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபை சமுர்த்தி விடயப் பொறுப்பு அமைச்சரால் பெயரிடப்படுகின்ற அங்கத்தவர்களாலும் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர் நான்கு பேரையும் கொண்டதாகும் என்பதுடன் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக அதன் தலைவராவார்.

சமூக பாதுகாப்பு வேலைத்திட்டமானது சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் சமூக பாதுகாப்பினையும் காப்புறுதியினையும் உறுதிப்படுத்துகின்ற சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு சுய பலத்துடன் சுபீட்சத்தை நோக்கி நகர உதவக்கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அந்த குறிக்கோள்களை முன்வைத்து பயனாளிகளின் குடும்ப அங்கத்தவர்கள் வாழ்க்கை பயணத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு தடைகளின் போது சமூக மற்றும் பொருளாதார நிலமைகள் மேலும் கீழே விழுவதற்குரிய வாய்ப்புக்களை அகற்றும் நோக்கிலாகும்.

- ❖ பயனாளிகளின் குடும்பம் ஒன்றில் ஏற்படுகின்ற முதலாவது மற்றும் இரண்டாவது குழந்தைப் பிரசவங்களுக்கு ரூபா. 5000/-மும்
- ❖ பயனாளியின் அல்லது பிள்ளை ஒருவரின் திருமணத்திற்கு ரூபா. 3000/-மும்
- ❖ பயனாளி அல்லது வாழ்க்கைத்துணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நாள் ஒன்றுக்கு ரூபா.200/- வீதம் வருடம் ஒன்றில் ஆகக் கூடியது 30 நாட்களுக்கு 6000/- என நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக சிப்தொர வேலைத்திட்டத்தின் மூலம் வறுமை நிலை எல்லையின் பிரகாரம் பொறுப்பு வகிக்கும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு நாடுபூராகவும் பரந்துள்ள சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களில் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் சிறந்த வகையில் தேறிய மாணவச் சிறார்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா. 1000/- வீதம் இரண்டு வருட கற்கைக் காலத்தின் பொருட்டான புலமைப் பரிசிலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. சமூக அபிவிருத்திப் பிரிவின் வினைத்திறன்கள்

| |
|---|
| சமூக அபிவிருத்தி என்பது சமூகத்திலுள்ள சகல பிரிவுகளினதும் அபிவிருத்தியாகும். மொத்த சமூகத்திலும் ஆத்மீக அபிவிருத்தியினால் பூரணமடைந்த சூழல் ஒன்றினை உருவாக்குவது அதன் அடிப்படைக் குறிக்கோளாகும். |

2014ம் ஆண்டிற்குள் சமூக அபிவிருத்தியின் பொருட்டு இப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ வசதி வாய்ப்புக்களற்ற சமூகப் பிரிவினருக்கும் சமூக ரீதியான பெறுமதி ஒன்றினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
❖ வறுமை நிலைக்கு காரணமான சமூக காரணிகளை இனங்கண்டு தீர்வுகளைக் காணுதல்.
❖ குறைந்த வருமானம் பெறுவோரினதும் அவர்களது குடும்பத்தின் பிள்ளைகளது சமூக மற்றும் கலாசார விழுமியங்களை மேம்படுத்ததுவதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
❖ ஆத்மீக மற்றும் நற்பண்பு விழுமியத்தினையுடைய குடும்பம் ஒன்றினை உருவாக்குதல்.

### 4.1 நிகழ்கால பணிகள்

2014ம் ஆண்டில் வாழ்வின் எழுச்சி தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக செயற்படும் ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்படி நிதியினைப் பயன்படுத்தி நாடு முழுவதும் செயற்படுத்துவதனை சமூக அபிவிருத்தி பிரிவு திட்டமிடுகின்றது. இதற்கு மேலதிகமாக சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியினைப் பயன்படுத்தி இவ்வாண்டின் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் இலக்குகளைப் பூர்த்தி செய்துள்ளது.

### 4.2 போதை மற்றும் புகைத்தல் தடுப்பு வேலைத்திட்டம்

❖ குறைந்த வருமானம் பெறுவோரின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய சவாலாகவுள்ள போதை மற்றும் புகைத்தல் பாவனையினால் ஏற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக அழிவுகள் தொடர்பில் விளக்கமளித்து போதையற்ற நல்லொழுக்கமுள்ள கிராமம் ஒன்றினை தாபிப்பது அடிப்படைக் குறிக்கோளாகும்.
❖ கடந்த ஆண்டில் தேசிய மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டமானது நடப்பாண்டில் மேலும் மேம்படுத்தி செயற்படுத்தப்பட்டதுடன் பிரதேச ரீதியாக இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களும் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்பட்டது.
❖ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கேற்புடன் விசேட போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்கள் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமசேவகர் பிரிவு மட்டத்திலும் செயற்படுத்தப்பட்டது.
❖ இதற்கு மேலதிகமாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை சட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு மக்களிடமிருந்து வற்புறுத்தல்களை ஏற்படுத்துதல், புகைத்தல் பாவனை மற்றும் பிரச்சாரம் விற்பனையினை அதைரியப்படுத்துவதற்கு மற்றும் கடைச் சொந்தக்காரர்களை சட்டத்தின் கொள்கைகள் தொடர்பில் விழிப்பூட்டுவது இவ்வாண்டில் மேற்கொண்ட செயற்பாடுகளில் முன்னணி வகிக்கின்றது.

#### 4.2.1 சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் - மே 31

வறுமை நிலைக்கு தாக்குச் செலுத்தும் காரணிகளிடத்தேயே போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் பாவனை பிரதான இடத்தினை வகிக்கின்றது. ஆகையினால் ஒவ்வொருவரும் மே 31ம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை தலைப்பாகக் கொண்டு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக புகைத்தலுக்கு செலவிடும் நிதியினை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் பொருட்டு நாடு முழுவதும் கொடி விற்பனை

வேலைத்திட்டத்தினையும் செயற்படுத்தி அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதியினை பிரதேச மட்டத்தில் சமூக அபிவிருத்தி மன்றங்களில் வைப்பிடப்படுகின்றது.

"தேசத்தினை பொழிவூட்டுவோம், போதையற்ற வாழ்வினைக் கட்டியெழுப்புவோம்" என்பதனை தலைப்பாகக் கொண்டு அச்சிடப்பட்ட கொடிகள் நாடு பூராகவும் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் பொருட்டு செலவானது ரூபா மில்லியன் 3.49 ஆகும். அதன் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வருமானமானது ரூபா மில்லியன் 90.0 ஆகும். அத் தொகையினைப் பிரயோகித்து போதை தடுப்பு வேலைத்திட்டங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் தற்கொலை முயற்சிகளைத் தடுக்கும் வேலைத்திட்டங்கள், குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகளை அமைத்தல், திருத்துதல், கழிப்பறை வசதிகளை வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வேலைத்திட்டங்களை பிரதேச அபிவிருத்தி மற்றும் பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் என்பன செயற்படுத்தப்படுகின்றது.

### 4.3 வருடாந்த கொடி வருமானம் (2007-2014)

**அட்டவணை – 06**

| ஆண்டு | கொடி வருமானம் (ரூ. மில்லியன்) |
|---|---|
| 2007 | 51.9 |
| 2008 | 68.1 |
| 2009 | 83.2 |
| 2010 | 79.3 |
| 2011 | 86.3 |
| 2012 | 123.5 |
| 2013 | 124.7 |
| 2014 | 90.0 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 4.3 சமூக அபிவிருத்தி மன்றம்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி தினத்தில் ஈட்டிய கொடி வருமானத்தினை வைப்புச் செய்து சகல பிரதேச மட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தில் நிதியம் ஒன்று உள்ளது. இந்த நிதியத்தின் நிதியினைப் பயன்படுத்திக் கொண்டு அப்பிரதேச செயலகப் பிரிவில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. அதற்கமைய 2014ம் ஆண்டில் சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்து நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.



அட்டவணை – 07

**சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியங்களிலிருந்து செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்**

| செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | தொகைரூபா. |
|---|---|---|
| போதைத்தடுப்பு வேலைத்திட்டம் | 1833 | 5,736,410.00 |
| சிறுவர் பாதுகாப்பு வேலைத்திட்டம் | 2775 | 12,897,936.00 |
| சிசுதிரிய புலமைப்பரிசுகள் | 2532 | 9,418,249.00 |
| பாடசாலை செல்லாத பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்தல் | 1309 | 2,590,120.00 |
| சர்வதேச ஞாபகார்த்த தின வேலைத்திட்டங்கள் | 1141 | 6,481,697.00 |
| மாற்றுத் திறனாளிகள் வேலைத்திட்டம் | 918 | 4,576,668.00 |
| கலாசார மற்றும் ஆத்மீக அபிவிருத்தி வேலைத்திட்டம் | 3313 | 7,227,861.00 |
| வீடுகளைத் திருத்துதல் | 1003 | 14,990,408.00 |
| வீடுகளை நிர்மாணித்தல் | 357 | 17,350,723.00 |
| துப்பரவேற்பாட்டு வேலைத்திட்டங்கள் | 1804 | 25,575,754.00 |
| பிற வேலைத்திட்டங்கள் | 1870 | 11,415,925.00 |
| மொத்தம் | **18855** | **107,715,533.00** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 4.3.1 சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறையான வேலைத்திட்டம் ஒன்றினை கிராமத்தில் செயற்படுத்துதல்.

- ஒவ்வொரு கிராமத்திலும் செயற்பாடுள்ள சிறுவர் கழகம் ஒன்றினை ஆரம்பித்தல் மற்றும் அச் சிறுவர் கழகங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் சிறுவர் கழக பிள்ளைகளின் பொருட்டு அரசியல் நிகழ்ச்சிகள், கலை கலாசார போட்டிகள் மற்றும் விடய அறிக்கைக்குரிய கேள்விகளை விவரண ரீதியான வேலைத்திட்டங்களை நடாத்துதல், இரசனை விருந்து வேலைத்திட்டங்கள், தொழில் வழிகாட்டல்கள், கலாசார நிறவனங்களின் பால் சிறுவர்களை அணுகச் செய்வதற்கு நாடு தழுவிய ரீதியில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

### 4.3.2 சேமிப்புக்கள் மற்றும் சிக்கனத்தின் பொருட்டு பிள்ளைகளைப் பழக்கப்படுத்துதல் (சிசுரக்க/ கெக்குலு கணக்கு)

படைப்பாக்க ரீதியான திறமைகளையுடைய எதிர்காலத்தினை பொறுப்பேற்கவுள்ள சிறுவர்களின் உலகத்தினை மெருகூட்டுவதற்கும் அவர்களது திறமைகளை விருத்தி செய்து உடல், உள மற்றும் ஆத்மீக அபிவிருத்தி ஒன்றினை ஏற்படுத்தி எதிர்காலத்திற்கான இன்றைய சிறுவர் சமுதாயத்தினை அணிதிரட்டுவது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது செயற்பாட்டு ரீதியான 14000 சிறுவர் கழகங்கள் செயற்படுவதுடன் 03 இலட்சத்துக்கு அண்மிய சிறார்கள் அங்கத்துவத்தினை பெற்றுள்ளனர்.

**சிறுவர் கழக சிறார்களின் கலாசார மற்றும் இலக்கிய ரீதியான ஆற்றல்களை மெருகூட்டுதல்.**



இம்முறையும் சிறுவர் கழக சிறார்களின் கலாசார மற்றும் இலக்கிய ரீதியான ஆற்றல்களை மெருகூட்டுதல் மற்றும் அந்த ஆற்றல்களை தேசிய மட்டத்தில் கொண்டுவரும் பொருட்டு வலய, பிரதேச, மாவட்ட போட்டிகள் அந்தந்த மாவடங்களில் நடாத்தப்பட்டது. இதன் பொருட்டு அந்த மாவட்டங்களில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான சிறுவர் கழக சிறார்கள் 15 பேர் படி மூன்று வயதுத் தொகுதிகளிலிருந்து போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யப்பட்டது.

25 மாவட்டங்களிலிருந்தும் சிறுவர் கழக போட்டிகளின் பொருட்டு ரூபா மில்லியன் 2.931ஐ செலவு செய்ததுடன் தேசிய போட்டிகள் 2015ம் ஆண்டில் நடாத்தப்படவுள்ளது.



**4.4 ‘‘செழிப்பான இல்லம்’’ (இசுறுமத் நிவாசக்) வீடமைப்பு வேலைத்திட்டம்.**

‘‘செழிப்பான இல்லம்’’என்பதனைத் தலைப்பாகக் கொண்டு வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளின் வீடுகளில் மேற்கொள்ள வேண்டிய பிரிவுகளைதிருத்தஞ் செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு குறைந்த வருமானம் பெறும் வீட்டுப்பயனாளிகளுக்கு அவர்களின் வீட்டினை திருத்தஞ் செய்வதற்கு (கூரைத் தகடு வழங்குதல்/ சுவர் கட்டுதல்/ சீமெந்து பூசுதல்/ வீட்டு நிலத்தினை பண்படுத்துதல்) உயர்ந்த பட்சமானது ரூபா 10,000/= உட்பட்டதாக 04 கட்டங்களின் கீழ் இந்த நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் முதலாவது கட்டத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு ரூபா 2500/=ற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

பயனாளிகள் - 1192111

தொகை - ரூபா மில்லியன் 2993.00

### 4.5 வெளிநாட்டு வீரர் வீடமைப்பு வேலைத்திட்டம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு/ வெளிவிவகார மேம்பாடு மற்றும் நலனோம்புகை அமைச்சும் ஒன்றிணைந்து இலங்கை சமுர்த்தி அதிகார சபை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகங்களின் நெறிப்படுத்தலின் கீழ் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

கடனை வழங்கும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களின் எண்ணிக்கை – 25001

கடன் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை – 8171

வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை – 5899



விசேடமாக இலங்கைக்கு வெளிநாட்டு செலவாணியை உழைத்து தரும் கடல்கடந்த ஊழியர்களின் வீட்டுக் கனவை நனவாக்கும் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகார சபை நாடு பூராகவும் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி வலையமைப்பின் ஊடாக இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

ஒரு பயனாளிக்கு ரூபா 300,000/-த்திற்கான கடன் தொகையினை 10% வட்டியின் கீழ் வழங்கி அந்த கடல் கடந்த ஊழியர்களின் பிள்ளைகளது பாதுகாப்பு மற்றும் நலன்களின் பொருட்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## 05. சமுதாய அடிப்படைப் பிரிவின் வினைத்திறன்கள்

| |
|---|
| மனித மற்றும் பௌதீக வளங்களை பலப்படுத்தும் தனிநபர், குடும்ப மற்றும் சமூகத்தில் சமூக ரீதியான மற்றும் பொருளாதார நிலைகளைக் கட்டியெழுப்புவதற்கு அறிவு, உளப்பாங்கு மற்றும் திறமைகளை விருத்தி செய்து சமுதாய அடிப்படை அமைப்புக்களை பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்டக் குழுக்கள் ஊடாக மக்களை வலுவூட்டுதல். |

## 5.1 மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களையும் பயனாளிகளையும் விளக்கமளிக்கும் வேலைத்திட்டம்.

தென்னாசிய வலயத்தின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வறுமை நிலையினை ஒழிக்கும் பொருட்டு பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஆசிய வலயத்தின் நாடுகளுடன் ஒப்பிடும் போது நலன்புரி வேலைத்திட்டம் ஒன்று செயற்படுகின்றது என்ற வகையில் இலங்கை முன்னனியில் இருக்கின்றது.

கடந்த காலத்தில் இலங்கையில் அதிகமான நலன்புரி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருப்பது நலன்புரி அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டாகும். அவ்வாறு இருந்தும் இதன் மூன்று தசாப்தங்களுக்கு முன்னைய காலத்திலிருந்து அந்த வேலைத்திட்டங்கள் சமூக வலுவூட்டல்கள் மற்றும் பங்கேற்பு அபிவிருத்திப் பிரவேசங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை அண்மித்தது. இந்த முறையினை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களே மிக வெற்றிகரமாக அமைந்திருந்தது.

இதன் பெறுபேறு ஒன்றாக அபிவிருத்திப் பாய்ச்சல்கள் தவறிய வறிய மக்கள் தேசிய அபிவிருத்தியின் உண்மையான பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. மொத்த மக்களையும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு நேரடியாக பங்களிப்புச் செய்து கொண்ட விசேட சந்தர்ப்பங்களாக வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தினை சுட்டிக்காட்ட முடியும்.

இந்த வேலைத்திட்டத்துடன் தொடர்புள்ள மக்கள் பொருளாதார, சமூக மற்றும் ஆத்மீக ரீதியாக வலுவூட்டும் பொருட்டு பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையினை நேரடியாக ஈடுபடுத்திக்கொண்டமை தெளிவாகக் காணக்கூடிய ஒரு பண்பாகும். அதன் ஊடாக மொத்த பொருளாதார அபிவிருத்திக்கு வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்திலிருந்து பாரிய பங்களிப்பு ஒன்று வழங்கப்பட்டது.

இந்த நிலையினை மிக நிலையானதாக ஆக்குவதற்கு 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்ட மூலம் வெளியிடப்பட்டது. அச் சட்டத்தில் உள்ளடங்கியிருப்பது மக்களின் நலன்புரிகளை உறுதிப்படுத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டமாக இருப்பது தெட்டத்தெளிவாக காணுகின்ற ஒரு பண்பாகும். ஒவ்வொரு அபிவிருத்தி வேலைத்திட்டமும் மக்களை அடிப்படையாக வைத்துக் கொள்ளவேண்டியதாகும் என இத் திட்டத்தின் 09வது பிரிவின் கீழ் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பது அகில இலங்கையும் உள்ளடங்குகின்ற பிரகாரம் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் அல்லது அவ்வாறான பல பிரிவுகள் உள்ளடங்குகின்ற பிரகாரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்ற சமுதாய அடிப்படை அமைப்புக்கள் வாழ்வின் எழுச்சி பயனாளிகள் மற்றும் சுய விருப்பத்தின் பெயரில் இதன் பொருட்டு பங்களிப்புச் செய்யும் பயனாளிகள் சகலரினதும் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வாழ்வின் எழுச்சி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய சகல அபிவிருத்திப் பணிகளும் சமுதாய அடிப்படை அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மக்களின் முழுப் பங்கேற்புடன் நிறைவேற்றல் வேண்டும். சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஆரம்பிப்பதோடு இணைந்ததாக பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்ட குழுக்களையும் அமைத்து செயற்படுத்திச் செல்லல் வேண்டும்.

இந்த சகல அமைப்புக்களையும் அமைப்பது, முறைமைப்படுத்துவது, நடாத்திச் செல்வது மற்றும் முகாமைத்துவம் செய்வது உட்பட அச் சங்கங்களின் சகல நடவடிக்கைகளையும்

கண்காணிப்பது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான இப் பிரிவின் பணிகளை செயற்படுத்துவதன் ஊடாக மக்கள் தொடர்புபடுகின்ற கீழ்மட்ட அமைப்பு அலகான சிறு குழுக்களிலிருந்து உருவாக்கிய சங்கங்களை ஒன்றிணைத்து அமைப்பு ரீதியாக சேர்ப்பதன் ஊடாக அவர்களை வலுவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். சமுதாய அடிப்படை அமைப்புக்களை பலப்படுத்துவதன் ஊடாகவும் அதனை மேற்கொள்ள முடியும்.

### 5.1.1 நிறைவேற்ற வேண்டிய பணிகள்

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றும் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான மாவட்டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வாழ்வின் எழுச்சி சட்டம் தொடர்பிலும் அதன் பணிப்பொறுப்புக்கள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் தேவைப்பாடுகள் காணக்கூடியதாக இருந்தது. இது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய சட்ட மூலம் தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதனால் அது தொடர்பில் விழிப்பூட்டுவது அத்தியாவசியமானதாகும். அதன் காரணமாக அந்த விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு விழிப்பூட்டும் வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய திணைக்களத்தின் பணிகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பில் விழிப்பூட்டும் வேலைத்திட்டம் ஒன்று 2014ம் ஆண்டின் மே, யூன் மாதங்களில் செயற்படுத்தப்பட்டது. (அந்த வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு இதில் இணைக்கப்பட்டுள்ளது.)

இதன் அடிப்படை நோக்கமானது திணைக்களத்தின் சட்டம் தொடர்பிலும் அதன் பணிப்பொறுப்புக்கள் தொடர்பிலும் உத்தியோகத்தர்களையும் மக்களையும் விழிப்பூட்டுவதன் ஊடாக பலம் வாய்ந்த சமுதாய அடிப்படை வலையமைப்பு ஒன்றினை கட்டியெழுப்பும் பொருட்டு தேவையான ஆரம்பத்தினை உருவாக்குவதாகும். அதாவது உத்தியோகத்தர்களுக்கு சட்டத்தின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பான தேவைப்படும் ஆரம்ப அறிவை வழங்குவதாகும். அதற்கு ஒரு நாள் விழிப்புணர்வு வேலைத்திட்டம் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது. அந்த விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் உள்ளடங்கிய தலைப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 5.1.2 இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு:

- வாழ்வின் எழுச்சி அபிவிருத்திப் பிரவேசம்
- குறுநிதிச் சேவைகளை வழங்குவதன் ஊடாக வறுமையினைக் குறைப்பதில் உள்ள வாய்ப்புக்களை இனங்காணுதல்.
- வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்புக்களைக் கட்டியெழுப்பும் போது பின்பற்ற வேண்டிய முறைகளும் அவற்றுக்குத் தேவையான கலைகளைப் பயன்படுத்துதல்.
- வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு உத்தியோகத்தர்களின் பணிப் பொறுப்புக்களை விளக்குதல்.

இவ்வாறான வேலைத்திட்டங்களின் ஊடாக உத்தியோகத்தர்களுக்கும் பயனாளிகளுக்கும் வாழ்வின் எழுச்சியின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பில் ஆரம்ப விளக்கம் ஒன்றினை வழங்குவதற்கு முயற்சிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் நடைபெற்ற வேலைத்திட்டங்களின் செயலறிக்கைகளை இத்துடன் தகுதியான நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன்.

**அட்டவணை – 08**

**மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளை விழிப்பூட்டும் ஒரு நாள் பட்டறையின் முன்னேற்றம் - 2014**

| தொ.இலக்கம் | வலயம் | மாவட்டம் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி | நடாத்தப்பட்ட இடம் | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இல.1 | கொழும்பு | 1 | 2014.06.06 | பிஷப் கல்லூரி | 740 | 458,609.00 |
| 2 | | களுத்துறை | 1 | 2014.06.27 | மத்துகம பிரதேச சபை கேட்போர் கூடம் | 1000 | 355,400.00 |
| 3 | | காலி | 2 | 2014.06.26 | காலி ஹோல் D மண்டபம்/ பத்தேகம தொ.ப.நிலையம் | 1368 | 520,440.00 |
| 4 | | மாத்தறை | 2 | 2014.06.17 | நகரசபை கேட்போர் கூடம்/ வெலிகம நகர சபை கேட்போர் கூடம் | 1300 | 540,900.00 |
| 5 | | இரத்தினபுரி | 2 | 2014.06.18 | சப்ரகமுவ மாகாணசபை கேட்போர் கூடம்/ சமுதி வரவேற்பு மண்டபம் | 800 | 384,000.00 |
| 6 | இல. 2 | கம்பஹா | 2 | 2014.06.03/04 | நைவல சணச மண்டபம் | 2100 | 716,300.00 |
| 7 | | குருணாகல் | 2 | 2014.05.29/ 2014.06.05 | குருநாகல் நகர மண்டபம் | 2600 | 869,800.00 |
| 8 | | புத்தளம் | 1 | 2014.05.30 | கூட்டுறவு அரங்க மண்டபம் - மாதம்பே | 790 | 336,200.00 |
| 9 | | கேகாலை | 1 | 2014.05.27 | புனித ஜோசப் மகளிர் கல்லூரி | 852 | 284,980.00 |
| 10 | இல. 3 | கண்டி | 2 | 2014.06.23/24 | மகாமாயா மகளிர் கல்லூரி | 1800 | 774,780.00 |
| 11 | | நுவரெலியா | 1 | 2014.06.26 | நுவரெலியா நகர மண்டபம் | 799 | 291,570.00 |
| 12 | | மாத்தளை | 1 | 2014.06.20 | மாத்தளை நகர மண்டபம் | 857 | 353,962.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | | பதுளை | 1 | 2014.06.16 | ஊவா மாகாண நூலக கேட்போர் கூடம் | 990 | 377,100.00 |
| 14 | இல. 4 | அம்பாந்தோட்டை | 1 | 2014.06.28 | இலங்கை, சிங்கப்பூர் சமூக நலன்புரி நிலையம் | 1133 | 389,470 |
| 15 | | மொனராகலை | 1 | 2014.07.11 | வெள்ளவாய மகிந்த ராஜபக்ஷ விரிவுரை மண்டபம் | 723 | 262,900.00 |
| 16 | | அம்பாறை | 2 | 2014.07.17/ 2014.07 | அம்பாறை கச்சேரி – சிங்களம் சம்மாந்துறை நகரசபை – தமிழ் | 300 700 | 391,400.00 |
| 17 | இல. 5 | அனுராதபுர | 3 | 2014.06.10/25 /27 | வட மத்திய மாகாண கூட்ட அரங்கு | 1283 | 607,275.00 |
| 18 | | பொலன்னறுவை | 1 | 2014.06.23 | | 881 | 359,705.00 |
| 19 | | திருகோணமலை | 2 | 2014. யூலை | | 393 | 188,655.00 |
| 20 | | மட்டக்களப்பு | 2 | 2014.06.27/28 | | 750 | 299,200.00 |
| 21 | இல. 6 | யாழ்ப்பாணம் | 2 | 2014 யூலை | வீரசிங்கம் மண்டபம் | 900 | 747,400.00 |
| 22 | | கிளிநொச்சி | 1 | 2014 யூலை | மாவட்ட கூட்டுறவு மண்டபம் | 500 | 225,700.00 |
| 23 | | முல்லைத்தீவு | 1 | 2014 ஆகஸ்ட் | பிரதேச சபைக் கட்டிடம் | 500 | 225,700.00 |
| 24 | | வவுனியா சிங்களம்/ தமிழ் | 2 | 2014 யூலை, ஆகஸ்ட் | மாவட்டச் செயலகம் | 496 214 | 344,100.00 |
| 25 | | மன்னார் | 1 | 2014 ஆகஸ்ட் | நகர சபை மண்டபம் | 500 | 225,700.00 |
| | **மொத்தம்** | | | | | **23559** | **10,531,246.00** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 06. வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவின் வினைத்திறன்கள்

2014ம் ஆண்டின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கு ஏற்றதாக பொருளாதார மற்றும் சமூக மட்டத்தில் தனிநபர், குடும்பம், குழுக்களை வலுவூட்டும் பொருட்டு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவது இத் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும் என்பதுடன் அதன் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இத் திணைக்ளத்திற்கு ரூபா மில்லியன் 3060 இற்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிதி ஒதுக்கீட்டு அளவுகளுக்கு மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மக்கள் பிரதிநிதிகளின் வாழ்வாதார கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டு மேலும் ரூபா மில்லியன் 86.88 மட்டளவிலான நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டதனால், அங்கீகரித்த மொத்த நிதி ஒதுக்கீட்டளவானது ரூபா மில்லியன் 3146.88ஆக இருந்தது.

அதன் பிரகாரம் "தொரின் தொரட்ட கமின் கமட்ட" (வீட்டுக்கு வீடு ஊருக்கு ஊர்) என்ற தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு குடும்ப அலகில் செலவுகளைக் குறைப்பதும் மேலதிக வருமானங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வீட்டுத்துறை மட்டத்தில் விவசாய, கைத்தொழில் அல்லது சேவைத் துறைகளிலிருந்து தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக மேலதிக வருமான வழிகளைத் திறந்து கொள்வதனை இலக்காகக் கொண்டு 2015ம் ஆம் ஆண்டின் வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டதன் பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதமாக இலகுவான நிர்வாகத்தின் பொருட்டு 25 மாவட்டங்களிலும் வாழ்வின் எழுச்சி 06 வலயங்களை உருவாக்கியது. ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 3060 இற்கான நிதி ஒதுக்கீட்டினை ஒரு தேர்தல் தொகுதிக்கு ரூபா மில்லியன் 20 என்ற பிரகாரம் 150 தேர்தல் தொகுதிகளுக்கு முதலாவது கட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டதுடன் கருத்திட்ட தேவையின் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பொருத்தமாக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல்கள் குறித்த உத்தியோகத்தர்களுக்கும் ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கும் ஒப்படைக்கப்பட்டது. அங்கு வாழ்வின் எழுச்சி பிரிவுக்கு குறித்த நிதி ஒதுக்கீட்டின் பொருட்டு கட்டுநிதியினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இங்கு விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

அதன் பிரகாரம் 05 பிரதான வேலைத்திட்டங்களின் கீழ் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தியதுடன் ரூபா மில்லியன் 1715.82ஐ செலவு செய்து பயனுள்ள 94,797 கருத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவுக்கு முடியுமாக இருந்தது.

1. விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம்
2. கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டம்
3. மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டம்
4. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்
5. சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டம்.



திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படும் மேற்படி வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் ஊடாக செயற்படுத்தப்படும் வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் மூலமும் வருடாந்தம் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான மூலதனத்தினை வழங்குவதற்கு முடிந்தமையினை இங்கு விசேடமாக சுட்டிக் காட்டல் வேண்டும்.

அதற்கமைய வலய மட்டத்தில் ஒதுக்கப்பட்ட திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் அளவுகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களுடன் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழுள்ளவாறாகும்.

**அட்டவணை – 09**

**ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு அளவுகளும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களும்**


| வலயம் | தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை | மாவட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடகளின் அளவு (ரூபா) | அனுப்பப்பட்ட நிதி ஒதுக்கீட்டு அளவு (ரூபா) | பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட முதலீடு (ரூபா மில்.) | பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இல. 01 | 48 | 05 | 975.00 | 833.00 | 22,973 | 378.09 | 22,973 |
| இல. 02 | 41 | 04 | 835.00 | 714.00 | 19,356 | 408.88 | 19,356 |
| இல. 03 | 31 | 04 | 615.00 | 527.00 | 22,481 | 490.08 | 22,481 |
| இல. 04 | 11 | 03 | 275.00 | 238.00 | 13,200 | 179.58 | 13,200 |
| இல. 05 | 16 | 04 | 421.88 | 355.32 | 15,318 | 234.24 | 15,318 |
| இல. 06 | 13 | 05 | 25.00 | 25.00 | 1,469 | 24.95 | 1,469 |
| மொத்தம் | **160** | **25** | **3146.88** | **2692.32** | **94,797** | **1715.82** | **94,797** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

*மேலே மாவட்ட மட்டத்திலான முதலீடுகள் தொடர்பான புள்ளிவிபர ரீதியான தரவுகள் இலக்கம் 01இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வரைபடம் - 03**

**வலய மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கைகளும் மேற்கொண்ட முதலீடுகளும்.**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

***வழங்கிய திறைசேரி நிதி ஒதுக்கீடுகளுக்கு உரியதாக மேலே கணக்கிடுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

அதன் பிரகாரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரநிதித்துவப்படுத்துகின்ற பிரகாரம் மேற்படி கருத்திட்டமானது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் செயற்படுத்தும் போது பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளாகியுள்ள குடும்பங்கள் உட்பட விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் உள்ள குடும்பங்களின் பால் கூடிய கவனத்தினைச் செலுத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் உட்பட ஓரளவு வருமான மட்டத்திலுள்ள பயனாளிகளுக்கும் கீழுள்ள எடுகோள்களுக்கமைய நிதி ஒதுக்கீட்டினை வாழ்வாதார வசதிகளை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.



**அட்டவணை – 10**


**பூர்த்தி செய்யப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றப் பொழிப்பு**

| கருத்திட்ட எடுகோள்கள் | மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை | வழங்கிய தொகையின் அளவு (ரூபா மில்.) |
|---|---|---|
| A – 100% கருத்திட்ட மானியமாக வழங்குதல் | 58,158 | 102,756 |
| B– கருத்திட்ட தொகையிலிருந்து 50%த்தினை வழங்கி மீண்டும் தவணைப் பணமாக அறவிடல் | 36,554 | 681.60 |
| C– வழங்கிய 100% கருத்திட்ட தொகையினை மீண்டும் தவணைப் பணமாக அறவிடல். | 85 | 6.60 |
| D– வாழ்வாதார சுழற்சி நிதியத்திலிருந்து கருத்திட்டத்திற்கு வழங்குதல் | 837 | 27.59 |
| மொத்தம் | 95,634 | 1743.35 |

- பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளாகியுள்ள குடும்பங்கள் உட்பட விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மகளிர் குடும்பங்களின் பொருட்டும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு உயர்ந்த பட்சமானது ரூபா 75000/= உட்பட்டதான கருத்திட்ட மானியங்கள் - A
- ஏதேனும் ஒரு வருமான நிலையிலுள்ள பயனாளிகளின் பொருட்டு உயர்ந்த பட்சமானது ரூபா 75000/= உட்பட்டதான தேவையான கருத்திட்ட தொகையிலிருந்து 50%த்தினை வழங்கி சுழற்சி நிதியத்திற்கு தவணை அடிப்படையில் மீள அறவிடல் - B
- வழங்கிய 100% கருத்திட்ட தொகையினை மீள தவணை அடிப்படையில் அறவிடுதல் - C
- தற்போதுள்ள வாழ்வாதார சுழற்சி நிதியத்திலிருந்து கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல். –D

**வரைபடம் - 04**

**பூர்த்தி செய்யப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை வரைபட ரீதியாகக் காட்டுதல்.**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

மேற்படி எடுகோள்களுக்கமைய வேலைத்திட்ட மட்டத்தில் திறைசேரி ஒதுக்கீடுகள் மற்றும் வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டு செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ள வாழ்வாதார கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களை இங்கு சுட்டிக் காட்ட முடியும்.

**அட்டவணை – 11**

**வேலைத்திட்டங்களுக்கேற்ப நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்**


| வேலைத்திட்டம் | பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | செலவு (ரூ. மில்) | கருத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | 32,524 | 388.72 | 32,524 |
| கால்நடைவள அபிவிருத்தி | 19,240 | 363.98 | 19,240 |
| மீன்பிடி அபிவிருத்தி | 1,786 | 36.61 | 1,786 |
| கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி | 30,571 | 795.05 | 30,571 |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி | 10,676 | 131.45 | 10,676 |

| மொத்தம் | 94,797 | 1715.81 | 94,797 |
|---|---|---|---|
| வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் மூலம் | 837 | 27.59 | 837 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 05**

**வாழ்வாதார துறையில் தோற்றக்கூடிய மற்றும் புள்ளிவிபர ரீதியான பங்களிப்பு**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று



### 6.1 விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம்

தனது வீட்டுத்தோட்டத்தினை முறையாக முகாமைத்துவம் செய்து நாளாந்த நுகர்வுக்குத் தேவையான மரக்கறிகள், பழவகைகள் உட்பட உள்ளூர் உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கு ஒத்தாசையினை வழங்குவதும் வீட்டாரின் விரயமாக்கப்படுகின்ற நேரத்தினை சரியாக பயன்படுத்ததுவதன் ஊடாக மேலதிக வருமான வழியினை உருவாக்கி கொள்ளும் பொருட்டு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா மில்லியன் 388.73ஐ செலவு செய்து 32,524 கருத்திட்டங்களின் பொருட்டு பயனாளிகளை ஈடுபடச் செய்து அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் முடியுமாக இருந்தது.

விசேடமாக இங்கு விவசாய அபிவிருத்தி துறையின் கீழ் செயற்படுத்தப்பட்ட கீழ் குறிப்பிடப்படுகின்ற கருத்திட்டத்தினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் விளக்குவது மேலதிக வருமான வழிகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகும்.

இங்கு தேயிலை பயிர்ச் செய்கைக் கருத்திட்டத்தினை மேம்படுத்துவதற்கு தேவையான நிதியங்களை வழங்குவதற்கு வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்திற்கு வாய்ப்புக்கள் கிடைத்திருந்தது. அத்துடன் நாளாந்த விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மக்களுக்கு அத்தியாவசியமான உபகரணங்களை அதாவது நீர் இறைக்கும் இயந்திரம், நீர்த்தாங்கி, தெளிகருவிகள், நீர்க்குழாய், மண்வெட்டி, உருளை வண்டி, விவசாய உபகரணம் போன்ற மூலதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை பொதுவாகக் காணக்கூடிய பண்புகளாக உள்ளன.

அத்துடன் மேலதிக வருமான வழிகள் தொடர்பில் ஈடுபடுத்தப்பட்டள்ளதனை மிகத்தெளிவாக விளங்குகின்றது. அலங்கார மலர்ச் செய்கை, மிளகுப் பயிர்ச் செய்கை, தேனீ வளர்ப்பு, கருவாப் பயிர்ச் செய்கை, பெரிய வெங்காயம் மற்றும் பழப்பயிர்ச் செய்கையின் பொருட்டு கூடுதலான பயனாளிகள் பழக்கப்பட்டள்ளனர்.

**அட்டவணை – 12**

**பூர்த்தி செய்யப்பட்ட விவசாய அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பகுப்பாய்வு**

| *கருத்திட்ட வகை* | *எண்ணிக்கை* | *நாற்றுக்கள்/ உபகரணங்கள்/ பொருட்கள்/ உள்ளீடுகள்/ கால்நடைகளின் அளவு* | *செலவு (ரூ. மில்)* | *பயனாளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| விவசாயக் கிணறு | 102 | 102 | 2.35 | 102 |
| விவசாய உபகரணத் தொகுதி | 3,744 | 36,761 | 44.34 | 3,744 |
| நீர்த் தாங்கி | 3,684 | 3,702 | 34.82 | 3,684 |
| வீட்டுத்தோட்ட உபகரணம் | 4,446 | 16,269 | 28.99 | 4,446 |
| இறப்பர் கன்றுகள் | 925 | 26,409 | 3.44 | 925 |
| நீர் கொள்ள | 2,972 | 3,053 | 37.35 | 2,972 |
| தேயிலைப் பயிர்ச்செய்கை | 6,834 | 4,204,870 | 80.85 | 6,834 |
| அலங்கார மலர்ச்செய்கை | 1,076 | 64,989 | 16.06 | 1,076 |
| நாற்றுமேடை உபகரணம் | 1,041 | 6,123 | 19.11 | 1,041 |
| கித்துள்பாணி உற்பத்தி | 57 | 70 | 0.60 | 57 |
| நீர் இறைக்கும் இயந்திரம் | 3,543 | 3,612 | 69.66 | 3,543 |
| மிளகுச்செடி | 1,141 | 178,497 | 19.42 | 1,141 |
| காளான் பயிர்ச் செய்கை | 465 | 1,175 | 9.65 | 465 |
| தேனீ வளர்ப்பு | 272 | 1,014 | 1.49 | 272 |
| பழப் பயிர்ச் செய்கை | 1,167 | 55,240 | 4.98 | 1,167 |
| மரக்கறி பயிர்ச் செய்கை | 177 | 2,434 | 1.38 | 177 |
| பாதுகாப்பான இல்லம் | 175 | 175 | 5.30 | 175 |
| நிலக்கடலை பயிர்ச் செய்கை | 50 | 50 | 0.67 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| இஞ்சி பயிர்ச் செய்கை | 53 | 53 | 1.00 | 53 |
| பயிர்ச் செய்கை | 62 | 13,755 | 0.43 | 62 |
| கருவாப் பயிர்ச் செய்கை | 338 | 107,306 | 4.84 | 338 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 2.00 | 200 |
| ***மொத்தம்*** | **32,524** | **4,725,859** | **388.73** | **32,524** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 6.2 கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டம்



கால்நடைவள அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா மில்லியன் 363.98ஐ செலவு செய்து 19240 பயனாளிகளுக்குத் தேவையான 19240 கருத்திட்டங்களைச் செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வாய்ப்புக்கள் கிடைத்திருந்தது.

இங்கு கறவைப் பசு வளர்ப்பிற்காக கூடுதலான நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் இலக்கான பாற்பண்ணையாளர்களை மேம்படுத்துவது தொடர்பில் ஒவ்வொரு மாவட்டமும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் இதற்கு மேலதிகமாக நாளாந்த நுகர்வுத் தேவையான பாலைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மேலதிக வருமானத்தினைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் விருப்பம் காட்டியுள்ளமையும் அவ்வாறு இருந்தாலும் அதிக பயனாளிகள் கோழி வளர்ப்புக் கருத்திட்டத்தில் ஈடுபடச் செய்வது இங்கு விசேட பண்பாக உள்ளதுடன் 386,446 கோழிக்குஞ்சுகள் மட்டளவில் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை – 13**

**பூர்த்தி செய்யப்பட்ட கால்நடை அபிவிருத்திக் கருத்திட்டப் பகுப்பாய்வு**

| ***கருத்திட்ட வகை*** | ***எண்ணிக்கை*** | ***கால்நடைகள்/ உபகரணங்கள்/ பொருட்கள்/ உள்ளீடுகளின் அளவு*** | ***செலவு (ரூ. மில்)*** | ***பயனாளிகளின் எண்ணிக்கை*** |
|---|---|---|---|---|
| கோழிக்குஞ்சுகள் | 11,846 | 369,771 | 114.10 | 11,846 |
| கறவைப் பசு | 3,379 | 3,574 | 152.41 | 3,379 |
| மாட்டுத் தொழுவம் | 1,817 | 3,272 | 42.67 | 1,817 |
| பன்றிக்குட்டி | 90 | 323 | 1.76 | 90 |
| ஆடு வளர்ப்பு | 1,503 | 4,912 | 40.76 | 1,503 |
| கோழிக்கூடு | 291 | 1,182 | 4.06 | 291 |
| கால்நடை | 274 | 3,362 | 5.08 | 274 |
| ஆட்டுத்தொழுவம் | 4 | 7 | 0.04 | 4 |
| எருது வளர்ப்பு | 36 | 43 | 3.10 | 36 |
| ***மொத்தம்*** | **19,240** | **386,446** | **363.98** | **19,240** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

## 6.3 மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டம்

மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா மில்லியன் 36.61ஐ செலவிட்டு மீன்பிடிப் பயனாளிகள் 1786 பேரினது மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு நிதி உதவிகளை வழங்குவதற்கு எமது திணைக்களத்திற்கு முடியுமாக இருந்தது. கீழே காட்டப்படுகின்ற மீன்பிடிக் கருத்திட்ட பகுப்பாய்வுகளிலிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பயனாளிகளுக்குத் தேவையாகவுள்ள மீன்பிடி உபகரணங்கள், பொருட்கள் உட்பட உயர் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பினையும் வழங்குவதற்கு கிடைத்தமை விசேடமான ஒன்றாகும் என்பதனை சுட்டிக்காட்ட முடியும்.

**அட்டவணை – 14**

**மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்**

| ***கருத்திட்ட வகை*** | ***எண்ணிக்கை*** | ***இயந்திர உபகரணங்கள்/ பொருட்கள்/ உள்ளீடுகள்/ கால்நடைகளின் அளவு*** | ***செலவு (ரூ. மில்)*** | ***பயனாளிகளின் எண்ணிக்கை*** |
|---|---|---|---|---|
| மீன்பிடி இயந்திரங்கள்/ உபகரணங்கள் | 1,077 | 3,552 | 23.27 | 1,077 |
| அலங்கார மீன்வளர்ப்பு | 132 | 6,2149 | 2.28 | 132 |
| நன்னீர் மீன்வளர்ப்பு | 52 | 3,0131 | 2.25 | 52 |
| நன்னீர் மீன்வளர்ப்பு தாங்கி | 6 | 9 | 0.86 | 6 |
| வள்ளங்களை வழங்குதல் | 71 | 83 | 3.71 | 71 |
| கடற் தாவரங்கள் | 53 | 303 | 2.54 | 53 |
| உயர் பாதுகாப்பு | 359 | 359 | 0.99 | 359 |
| மீன்பிடி உபகரணங்கள் | 36 | 36 | 0.71 | 36 |
| ***மொத்தம்*** | **1,786** | **96,622** | **36.61** | **1,786** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

## 6.4 கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்



2014ம் ஆண்டின் வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கூடிய கவனத்தினைப் பெற்றுள்ள கருத்திட்டமாக கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி என சுற்றிக்காட்டக் கூடியதாக இருந்தது. மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கூடுதலான அளவு இதன் பொருட்டு பெறப்பட்டுள்ள விதத்தினை கீழுள்ள பகுப்பாய்வின் மூலம் வெளியாகியுள்ளது.



இங்கு ரூபா மில்லியன் 795.05ஐ செலவிட்டு பல்வேறு தொழில்களில் ஈடுபடும் 30,571 மட்டளவிலான பயனாளிகளுக்கு இயந்திர உபகரண மற்றும் மூலதனப் பொருட்களை 40,114ஐப் பெற்றுக்கொள்ளத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கக்கூடியதாக இருந

**அட்டவணை – 15**

**பூர்த்தி செய்யப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பகுப்பாய்வு**

| ***கருத்திட்ட வகை*** | ***எண்ணிக்கை*** | ***இயந்திர உபகரணங்கள்/ பொருட்கள்/ உள்ளீடுகள்/ கால்நடைகளின் அளவு*** | ***செலவு (ரூ. மில்)*** | ***பயனாளிகளின் எண்ணிக்கை*** |
|---|---|---|---|---|
| தையல் இயந்திரம் | 11,471 | 12,051 | 330.84 | 11,471 |
| தச்சு உபகரணம் | 4,727 | 6,869 | 154.27 | 4,727 |
| அரைக்கும் இயந்திரம் | 2,137 | 2,502 | 44.29 | 2,137 |
| ஒட்டு இயந்திரம் | 2,247 | 2,531 | 42.21 | 2,247 |
| கம்பிரஷர் இயந்திரம் | 926 | 942 | 25.18 | 926 |
| பைப் உற்பத்திகள்/ இரும்புப் பண்டம் உற்பத்திகள் | 578 | 876 | 10.30 | 578 |
| நகை உற்பத்திகள் | 66 | 90 | 1.12 | 66 |
| அலங்காரப் பொருட்கள் | 82 | 82 | 1.11 | 82 |
| கைப்பணி உற்பத்திகள் | 235 | 695 | 9.88 | 235 |
| மேசன் உபகரணங்கள்/ இயந்திரங்கள் | 2,421 | 6,308 | 46.01 | 2,421 |
| மின்சார உபகரணங்கள் | 577 | 825 | 12.05 | 577 |
| ஹோட்டல்/ வெதுப்பக உபகரணங்கள் | 1,568 | 2,488 | 37.61 | 1,568 |
| ஆடை தயாரித்தல் | 1,599 | 1,629 | 41.19 | 1,599 |
| சிறிய கைத்தொழில்கள் | 684 | 708 | 16.85 | 684 |
| பிரம்புக் கைத்தொழில்கள் | 58 | 82 | 0.68 | 58 |
| நெல் அவிக்கும் பெரல்கள் | 318 | 318 | 4.78 | 318 |
| மெழுகுதிரி உற்பத்தி | 95 | 95 | 2.83 | 95 |
| தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 72 | 72 | 1.58 | 72 |
| தங்கக் கைத்தொழில் | 20 | 20 | 0.18 | 20 |
| சட்டி, பானை உற்பத்திக் கைத்தொழில் | 83 | 321 | 2.38 | 83 |
| இறப்பர் உற்பத்தி இயந்திரம் | 28 | 28 | 1.12 | 28 |
| தும்பு சார்ந்த உற்பத்திகள் | 263 | 266 | 4.40 | 263 |
| புல் வெட்டும் இயங்திரம் | 316 | 316 | 4.19 | 316 |
| ***மொத்தம்*** | **30,571** | **40,114** | **795.05** | **30,571** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

## 6.5 சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டம்



ஏற்கெனவே பல்வேறுபட்ட வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் நடைமுறையிலுள்ள பொருளாதார மற்றும் சமூக மட்டத்தினை விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் செயற்படும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா மில்லியன் 131.45ஐ செலவு செய்து 10688 பயனாளிகளின் சந்தைப்படுத்தல் பணிகளுக்குத் தேவையான 15936 மட்டளவிலான மூலதன உபகரணங்களை வழங்குவதற்கு ஆற்றல்கள் கிடைத்துள்ளதனை கீழே காட்டப்படுகின்ற கருத்திட்டப் பகுப்பாய்வின் ஊடாக சுட்டிக்காட்ட முடியும்.

**அட்டவணை – 16**

**பூர்த்தி செய்யப்பட்ட சந்தைப்படுத்தல் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பகுப்பாய்வு**

| *கருத்திட்ட வகை* | *எண்ணிக்கை* | *உபகரணங்கள்/ பொருட்கள்/ உள்ளீடுகளின் அளவு* | *செலவு (ரூ. மில்)* | *பயனாளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| நடமாடும் வண்டி/ நடமாடும் விற்பனை நிலையங்கள் | 472 | 472 | 8.74 | 472 |
| எரிவாயு சிலிண்டர்/ கிரைண்டர் | 715 | 786 | 6.46 | 715 |
| மின்சார தராசு | 730 | 739 | 10.38 | 730 |
| குளிர்சாதனப் பெட்டி | 535 | 535 | 20.28 | 535 |
| கண்ணாடி அலுமாரி | 671 | 685 | 10.28 | 671 |
| அலங்கார உபகரணங்கள் | 797 | 929 | 17.59 | 797 |
| புகைப்பட உபகரணங்கள் | 41 | 50 | 2.02 | 41 |
| வாகனங்கள்/ துவிச்சக்கரவண்டி திருத்தம் | 199 | 364 | 5.57 | 199 |
| தொடர்பாடல் உபகரணங்கள் | 44 | 45 | 1.75 | 44 |
| கேட்டல் உபகரணங்கள் | 625 | 1,208 | 6.13 | 625 |
| மின்சார உபகரணங்கள் | 146 | 254 | 1.82 | 146 |
| குடிசை வர்த்தகம்/ விற்பனைக் கூடங்கள் | 5,026 | 8,970 | 34.15 | 5,026 |
| இனிப்புப் பண்டங்கள் | 504 | 534 | 3.19 | 504 |
| வாசனைத்திரவிய உற்பத்திகளின் விற்பனை | 45 | 45 | 1.25 | 45 |
| பால் உற்பத்திப் பொருள் விற்பனை | 55 | 55 | 0.65 | 55 |
| உற்சவப் பொருட்கள் | 83 | 265 | 1.19 | 83 |
| **மொத்தம்** | **10,688** | **15,936** | **131.45** | **10,688** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**6.6 வாழ்வாதார சுழற்சி நிதியம்**

2007ம் ஆண்டில் ஜாதிக சவிய கிராம எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு இலங்கை சமுர்த்தி அதிகார சபை மேற்கொண்ட முதலீடகளில் 50%ஐ தவணை அடிப்படையில் மீள அறவிட்டு வாழ்வாதார சுழற்சி நிதியம் சமுர்த்தி வங்கிச் சங்க மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டள்ளது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி நிதியத்திற்கு வருடாந்த செயற்படுகின்ற வாழ்வாதார கருத்திட்டத்தின் கீழ் தவணைப் பண அறவீடுகள் சேகரிக்கப்படுவதுடன் வாழ்வாதார கடன் தொகை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு நிதிச் சொத்தாகும் என்பதுடன் மிக இலகுவான மூலதனம் வழங்கும் வழியொன்றாகவும் மாறியுள்ளது.

**அட்டவணை – 17**

**வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் 2014ம் ஆண்டின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| வாழ்வாதார சுழற்சி நிதியம் | செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவிட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| | 837 | 27.59 |

சுழற்சி நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து 2014.12.31ம் திகதியில் 1074 வாழ்வின் எழுச்சி வங்கிகளின் ஊடாக 70864 வாழ்வாதாரக் கருத்திட்டக் கடன் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு ரூபா மில்லியன் 171,779 செலவிடப்பட்டுள்ளது.


**அட்டவணை – 18**

**மொத்த முதலீடுகளும் பகுப்பாய்வும்**

| வேலைத்திட்டம் | பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | செலவு (ரூ. மில்) | கருத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | 32,524 | 388.72 | 32,524 |
| கால்நடைவள அபிவிருத்தி | 19,240 | 363.98 | 19,240 |
| மீன்பிடி அபிவிருத்தி | 1,786 | 36.61 | 1,786 |
| கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி | 30,571 | 795.05 | 30,571 |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி | 10,676 | 131.45 | 10,676 |
| வாழ்வாதார சுழற்சி நிதியம் | 837 | 27.59 | 837 |
| **மொத்தம்** | **95,634** | **1743.4** | **95,634** |

**வரைபடம் - 06**

**வேலைத்திட்டங்களின் மட்டத்தில் மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கையும் முதலீடுகளும் ஒப்பீட்டளவில்**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

அட்டவணை - 19

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

## வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2014

## 2014.12.31ம் திகதியில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| வலயம் | மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | அனுப்பப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | விடுவித்த கட்டுநிதி (ரூ.மில்) | பூர்த்தியான கருத்திட்டங்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விவசாயம் | | கால்நடை வளர்ப்பு | | மீன்பிடி | | கைத்தொழில் | | சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் | | மொத்தம் | |
| | | | | | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) |
| இல.01 | கொழும்பு | 300.00 | 255.00 | 377.1 | 300 | 5.57 | 278 | 6.22 | 29 | 1.62 | 2061 | 67.58 | 311 | 6.61 | 2979 | 87.60 |
| | களுத்துறை | 160.00 | 136.00 | | 2753 | 18.15 | 238 | 4.83 | 33 | 1.05 | 2475 | 42.61 | 635 | 10.49 | 6134 | 77.13 |
| | இரத்தினபுரி | 180.00 | 153.00 | | 1281 | 17.61 | 118 | 2.49 | | | 1520 | 42.11 | 553 | 9.32 | 3472 | 71.53 |
| | காலி | 200.00 | 170.00 | | 3288 | 27.01 | 655 | 5.49 | 54 | 0.78 | 1944 | 35.79 | 1077 | 15.55 | 7018 | 84.62 |
| | மாத்தறை | 140.00 | 119.00 | | 801 | 11.26 | 101 | 1.89 | 501 | 3.01 | 1412 | 32.01 | 555 | 9.04 | 3370 | 57.21 |
| ***உப மொத்தம்*** | | ***980.00*** | ***833.00*** | ***377.10*** | ***8423*** | ***79.60*** | ***1390*** | ***20.92*** | ***617*** | ***6.46*** | ***9412*** | ***220.10*** | ***3131*** | ***51.01*** | ***22973*** | ***378.09*** |
| இல.02 | கம்பஹா | 260.00 | 221.00 | 437.0 | 246 | 4.91 | 418 | 10.38 | 64 | 2.93 | 3171 | 86.06 | 667 | 12.4 | 4566 | 116.68 |
| | குருணாகல் | 280.00 | 238.00 | | 1546 | 26.12 | 1453 | 43.12 | 6 | 0.17 | 2028 | 57.72 | 433 | 8.31 | 5466 | 135.44 |
| | புத்தளம் | 120.00 | 102.00 | | 562 | 9.02 | 1424 | 21.38 | 287 | 6.78 | 722 | 18.38 | 232 | 4.61 | 3227 | 60.17 |
| | கேகாலை | 180.00 | 153.00 | | 2017 | 27.76 | 1596 | 10.85 | 4 | 0.12 | 2268 | 53.23 | 212 | 4.63 | 6097 | 96.59 |
| ***உப மொத்தம்*** | | ***840.00*** | ***714.00*** | ***437.04*** | ***4371*** | ***67.81*** | ***4891*** | ***85.73*** | ***361*** | ***10.00*** | ***8189*** | ***215.39*** | ***1544*** | ***29.95*** | ***19356*** | ***408.88*** |
| இல.03 | கண்டி | 260.00 | 221.00 | 496.30 | 2203 | 31.81 | 1922 | 51.31 | 8 | 0.24 | 3372 | 110.42 | 738 | 12.78 | 8243 | 206.56 |
| | மாத்தளை | 80.00 | 68.00 | | 1061 | 13.76 | 592 | 17.29 | 2 | 0.04 | 1742 | 47.19 | | | 3397 | 78.28 |
| | நுவரெலியா | 100.00 | 85.00 | | 662 | 7.55 | 1041 | 28.09 | 8 | 1.66 | 566 | 12.52 | 143 | 2.24 | 2420 | 52.06 |
| | பதுளை | 180.00 | 153.00 | | 5136 | 66.70 | 1719 | 41.05 | 51 | 0.40 | 1193 | 41.10 | 322 | 3.93 | 8421 | 153.18 |
| ***உப மொத்தம்*** | | ***620.00*** | ***527.00*** | ***496.30*** | ***9062*** | ***119.82*** | ***5274*** | ***137.74*** | ***69*** | ***2.34*** | ***6873*** | ***211.23*** | ***1203*** | ***18.95*** | ***22481*** | ***490.08*** |
| இல.04 | அம்பாந்தோட்டை | 100.00 | 85.00 | 209.00 | 1139 | 18.4 | 43 | 2.03 | 45 | 1.16 | 1477 | 41.09 | 195 | 1.52 | *2899* | *64.20* |
| | மோனராகலை | 80.00 | 68.00 | | 1949 | 13.96 | 226 | 4.29 | 17 | 0.38 | 667 | 16.79 | 2970 | 4.04 | *5829* | *39.46* |
| | அம்பாறை | 100.00 | 85.00 | | 1471 | 18.02 | 1474 | 23.55 | 156 | 3.66 | 1171 | 27.74 | 200 | 2.95 | *4472* | *75.92* |
| ***உப மொத்தம்*** | | ***280.00*** | ***238.00*** | ***209.00*** | ***4559*** | ***50.38*** | ***1743*** | ***29.87*** | ***218*** | ***5.20*** | ***3315*** | ***85.62*** | ***3365*** | ***8.51*** | ***13200*** | ***179.58*** |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல.05 | அனுராதபுரம் | 140.00 | 119.00 | 275.7 | 2527 | 29.06 | 1557 | 24.80 | 73 | 1.58 | 989 | 16.79 | 223 | 4.27 | 5369 | 76.50 |
| | பொலன்னறுவை | 116.20 | 104.20 | | 2197 | 21.85 | 2604 | 20.21 | 69 | 2.00 | 1053 | 25.50 | 486 | 3.85 | 6409 | 73.41 |
| | திருகோணமலை | 110.68 | 81.12 | | 594 | 7.60 | 18 | 0.36 | 208 | 4.08 | 318 | 10.14 | 466 | 11.14 | 1604 | 33.32 |
| | மட்டக்களப்பு | 60.00 | 51.00 | | 481 | 7.61 | 776 | 30.44 | 90 | 1.61 | 358 | 8.4 | 231 | 2.95 | 1936 | 51.01 |
| ***உப மொத்தம்*** | | ***426.88*** | ***355.32*** | ***275.74*** | ***5799*** | ***66.12*** | ***4955*** | ***75.81*** | ***440*** | ***9.27*** | ***2718*** | ***60.83*** | ***1406*** | ***22.21*** | ***15318*** | ***234.24*** |
| இல.*06* | *வவுனியா* | | *5.00* | *25.00* | 50 | 1.43 | 75 | 2.54 | 1 | 0.01 | 26 | 0.87 | 3 | 0.14 | 155 | 4.99 |
| | *யாழ்ப்பாணம்* | | *5.00* | | 55 | 1.44 | 88 | 1.46 | 29 | 0.81 | 26 | 0.70 | 21 | 0.58 | 219 | 4.99 |
| | *மன்னார்* | | *5.00* | | 5 | 0.12 | 643 | 4.42 | 1 | 0.02 | 12 | 0.32 | 3 | 0.10 | 664 | 4.98 |
| | *முல்லைத்தீவு* | | *5.00* | | 200 | 2.00 | 136 | 2.99 | | | | | | | 336 | 4.99 |
| | *கிளிநொச்சி* | | *5.00* | | | | 45 | 2.50 | 50 | 2.50 | | | | | 95 | 5.00 |
| ***உப மொத்தம்*** | | ***0.00*** | ***25.00*** | ***25.00*** | ***310*** | ***4.99*** | ***987*** | ***13.91*** | ***81*** | ***3.34*** | ***64*** | ***1.89*** | ***27*** | ***0.82*** | ***1469*** | ***24.95*** |
| ***முழு மொத்தம்*** | | **3146.88** | **2692.32** | **1820.18** | **32524** | **388.72** | **19240** | **363.98** | **1786** | **36.61** | **30571** | **795.06** | **10676** | **131.45** | **94797** | **1715.8** |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

## 7. தகவல் தொழில் நுட்பப் பிரிவின் வினைத்திறன்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கடமைகளின் போது தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு செயற்திறனையும் பயனையும் அதிகரித்து மக்களுக்கு மிகத் துரித மற்றும் தரமான சேவை ஒன்றினை வழங்குவதற்கு ஒத்துழைத்தல்.

7.1 e-வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

இதன் கீழ் மனிதவள முகாமைத்துவ மொடியூலின் (Module) சகல உத்தியோகத்தர்களினதும் தகவல்களை முறைமைப்படுத்துதல், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 26000 பேர்களின் தகவல்களை மனிதவள முகாமைத்துவ மொடியூலில் முகாமைத்துவம் செய்தல். (Human Resource Management)

7.2 பயனாளி முகாமைத்துவ மொடியூலின் ஊடாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் தகவல்களையும் நிவாரணம் பெறுவோரின் தகவல்களையும் முறைமைப்படுத்துதல் (Customer Relationship Management)

7.3 2014ம் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்ட பயனாளி வேலைத்திட்டங்களை முகாமைத்துவம் செய்தல் (Project and Programe Management)

7.4 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னோடி கருத்திட்டத்திற்குச் சொந்தமான 08 வங்கிகளின் மென்பொருளை உருவாக்கி முடித்தல்.

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினை கணனி மென்பொருள் ஊடாக கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய விதத்தில் உருவாக்கி முடிப்பதும் அதனை ஏற்கெனவே வன்பொருட்கள் வழங்கப்பட்டுள்ள ஏனைய வங்கிகளுக்கு விரிவாக்குதல்.

7.5 2013ம் ஆண்டிற்குரிய சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பின் தரவுத் தொகுதியினைத் தயாரித்து 1200 வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7.6 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வெப்தளத்தினை முறைமைப்படுத்தி பராமரிப்புச் செய்தல், நிறுவனம் வெளியிடுகின்ற சுற்றறிக்கைகளை வெப்தளத்தினூடாக பிரசுரித்தல்.

## 8. ஊடகப் பிரிவின் வினைத்திறன்கள்

சமூக சமத்துவத்தினை ஏற்படுத்தி வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக வாழ்க்கைத்தரத்தினை மெருகூட்டுவதன் ஊடாக நாட்டின் வறுமை நிலையினைக் குறைப்பதற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் வருடாந்தம் செயற்படுத்துகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் சமூக நலன்புரி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாட்டின் பொது மக்களையும் ஏனைய பொறுப்புக்களை வகிக்கக்கூடிய பிரிவுகளை அடிக்கடி விளக்கமளிப்பது ஊடகப் பிரிவின் முக்கிய பணியாகும்.

### 8.1 நோக்கங்கள்

வறுமை நிலையினைக் குறைக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் பிரிவுகளின் முயற்சிகளுக்கும் தோள் கொடுக்கும் தொடர்பாடல் முறைகளைக் கட்டியெழுப்பி வாழ்வின் எழுச்சி செயற்திட்டத்தினை விரிவான கலந்துரையாடல் ஒன்றிற்கு உட்படுத்தி அதன் அபிவிருத்திகளை மிகப் பயனுள்ளதாகவும், செயற்திறன் மிக்கதாகவும் மக்களிடையே எடுத்துச் செல்வதற்குரிய பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 8.2 கருத்திட்டம்

நாட்டின் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு தோள் கொடுக்கும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்திறன் மிக்கதாகவும் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்துதல்.

#### 8.2.1 இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினை அடிப்படையாகக் கொண்டு 07 அலைவரிசைகளை உள்ளடக்கி வாழ்வின் எழுச்சி ''வீட்டுக்கு வீடு, கிராமத்துக்கு கிராமம்'' என்ற ½ மணித்தியால வானொலி வேலைத்திட்டத்தினை ஆரம்பித்தல். இந்த நிகழ்ச்சியானது சனிக்கிழமை தினத்தில் சிங்கள, வர்த்தக, சுவதேச, ரஜரட்ட மற்றும் உருகுணை சேவைகளின் மூலம் மு.ப 11.00 – 11.30 மணி வரையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் கந்துரட்ட சேவை மூலம் மு.ப 11.30 – 12.00 மணி வரையும் செவ்வாய்க் கிழமைகளில் வயம்ப சேவை மூலம் மு.ப 8.00 – 8.30 மணி வரையும் ஒலிபரப்பப்பட்டது. இந்த பிரச்சார வேலைத்திட்டங்களில் இதற்கு மேலதிகமாக சேவைப் பங்களிப்பு நன்மையாக 60 செக்கன்கள் பதிவு செய்யப்பட்ட பகுதிகள் நாள் ஒன்றுக்கு 10 என்ற வகையில் 30 செக்கன்கள் பதிவு செய்யப்படுகின்ற விழிப்புட்டும் செய்திகள் நாள் ஒன்றுக்கு 3 வீதம் வாராந்தம் 30 நிமிடங்களுக்கு அறிக்கையிடும் நிகழ்ச்சிகளுக்குரிய முன்னறிவித்தல் 10 செக்கன்கள் சேவைப் பங்களிப்புக்களை ஒலிபரப்பும் நிகழ்ச்சி நாள் ஒன்றுக்கு 3 வீதம் ஒவ்வொரு நாளும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

அதற்கமைய வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டம் தொடர்பான ½ மணித்தியால வாராந்த வானொலி நிகழ்ச்சிகள் 12உம் சிறு விளம்பர குரல் பகுதிகள் மற்றும் குறு விளம்பரங்கள் 270உம் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

### 8.3 அச்சு ஊடக நடவடிக்கைகள்

தேசிய செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற வாழ்வின் எழுச்சி அபிவிருத்திச் செயற்திட்டம் சார்ந்த நாளாந்த செய்தித்தாள் அறிக்கைகளை பணிப்பாளர் தலைமையதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பித்து அதனூடாக உரிய பிரிவுகளின் ஒருங்கிணைப்புடன் குறித்த நடவடிக்கைகளின் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்படுகின்ற வைபவங்களின் பொருட்டு விரிவான ஊடக பிரச்சார நடவடிக்கையாக தேசிய செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல், சிறு விளம்பரங்கள் மற்றும் கடித அறிக்கைகளை வெளியிடுதல், துண்டுப் பிரசுரங்கள், பருவகால சஞ்சிகைகள், நினைவு மலர்கள், சிறு புத்தக அச்சுக்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 9. சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் வினைத்திறன்கள்

1996ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி அதிகார சபையின் கடன் பிரிவானது காலத்திற்கேற்ப ஏற்பட்ட கொள்கை ரீதியான மாற்றங்கள் காரணமாக 1998ம் ஆண்டில் ‘‘வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு’’ என பெயரிடப்பட்டது. அதற்கமைய வங்கி நிதிப் பிரிவு குறுநிதியியல் நடவடிக்கைகள் உட்பட வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளின் சேமிப்பு பழக்கங்களை மேம்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இருப்பினும் 2013ம் ஆண்டின் 7ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் இலங்கை சமுர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டது. இது வரையில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் இருந்த வங்கிச் சங்கங்களும் மகா சங்கங்களும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களாக பெயரிடப்பட்டது.

### 9.1 நோக்கு

‘‘வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் மற்றும் வாழ்வின் எழுச்சி குறைந்த வருமானம் பெறுவோருக்கு சிறந்த சேவை ஒன்றினை வழங்கும் நிலையான பயனுள்ள மற்றும் செயற்திறன் மிக்க வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களாக மாற்றுதல்’’

### 9.2 பணி

தேசிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் பணியில் நிதிப் பலத்துடனான வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் மற்றும் வாழ்வின் எழுச்சி குறைந்த வருமானம் பெறுவோரை தன்னம்பிக்கையுடன் மேம்படுத்தும் பொருட்டுத் தேவையான குறுநிதியியலுடன் முன்னோக்கிச் சென்று தனது வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளுக்கும் வாழ்வின் எழுச்சி குறைந்த வருமானம் பெறுவோருக்கும் சிறந்த சேவை ஒன்றினை வழங்கும் பயனுள்ள மற்றும் செயற்திறன்மிக்க வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களைக் கட்டியெழுப்புதல்.

### 9.3 அறிமுகம்

1996ம் ஆண்டில் இலங்கை சமுர்த்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டவுடன் அதன் மேலும் ஒரு பிரிவாக ‘‘கடன் பிரிவு’’ ஆரம்பிக்கப்பட்டது.

காலரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இப்பிரிவானது 1998ம் ஆண்டில் ‘‘வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவாக’’ பெயரிடப்பட்டது.

1995ம் ஆண்டின் 30ம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்திற்கமைய சமுர்த்தி தேசிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் 1996ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்புக்களை மேம்படுத்தி அதனூடாக முதலீட்டுப் பலத்தினை அதிகரிப்பதற்கும் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் விருத்திக்குத் தேவையான மூலதனத்தினை (கடன் வசதிகள்) வழங்குவதற்கும் முறையற்ற கடன் கொடுக்கல் வாங்கல்களை குறைப்பதற்கும் அதனூடாக அவர்களை கடன்

சுமையிலிருந்து மீட்டு இலாபகரமான நிறுவன முறை ஒன்றினை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

**9.4 நோக்கங்கள்**

1. வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளின் சேமிப்பு பழக்கத்தினை மேம்படுத்துதல்
2. முதலீட்டு ஆற்றலை மேம்படுத்துதல்
3. உற்பத்தி ஆற்றல்களை மேம்படுத்துவதன் ஊடாக வருமானத்தினை விருத்தி செய்து வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.

அதன் பிரகாரம் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் பிரதான நெறிப்படுத்தல் அலுவலகமாக வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு உருவானதுடன் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை நோக்கி அந்த நிறுவனத்தை நெறிப்படுத்துவது வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் பொறுப்பும் பணியுமாக அமைந்தது.

3. சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் கடன்கள், வைப்புக்கள், காப்பீடுகள் உட்பட சகல நெறிப்படுத்தல் ஆலோசனைகள், சுற்றறிக்கைகள் மூலம் ஆலோசனைகளை வழங்குவதும் முறைமைப்படுத்துவதும்.
4. சமுதாய அடிப்படை வங்கிகளின் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை முறையாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான கடன் வசதிகளை (மீள்நிதியீட்டல்) வழங்குதல்.
5. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாளர்களுக்கு ஊழியர் கடன்களை வழங்குதல்.
6. சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் நிதியங்களை பயனுள்ள விதத்தில் முதலீடு செய்தல்.
7. சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதும், கணனிமயப்படுத்துவதும்.
8. வங்கிகளின் பிரச்சினைகள், குறைபாடுகள், மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வினை நடாத்துதல்.
9. பணியாளர்களை விளக்கமளித்தலும், பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதும்.
10. வங்கிச் சங்கங்களின் உள்ளக முகாமைத்துவத்தினை பரீட்சிக்கும் பொருட்டு திடீர் விஜயங்களை மேற்கொள்ளல்.
11. சமுதாய அடிப்படை வங்கித் தொகுதியினை முறையாக நெறிப்படுத்துவதற்குத் தேவையான காப்பீட்டு (காப்பறுதி) முறைகளைப் பேணிச் செல்லல்.
12. சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் செயற்பாட்டுக்குத் தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்கள் (Policy Matters) பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதும், தீமானங்களைச் செயற்படுத்துவதும்.
13. சமுதாய அடிப்படை வங்கிகள் தொடர்பில் தேவையான தகவல், தரவுகளை தேவைப்படும் நிறுவனங்களுக்கு வழங்குவதும் அதன் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்ப்பதும்.

இதன் பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் செயற்பாடுகள் இரு வகைப்படுகின்றது.

I சமுதாய அடிப்படை வங்கிகளின் வேலைத்திட்டம்

II சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் செயற்பாடுகள்

### 9.4.1 சமுதாய அடிப்படை வங்கி வேலைத்திட்டம்

வங்கிகளின் ஆரம்பமானது 7 கட்டங்களின் கீழ் செயற்பட்டதுடன் 2014.12.31ம் திகதியில் வடக்கு கிழக்கு மாவட்டங்கள் உட்பட நாடு பூராகவும் 1073 வங்கிகள் செயற்படுகின்றது.

இதன் பிரகாரம் பார்க்குமிடத்து சமுதாய அடிப்படை வங்கிகளாக ஆரம்பமான வலையமைப்பு இந் நாட்டின் குறுநிதி துறையில் நாடு தழுவியதாக விரிவடைந்துள்ளதுடன் பாரிய குறுநிதி நிறுவனக் கட்டமைப்பாக குறுகிய காலத்திற்குள் உருவாகியிருப்பதுடன் சமுதாய அடிப்படை வங்கிச் சங்க வலையமைப்பு சர்வதேச மட்டத்தில் குறுநிதித் துறையில் சிறந்த இடம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டுள்ளது. குறுநிதியியலில் பிரபலமானோர்களிடத்தேயே சிறந்த இடம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டுள்ள சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பு வறுமையினை ஒழிக்கும் நோக்கங்களுக்கு உட்பட்டதாக வைப்புக்களைத் திரட்டுதல் விசேட இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் புதிய வங்கித் தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி வங்கிகளை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

2013ம் ஆண்டின் இறுதியில் 822 வங்கிகள் நிதியியல் தன்னிறைவு நிலைக்குள்ளாகியுள்ளதுடன் 2014ம் ஆண்டின் இறுதியில் பல்வேறு நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியில் அந்த வங்கிகளில் அளவானது 752 ஆக மாறியது.

**வங்கிச் சங்கங்களின் அங்கத்துவமும் பங்கு மூலதனத்தின் முன்னேற்றமும் 2014.12.31ம் திகதியில்**

வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் ரூபா 500/=ற்கான பங்கு ஒன்றினைக் கொள்வனவு செய்வதன் மூலம், அவர்களுக்கு சமுதாய அடிப்படை வங்கியில் அங்கத்துவம் கிடைப்பதுடன் அவர்கள் வங்கியின் பங்காளர்களாகின்றனர்.

**அட்டவணை – 20**

**வங்கி அங்கத்துவத்தின் முன்னேற்றம் 2000 – 2014.12.31**

| ஆண்டு | பெண்கள் | ஆண்கள் | மொத்தம் | கடந்த வருடத்துடன் பார்க்குமிடத்து வளர்ச்சி | வளர்ச்சி வீதம் % |
|---|---|---|---|---|---|
| 2000 | 943,142 | 628,094 | 1,571,236 | 326,300 | 26 |
| 2001 | 1,042,158 | 663,905 | 1,706,063 | 134,827 | 9 |
| 2002 | 1,149,226 | 716,833 | 1,866,059 | 159,996 | 9 |
| 2003 | 1,275,273 | 777,222 | 2,052,495 | 186,436 | 10 |
| 2004 | 1,351,769 | 806,470 | 2,158,239 | 105,744 | 5 |
| 2005 | 1,428,848 | 824,846 | 2,253,694 | 95,455 | 4 |
| 2006 | 1,516,985 | 853,604 | 2,370,589 | 116,895 | 5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2007 | 1,575,509 | 872,490 | 2,447,999 | 77,410 | 3 |
| 2008 | 1,641,872 | 859,900 | 2,501,772 | 53,773 | 2 |
| 2009 | 1,691,112 | 896,947 | 2,588,059 | 86,287 | 3 |
| 2010 | 1,830,840 | 970,693 | 2,801,533 | 213,475 | 8 |
| 2011 | 1,881,808 | 987,740 | 2,869,548 | 68,015 | 2 |
| 2012 | 2,079,173 | 1,078,546 | 3,157,719 | 288,171 | 9 |
| 2013 | 2,199,135 | 1,121,833 | 3,320,968 | 163,249 | 5 |
| 2014 | 2,389,133 | 1,214,461 | 3,603,594 | 282,626 | 7.8 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

14 வருடங்களில் அங்கத்தவர்களின் பரம்பலானது 1வது புள்ளி விபர அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது. 2013ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014ம் ஆண்டில் வங்கிச் சங்க அங்கத்துவமானது கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து வளர்ச்சி ஒன்றினைக் காட்டுவதுடன் அந்த வளர்ச்சி வீதமானது 7.8% ஆகும். பல்வேறு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு நிதி நிறுவனம் முகம் கொடுக்கின்ற பிரச்சினை ரீதியான பொருளாதார நிலைகளிலும் எமது சமுதாய அடிப்படை வங்கிகள் தொடர்பில் வாடிக்கையாளர் நம்பிக்கைகள் இதன் மூலம் தெளிவாகின்றது.

விசேடமாக 2014ம் ஆண்டிற்குள் சமுதாய அடிப்படை வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட விதுலி அத்வெல, வாழ்வின் எழுச்சி இசுர கடன், வெளிநாட்டு வீரர் (ரட்ட விருவோ) கடன்கள் போன்ற விசேட கடன் திட்டங்களும் இதற்குத் தாக்குச் செலுத்தியது.

**அட்டவணை – 21**

**2014.12.31ம் திகதியில்**


| **ஆண்டு** | **தொகை ரூ.மில்** | **வளர்ச்சி ரூ.மில்** | **வளர்ச்சி வீதம்** |
|---|---|---|---|
| 2000 | 985.16 | 397.98 | 67.80 |
| 2001 | 1,383.15 | 397.99 | 40.40 |
| 2002 | 1,679.79 | 296.64 | 21.40 |
| 2003 | 1,930.37 | 250.57 | 14.90 |
| 2004 | 2,206.62 | 276.25 | 14.30 |
| 2005 | 2,601.01 | 394.40 | 17.90 |
| 2006 | 3,096.44 | 495.42 | 19.00 |

| | | | |
|---|---|---|---|
| 2007 | 3,639.53 | 543.10 | 17.50 |
| 2008 | 3,989.90 | 350.37 | 9.63 |
| 2009 | 4,212.42 | 222.52 | 5.58 |
| 2010 | 4,790.47 | 578.05 | 13.72 |
| 2011 | 5,370.53 | 580.06 | 12.11 |
| 2012 | 6,380.00 | 1,009.69 | 15.83 |
| 2013 | 7,101.00 | 721.00 | 10.15 |
| 2014 | 8,499.50 | 1,398.50 | 16.45 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 07**

**பங்கு மூலதன வளர்ச்சி 2000 – 2014 (1%)**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

14 வருடங்களில் பங்கு மூலதன பரம்பலானது 2 வரவு புள்ளிப் பதிவுகள் மூலம் காட்டப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே பங்கு மூலதனத்தின் வளர்ச்சி வீதமானது 68% என்ற கூடிய பெறுமதியைக் காட்டினாலும் கடந்த ஆண்டுகளில் வளர்ச்சி வீதமானது வேகமாக குறைவடைந்தது. நடப்பாண்டில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது குறைந்து காணப்படுகின்றது. எவ்வாறு இருந்தாலும் நடப்பாண்டில் பங்கு மூலதனத்தின் வளர்ச்சியைக் கவனத்திற்கொள்ளும்போது பங்கு மூலதன வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளதனைக் காட்டுகின்றது. இந்த நிலையினை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்து வங்கிகளின் நிலைபேறான செயற்பாட்டுக்கு பங்களிப்புச் செய்கின்ற பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் எதிர்கால செயற்திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

2013ம் ஆண்டில் ரூபா மில்லியன் 7,101இற்கான பங்கு மூலதனம் 2014ம் ஆண்டில் ரூபா மில்லியன் 8,499.5 வரை வளர்ச்சியடைந்துள்ளதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை – 22

## வங்கிச் சங்க வைப்பு வேலைத்திட்டம்


### வைப்புக்கள் (அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர், குழு, சிறுவர், திரியமாதா)

| வருடம் | எண்ணிக்கை | வளர்ச்சி | தொகை ரூ. | வளர்ச்சி ரூ.மில். |
|---|---|---|---|---|
| 2000 | 2,645,574 | 1,220,922 | 2,033.45 | 1,264.50 |
| 2001 | 3,035,233 | 389,659 | 3,111.16 | 1,077.71 |
| 2002 | 3,296,569 | 261,336 | 3,857.10 | 745.94 |
| 2003 | 3,680,786 | 384,217 | 4,710.80 | 853.70 |
| 2004 | 3,989,539 | 308,753 | 5,751.81 | 1,041.01 |
| 2005 | 4,229,575 | 240,036 | 6,824.88 | 1,073.07 |
| 2006 | 4,394,498 | 164,923 | 8,131.66 | 1,306.78 |
| 2007 | 4,613,504 | 219,006 | 9,875.63 | 1,743.97 |
| 2008 | 5,081,229 | 467,725 | 11,356.79 | 1,481.16 |
| 2009 | 5,167,854 | 86,625 | 13,536.65 | 2,179.86 |
| 2010 | 5,505,853 | 337,999 | 15,906.77 | 2,370.12 |
| 2011 | 5,524,025 | 18,172 | 18,907.33 | 3,000.56 |
| 2012 | 6,206,484 | 682,459 | 20799.06 | 1,891.73 |
| 2013 | 6,383,307 | 176,823 | 23,916.57 | 3,117.52 |
| 2014 | 6,822,409 | 439,102 | 29,436.10 | 5,519.53 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 08**

**வைப்புத் தொகை வளர்ச்சி (1%)**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

2014ம் ஆண்டிற்குள் ரூபா மில்லியன் 5519.5 நிதியத்தினை வைப்புச் செய்து வங்கிச் சங்க வேலைத்திட்டங்கள் தொடர்பில் மேலும் நம்பிக்கையினை வைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் விசேடமாக வங்கிச் சங்கங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட விசேட வைப்பு வேலைத்திட்டங்கள் இந்த வைப்பு தொடர்பாக தாக்குச் செலுத்தியுள்ளது. ஏனைய போட்டித் தன்மையுள்ள குறுநிதி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாறான வளர்ச்சி ஒன்றினைப் பெற்றுக் கொள்வதனை போற்றுதல் வேண்டும்.

### 9.4.2 சமுதாய அடிப்படை வங்கி கடன் வேலைத்திட்டம்

- வாழ்வின் எழுச்சி நிவாரணம் பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சி ஆற்றல்களை இனங்கண்டு சுயபலத்தினால் வறுமையிலிருந்து மீளுவதற்குத் தேவையான சூழலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான குறுநிதியியல் வசதிகளை சமுதாய அடிப்படை வங்கி கடன் திட்டத்தின் கீழ் இடம் பெறுகின்றது.
- அங்கத்தவர்களின் மூலதன நிதியங்கள், திடீர் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு விசேட கடன் திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.
- சுயதொழில், மிகிஜய, கிருள (மகுட) அபிவிருத்தி, யொவுன் திரிய, வாழ்வாதாரக் கடன் வேலைத்திட்டங்களின் ஊடாக வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு ரூபா 100,000/=த்திலிருந்து 250,000/= வரை கடன்கள் விடுவிக்கப்படுகின்றது. பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் பொருட்டான நிதியத்திற்கு ரூபா 75,000/= வரையிலான கடன் தொகையினைப் பெற்றுக்கொள்ள வசதிகள் உள்ளன. 2010ம் ஆண்டின் அரை இறுதிப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட கிருள (மகுட) அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் இது வரையில் செயற்படுத்தப்பட்ட சுயதொழில் கடன் ரூபா 100,000/=த்திலிருந்த எல்லையானது ரூபா 250,000/= வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வீடொன்றினை நிர்மானித்தல், அரைப் பகுதி வேலைகள் முடிக்கப்பட்ட வீட்டின் பணிகளை பூர்த்தி செய்வதற்கு, வீட்டினைத் திருத்துதல் போன்ற தேவைகளுக்காக ரூபா 50,000/= வரையிலான கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டு வீட்டின்

தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு உதவுவதற்கு வங்கிகள் தயாராகவுள்ளது.

- திடீர் நிதித் தேவைப்பாடுகளின் போது அநியாய வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து மீண்டு மிக இலகுவில் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நுகர்வு, இடர், சுவசக்தி கடன் திட்டங்களினூடாக அங்கத்தவர்களுக்கு சலுகையொன்று வழங்கப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட விதுலி அத்வெல கடன் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வங்கி அங்கத்தவர்களுக்கு வீட்டிற்கான மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக உயர்ந்த பட்சமானது ரூபா 30,000/=ற்கு கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றது.
- தற்போது வருமானமீட்டல் கடன் கருத்திட்டங்களின் பொருட்டு வழங்கப்படுகின்ற கடன்களுக்கு சமுர்த்திப் பயனாளி அங்கத்தவர்களுக்கு 8%மும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு 10%மும் என்ற வருடாந்த வட்டி வீதத்திற்கு வழங்கப்படுவதுடன் ஏனையவர்களுக்கு 12% ஆகும். (சுவசக்தி மற்றும் விதுலி அத்வெல தவிர்ந்த)
- 2014ம் ஆண்டிற்குள் 274,840 அங்கத்தவர்களுக்கு ருபா மில்லியன் 11,010இற்கான தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- 2014ம் ஆண்டின் கடன் அறவீட்டு வீதாசாரமானது 98.2% (எஞ்சிய தவணைப்பண அறவீடுகளும் உட்பட்டதாக) அறவிடமுடியாக் கடன் 4% ஆகும்.

**அட்டவணை – 23**

**2014.12.31ம் திகதியில் கடன் வழங்கல்கள்**

| ஆண்டு | எண்ணிக்கை (திரட்டியது) | தொகை ரூ.மில் | வருடத்திற்குள் கடன் வழங்கல்கள் ரூ.மில். |
|---|---|---|---|
| 1999 | 209,818 | 966.31 | 966.31 |
| 2000 | 481,475 | 2,788.50 | 1,822.19 |
| 2001 | 813,334 | 5,552.75 | 2,764.24 |
| 2002 | 1,016,392 | 7,448.08 | 1,895.33 |
| 2003 | 1,340,126 | 10,503.30 | 3,055.22 |
| 2004 | 1,697,866 | 13,977.81 | 3,474.51 |
| 2005 | 2,149,135 | 20,725.03 | 6,747.22 |
| 2006 | 2,527,841 | 26,035.09 | 5,310.06 |
| 2007 | 2,952,840 | 32,843.04 | 6,807.93 |
| 2008 | 3,450,469 | 42,757.37 | 9,914.36 |
| 2009 | 3,721,662 | 48,352.73 | 5,595.36 |

| | | | |
|---|---|---|---|
| 2010 | 4,160,596 | 58,531.61 | 10,178.88 |
| 2011 | 4,682,822 | 71,721.04 | 13,189.43 |
| 2012 | 5,085,275 | 87,046.00 | 15,324.96 |
| 2013 | 5,360,115 | 98,056.00 | 11,010.00 |
| 2014 | 6,388,489 | 127,805.40 | 29,749.40 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**அட்டவணை – 24**


**கடன் வகைப்படுத்தல் 2014.12.31ம் திகதியில் திரட்டியது**

| கடன்வகை | ரூ. மில். | பங்களிப்பு |
|---|---|---|
| சுயதொழில் | 72,680 | 56.87 |
| பயிர்ச் செய்கை | 10,350 | 8.09 |
| ஏனையவை (மிகிஜய, மீன்பிடி, சுவசக்தி, இடர், கிருள கடன், யொவுன் திரிய) | 14,501 | 11.34 |
| | 5,035 | 3.93 |
| மக்கள் எழுச்சி (ஜன புபுது) | 11,100 | 8.68 |
| வீடமைப்பு | 14,131 | 11.09 |
| மொத்தம் | 127,797 | 100.00 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 09**

**கடன் வகைப்படுத்தல்**



**9.4.3 வங்கிச் சங்கங்களின் மேலதிக நிதிய முதலீடுகள் (நிலையான வைப்புக்களும் திறைசேரி உண்டியல்களும்)**

வங்கிச் சங்கங்களின் சொத்துக்களிலிருந்து உயர்ந்தபட்ச நன்மையினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடனை விடுவித்த பின்னர் மேலதிக நிதியத்தினை மகாசங்கங்கள் ஊடாக திறைசேரி சுற்றறிக்கைக்கமைய அரசாங்க வங்கிகளில் மாத்திரம் முதலிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாசங்கத்தினை நிதியியல் ரீதியாகவும் பலப்படுத்தும் நோக்கமாகும்.

**அட்டவணை – 25**


**சமுதாய அடிப்படை வங்கியின் மேலதிக பணத்தினை முதலீடு செய்தல்**

| ஆண்டு | தொகை | வளர்ச்சி | வளர்ச்சி% |
|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | |
| 2000 | 1,620 | 1,038 | 178.00 |
| 2001 | 3,175 | 1,555 | 95.99 |
| 2002 | 5,097 | 1,922 | 60.54 |
| 2003 | 5,914 | 817 | 16.03 |
| 2004 | 7,828 | 1,914 | 32.36 |
| 2005 | 7,417 | -411 | (5.25) |
| 2006 | 9,936 | 2,519 | 33.96 |
| 2007 | 13,791 | 3,855 | 38.80 |
| 2008 | 18,833 | 5,042 | 36.56 |
| 2009 | 24,039 | 5,206 | 27.64 |
| 2010 | 27,248 | 3,209 | 13.35 |
| 2011 | 39,048 | 11,800 | 43.31 |
| 2012 | 42,098 | 3,050 | 7.81 |
| 2013 | 55,690 | 13,592 | 3.229 |
| 2014 | 48,309 | (7,381) | (15.27) |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 10**

**பண வீத வளர்ச்சி**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

சமுதாய அடிப்படை வங்கிகளில் மேலதிக நிதி முதலீடானது 6வது புள்ளி விபர பதிவுகள் மூலம் காட்டப்படுவதுடன் வங்கிச் சங்கங்களின் ஆரம்ப காலத்திலேயே முதலீடுகளின் வளர்ச்சியானது கூடிய பெறுமதியினைக் காட்டியதும் பின்னர் அது பின்னடைவைக் கொண்டுள்ளது. கடன் வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் காரணமாக முதலீடு செய்யக்கூடிய நிதியங்களின் அளவு படிப்படியாக வரையறுக்கப்பட்டுள்ளது. அது திருப்திகரமான ஒரு பண்பாகும்.

### 9.4.4 வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் செயற்பாடுகள்

வங்கி நிதி நடவடிக்கைகள் நாடு பூராகவும் அமைந்துள்ள சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் நிதி நெறிப்படுத்தல் அலகாக செயற்பட்டுச் செல்லும் போது அதற்கு இணைந்ததாக பிரிவில் பாரிய பொறுப்பினை மேற்கொள்கின்றது.


அதன் பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் சகல செலவுகளும் அப்பிரிவில் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் தொடர்பான பிரயாணப் படிகள், விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப் படிகள், வங்கிச் சங்க வருடாந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக செலவிடும் செலவுகள் மற்றும் பயிற்சிச் செலவுகள் இதனுள் உள்ளடங்குகின்றது. அதே போல் மீள்நிதியீட்டல் கடன்களை வங்கிகளுக்கு வழங்குதல், மிகிஜய வட்டியினை ஈடுசெய்தல் பயனாளிகளின் கடன் வசதியின் பொருட்டு நிதியங்களை வழங்குவதும் வங்கி நிதிப் பிரிவின் வருமானங்களின் மூலமேயாகும். வங்கிகள் மற்றும் குறித்த மேம்பாடு மற்றும் பிரச்சார பணிகளின் பொருட்டும் இப்பிரிவிலிருந்து நிதி செலவிடப்படுகின்றது.

**அட்டவணை – 26**


| வருமானம் | ரூபா மில். | | செலவுகள் | ரூபா மில். |
|---|---|---|---|---|
| முதலீட்டிலிருந்து | 1,416 | | கட்டாய சேமிப்பின் பொருட்டு செலுத்திய வட்டி | 764.8 |
| கடன் வழங்குதல் மூலம் | 144 | | பிரிவு நிர்வாகச் செலவுகள் | 205.1 |
| அ.மு.கடன் மீள அறவிடல் | 0 | | செலவை மீறிய வருமானம் | 590.7 |
| மேலதிக வருமானம் | 0.6 | | | |
| | 1,560.6 | | | 1,560.6 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 11 வருமானம்**




**வரைபடம் - 12 செலவுகள்**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு முகாமைத்துவ நடவடிக்கைகளின் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களை பணியில் ஈடுபடுத்தி வங்கிச் சங்க நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல், பணியாளர் கடன் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல், முன்னேற்ற நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**அட்டவணை – 27**

**வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் பணியாளர்கள்**

| | பதவி | அங்கீகரித்த எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் | 01 | |
| 2 | பிரதிப் பணிப்பாளர் | 02 | 1 |
| 3 | உதவிப் பணிப்பாளர் | 04 | 2 |
| 4 | சமுர்த்தி முகாமையாளர் | 40 | 38 |
| 5 | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | 20 | 17 |
| 6 | எழுதுனர்கள் | 03 | 2 |
| 7 | கணனி தரவுப் பதியுனர்கள் | 03 | 0 |
| 8 | தட்டெழுத்தாளர் | 01 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | 03 | 2 |
| 10 | சாரதிகள் | 03 | 1 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவில் செயற்பாடுகளை கீழுள்ள பிரகாரம் விபரிக்க முடியும்.

### 9.4.5 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் கட்டாய சேமிப்புக் கணக்குச் செயற்பாடுகள்

**அறிமுகம்**

குறைந்த வருமானம் பெறும் மக்களை அதிகமதிகமாக சேமிப்பதற்குப் பழக்கப்படுத்தவும் அவர்களது எதிர்கால நன்மையின் பொருட்டும் கட்டாய சேமிப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகின. இங்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணத் தொகையிலிருந்து ஓரளவு பகுதியினை மாதாந்தம் சேமிப்பது கட்டாய சேமிப்பு என அழைக்கப்படுகின்றது.

தற்போது சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தினால் வழங்குகின்ற நிவாரண முத்திரைகளிலிருந்து ரூபா 1500,ரூபா 1000,ரூபா 900,ரூபா 615 பெறுமதியினையுடைய முத்திரைகளிலிருந்து முறையே ரூபா 300,ரூபா 200,ரூபா 150 மற்றும் ரூபா 100 பெறுமதியான தொகையினை கட்டாய சேமிப்பாக மாதாந்தம் சேமிக்கப்படுகின்றது. இத் தொகையினை வங்கி நிதி பிரிவுக்கு வரவழைத்து கூடிய வட்டி வீதத்தின் கீழ் அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்து பயனாளிகளின் திருப்தியடையக்கூடிய, போற்றக்கூடிய நன்மையினை வழங்குவது இந்த

வேலைத்திட்டத்தின் குறிக்கோளாகும். இந்த வேலைத்திட்டமானது இரு பிரதான கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

1 1999 நவம்பர் மாதத்திலிருந்து இது வரையில் அனுப்பப்பட்ட கட்டாய சேமிப்பு நிதியம் இங்கு பிரதேச செயலகத்தின் மூலம் அந்தந்த பயனாளிகள் சொந்தமான வங்கிச் சங்கங்களின் பெயரில் குறித்த சமுர்த்திப் பயனாளிகளின் கட்டாய சேமிப்பு நிதியத்தினை மாதாந்தம் முதலீட்டின் பொருட்டு வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றது.

2 1995ம் ஆண்டிலிருந்து 1999 ஒக்ரோபர் வரை மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பனவற்றில் முதலிடப்பட்ட நிதியங்களிலிருந்து சமுதாய அடிப்படை வங்கியுடன் சிறப்பாககொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்ற பயனாளிகளிலிருந்து 25%மானோரின் நிதியங்களை வங்கி நிதிப் பிரிவுக்கு வரவழைத்துக் கொண்டு முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2012 மார்ச் மாதத்திலிருந்து வங்கிச் சங்கங்களிலேயே குறித்த முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதினால் தலைமைக் காரியாலயத்தால் கட்டாய சேமிப்புக்கள் தொடர்பில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

**அட்டவணை – 28**

**2014.12.31ம் திகதியில் முதலீட்டின் பொருட்டு கிடைத்த கட்டாய சேமிப்புக்கள்**


| ஆண்டு | நிதியம் ரூ.மில். | வளர்ச்சி | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 2000 | 1,045 | | - |
| 2001 | 2,424 | 1,379 | 131.96 |
| 2002 | 3,852 | 1,428 | 58.91 |
| 2003 | 5,510 | 1,658 | 43.04 |
| 2004 | 6,652 | 1,142 | 20.73 |
| 2005 | 7,349 | 697 | 10.48 |
| 2006 | 8,282 | 933 | 12.70 |
| 2007 | 9,099 | 817 | 9.86 |
| 2008 | 9,960 | 861 | 9.46 |
| 2009 | 10,738 | 778 | 7.81 |
| 2010 | 12,886 | 2,148 | 20.00 |
| 2011 | 13,702 | 816 | 6.33 |
| 2012 | 11,726 | (1,976) | (14.42) |
| 2013 | 12,760 | 1,034 | 8.82 |

| | | | |
|---|---|---|---|
| 2014 | - | - | - |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 13**

**கட்டாய சேமிப்பு**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 9.4.5.1 கட்டாய சேமிப்பு வட்டியினைச் செலுத்துதல்

முதலீட்டின் பொருட்டு வங்கி நிதி பிரிவுக்கு அனுப்பப்படுகின்ற கட்டாய சேமிப்பு நிதியத்தினை முதலீட்டு அலகின் ஊடாக முதலீடு செய்து உழைக்கப்பட்ட வட்டித் தொகையிலிருந்து ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அந்தந்த சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களுக்கு வட்டிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் 2006ம் ஆண்டிலிருந்து வாழ்வின் எழுச்சி வங்கிச் சங்கச் செயற்பாடுகளைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த வட்டிக் கொடுப்பனவுகள் சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பயனுள்ள திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் 2008ம் ஆண்டிலிருந்து கட்டாய சேமிப்பு வட்டியை செலுத்தும் நடவடிக்கைகள் நேரடியாக சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் நடைமுறைக் கணக்கிற்கு பணத்தினை வைப்பிலிடுதல் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அச் செயற்பாடுகளினூடாக இதன் மூலம் வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவுக்கு வருடம் ஒன்றுக்கு 3 மில்லியன்கள் மட்டளவிலான மேலதிக வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. (வழியிலுள்ள பணத்தினை பிடிபணமாக உள்ள காலத்தில் ஒரு நாள் வரை குறைப்பதன் ஊடாக) கட்டாய சேமிப்பின் பொருட்டு பயனாளிக்கு வழங்கப்படுகின்ற வட்டி வீதம் போட்டித்தன்மையிலுள்ள வணிக வங்கிகளுடன் ஒப்பிடும் போது கூடிய பெறுமதியினைப் பெறுவதுடன் அது கணக்குடைய பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விசேட ஒரு நன்மையாகும்.

**அட்டவணை – 29**


## கட்டாய சேமிப்புக்கு செலுத்தப்பட்ட வட்டி

| ஆண்டு | செலுத்திய வட்டி வீதம் |
|---|---|
| 2000 | 14.0 |
| 2001 | 17.75 |
| 2002 | 13.0 |
| 2003 | 8.1 |
| 2004 | 7.5 |
| 2005 | 7.75 |
| 2006 | 10.06 |
| 2007 | 14.0 |
| 2008 | 14.0 |
| 2009 | 14.0 |
| 2010 | 9.5 |
| 2011 | 7.1 |
| 2012 | 7.5 |
| 2013 | 6.5 |
| 2014 | 6.0 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 14**

**கட்டாய சேமிப்பு வட்டி (1%)**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

2014ம் ஆண்டில் நிதிச் சந்தையில் வட்டி வீதமானது குறைந்த பெறுமதியினையுடையதாக இருந்தும் கட்டாய சேமிப்பின் பொருட்டு 6.0 வட்டி வீதத்தினை வங்கிச் சங்கத்திற்கு வழங்க கிடைத்தமை போற்றக்கூடியதாகும். (இந்த ஆண்டில் வணிக வங்கிகளில் தமது சேமிப்புக்களுக்கு வழங்கியது 5% வட்டியாகும்.

**9.4.6 கடன் திட்டம்**

வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவில் வங்கிச் சங்கங்களால் செயற்படுத்தப்படுகின்ற கடன் திட்டத்திற்கு மேலதிகமாக தேவையான நிதியங்களை வழங்குவதுடன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிரந்தர பணியாளர்களுக்கும் கடன் திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படும் கடன் திட்டங்கள் கீழுள்ள பிரகாரம் வகைப்படுத்திக் காட்ட முடியும்.

1. பயனாளிகளுக்கான கடன் திட்டம்
2. பணியாளர்களுக்கான கடன் திட்டம்

**9.4.6.1**

**(I) மீள்நிதியீட்டல் கடன் திட்டம்**

வங்கிச் சங்கங்கள் கடனை வழங்குவது தங்களால் சேகரிக்கப்படுகின்ற வைப்புக்களிலிருந்தாகும். அதற்கு வங்கிச் சங்கங்களுக்கு அனுமதித்திருப்பது மொத்த வைப்புத் தொகையிலிருந்து 80% வரையாகும். அதற்கு அப்பால் வழங்கப்படுகின்ற கடன்களுக்காக ஏற்படுகின்ற நிதிக் குறைபாடுகளை தீர்வு செய்யும் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கை பிரிவால் மீள் நிதியீட்டல் வசதிகள் வங்கி வட்டி வீதத்தினை விடக் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் வங்கிச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றது. மீள்நிதியீட்டல் கடன் திட்டமானது சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக செயற்படுவதுடன் வங்கி நிதி நடவடிக்கை பிரிவில் 4% வருட வட்டிக்கு சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு வழங்கப்படுவதுடன் சமுதாய

அடிப்படை வங்கிச் சங்கங்கள் சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு 7% வட்டிக்கு மீள்நிதியீட்டல் கடன் நிதியம் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை – 30**


**மீள்நிதியீட்டல் கடன் திட்டத்தின் முன்னேற்றம் 2014.12.31ம் திகதியில்**

| ஆண்டு | கடன் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | விடுவித்த தொகை ரூ.மில். | அறவீட்டு வீதம் % |
|---|---|---|---|---|
| 1999 | 11 | 523 | 3.00 | 100 |
| 2000 | 175 | 5,578 | 52.00 | 92 |
| 2001 | 324 | 12,588 | 117.00 | 101 |
| 2002 | 472 | 18,400 | 177.00 | 100 |
| 2003 | 637 | 23,223 | 233.00 | 100 |
| 2004 | 786 | 27,605 | 283.00 | 101 |
| 2005 | 849 | 30,351 | 315.80 | 102 |
| 2006 | 971 | 36,155 | 389.00 | 100 |
| 2007 | 1,040 | 40,008 | 450.00 | 100 |
| 2008 | 1,072 | 42,631 | 499.71 | 100 |
| 2009 | 1,097 | 44,180 | 523.58 | 100 |
| 2010 | 1,110 | 45,284 | 571.11 | 91 |
| 2011 | 1,112 | 45,399 | 581.42 | 95 |
| 2012 | 1,132 | 46,145 | 613.12 | 100 |
| 2013 | 1,163 | 48,460 | 710.91 | 100 |
| 2014 | 1,175 | 49,332 | 761.64 | 100 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**வரைபடம் - 15**

**மீள்நிதியீட்டல் கடன் திட்டத்தின் முன்னேற்றம் 2014.12.31ம் திகதியில்**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**(II) மிகிஜய (8% - 10%) சலுகை வட்டி ஈடுசெய்தல்**

மேலும் ஜனபுபுது, கெதர (வீடு) கடன் திட்டங்கள் 2010ம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டதுடன் இக்கடன் திட்டத்திற்கு மாற்றீடாக சுயதொழில்,, மற்றும் மிகிஜய வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கமைய சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் மேற்கொள்ளும் சகல வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு சலுகை வட்டி ஈடுசெய்தல் வங்கி நிதி நடவடிக்கை பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. வங்கிச் சங்கங்களின் நிதிப் பாதிப்புக்களை குறைக்கும் பொருட்டு சலுகை வட்டியினை வழங்குவதே இதன் குறிக்கோளாகும். 2013.12.31ம் திகதியின் பின்னர் அறவிட்ட வட்டிகளின் பொருட்டு சலுகை வட்டியினை ஈடுசெய்யவில்லை என்பதுடன் 2013.12.31ம் திகதி வரை அறவிட்ட பட்டியலின் பொருட்டு மாத்திரமே இந்த ஆண்டில் வட்டிச் சலுகை வழங்கப்பட்டது.

அட்டவணை – 31


2014.12.31ம் திகதியில் வங்கிச் சங்கங்களுக்கு வழங்கியுள்ள சலுகை வட்டியின் அளவு

| **ஆண்டு** | **தொகை** |
|---|---|
| 2008 | 250,143.00 |
| 2009 | |
| 2010 | 3,108,269.00 |
| 2011 | 2,496,830.25 |

| | |
|---|---|
| 2012 | 23,566,040.32 |
| 2013 | 91,706,854.90 |
| 2014 | 147,685,633.11 |

**வரைபடம் - 16**

**வங்கிச் சங்கங்களுக்கு வழங்கியுள்ள சலுகை வட்டி**




மூலம்: திணைக்கள மூலக்கூற்று

**(III) விதுலி அத்வெல (மின்சாரத்திற்கான உதவி) கடன் திட்டம்**

சகலருக்கும் மின்சாரத்தினை வழங்கும் நோக்கில் வாழ்வின் எழுச்சி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சக்தி, எரிசக்தி அமைச்சினால் விதுலி அத்வெல கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சினால் வழிகாட்டப்படுவதுடன் இலங்கை சமுர்த்தி அதிகார சபை (தற்போதைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்) மற்றும் இலங்கை மின்சார சபை என்பன இதற்காக நேரடிப் பங்களிப்பினை வழங்குகின்றது.

நாடு முழுவதுமான சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பின் ஊடாக ஒரே தடவையில் சலுகை ரீதியான "விதுலி அத்வெல" கடன் திட்டத்தினை செயற்படுத்துவதற்குரிய நிதியங்கள் வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் உத்தேச நன்மைகளாவன:

I. குறைந்த வருமானம் பெறுவோரால் பராமரிக்கப்படுகின்ற அல்லது பராமரித்துச் செல்ல உத்தேசித்துள்ள சிறுகைத்தொழில்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்களை செயற்திறன் மிக்கதாக ஆக்கி பொருளாதார பலத்தினை உயர்த்துதல்.

II. வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு கடன் கோரிக்கைகள் அதிகரித்து புதிய அங்கத்தவர்கள் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களில் இணைந்து வைப்பக்கள் அதிகரித்தல்.

III. வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் மூலம் வழங்கப்படும் சேவைக்கட்டணங்கள் காரணமாக வங்கிச் சங்கங்களின் வருமான பலமும் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளமை.

IV. சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் வருமான பலமும் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளமை.

இந்த விதுலி அத்வெல கடன் திட்டத்தின் பொருட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உயர்ந்தபட்ச கடன் தொகையானது ரூபா 30,000/= என்பதுடன் 60 மாத காலத்திற்குள் 12% வருட வட்டியுடன் கடன் தொகையின் தவணைப் பணம் அறவிடப்படும்.

இங்கு மின்சார சபையின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்ற கடன் விண்ணப்ப படிவத்தினை உரிய வாடிக்கையாளர் நிலையங்களினூடாகப் பெற்றுக் கொண்டு நெறிப்படுத்தல் ஆலோசனைப்படிவ இலக்கம் 05இன் பிரகாரம் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை முறையே வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், வாழ்வின் எழுச்சி முகாமையாளர், பிரதேச செயலாளர் சிபார்சு செய்து மின்சார சபைக்கு விண்ணப்பத்தினை சமர்ப்பித்ததன் பின்னர் மின்னிணைப்பு வசதிகள் வழங்கப்படும்.

2010ம் ஆண்டிற்குள் இந்த விதுலி அத்வெல கடன் திட்டத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற இருதரப்பு ஒப்பந்தம் இலங்கை சமுர்த்தி அதிகார சபை (தற்போதைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்) மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றால் கையொப்பமிடப்பட்டதுடன் அவ்வாண்டிற்குள் கடன் வழங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2014ம் ஆண்டிற்குள் இந்த விதுலி அத்வெல கடன் திட்டம் தொடர்பில் இருதரப்பு ஒப்பந்தம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினாலும் இலங்கை மின்சார சபையினாலும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை – 32**

**விதுலி அத்வெல கடன் திட்டத்தின் முன்னேற்றம்**

**2014.12.31ம் திகதியில்**

| ஆண்டு | வங்கி நிதிப் பிரிவால் மின்சார சபைக்கு | | | வங்கி நிதிப் பிரிவால் பயனாளிகளுக்கு/ குறைந்த வருமானம் பெறுவோருக்கு | |
|---|---|---|---|---|---|
| | வழங்கியுள்ள | | | வழங்கியுள்ள | |
| | கடன் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்.) | செலுத்த வேண்டியுள்ள தொகை (ரூ.மில்) | கடன் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| 2011 | 02 | 350 | 335.08 | 20694 | 354 |
| 2012 | 07 | 747 | 675.32 | 44932 | 853 |
| 2013 | 09 | 1080 | 861.67 | 64520 | 1237 |
| 2014 | 13 | 1537 | 1106.18 | 80153 | 1537 |

மூலம்: திணைக்கள மூலக்கூற்று

### 9.4.6.2 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாளர்களுக்கான கடன் திட்டம்

- **நுகர்வுக் கடன் திட்டம்**

  2004ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆரம்பமான இந்த வேலைத்திட்டம் 2008ம் ஆண்டு வரை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வருடாந்தம் 9% வட்டிக்கு ரூபா 50,000/=இற்கான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. தற்போது இக் கடன் திட்டமானது சகல பணியாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது. கடன் தொகையினை மீளச் செலுத்தும் காலமானது 60 மாதங்களாகும். 2010.10.18ம் திகதியிலிருந்து 50,000/= தொகையானது 100,000/=ஆக அதிகரிக்கப்பட்டது. 2014.12.18ம் திகதியில் இந்த வேலைத்திட்டம் மாவட்டங்களுக்கு பரவலாக்கப்பட்டது.

**அட்டவணை – 33**

**2014.12.31ம் திகதியில் ஊழியர் நுகர்வுக் கடன் (திரட்டியது)**

| வழங்கிய கடன் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| 28118 | 1869.09 |

- **பணியாளர்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டம்**

  2004ம் ஆண்டின் யூன் மாதத்திலிருந்து ஆரம்பமான இந்த கடன்திட்டம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிரந்தரமான பணியாளர்களுக்கு சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் முதலீடுகளிலிருந்து ஈட்டிய வருமானங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு கடன் வேலைத்திட்டத்தின் கீழ் காணி ஒன்றினைக் கொள்வனவு செய்யதல், புதிய வீடு ஒன்றினை நிர்மானித்தல், வீடு ஒன்றினைக் கொள்வனவு செய்தல் மற்றும் வீட்டிற்கான ஒரு பகுதியினைச் சேர்த்தல் அல்லது வீட்டினைப் பெரிதாக்குதல் ஆகிய விடயங்களின் பொருட்டு கடன்கள் வழங்கப்படுகின்றது. கடன் தொகையினை மீளச் செலுத்தும் காலமானது 15 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது. வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் 2014.12.31ம் திகதியில் கீழுள்ள பிரகாரம் கடன் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2010.01.01ம் திகதியிலிருந்து குறித்த வட்டி வீதமானது 10% வரை குறைக்கப்பட்டுள்ளதுடன் 2014.11.01ம் திகதியிலிருந்து இக் கடன் அறவீடுகளும் மாவட்ட மட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை – 34**

**2014.12.31ம் திகதியில் வீடமைப்புக் கடன் (திரட்டியது)**

| வழங்கிய கடன் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| 2129 | 905.08 |

- **மோட்டார் சைக்கிள் கடன் திட்டம்**

  2004ம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் ஆரம்பமான இக் கடன் திட்டத்தின் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் முதலீடுகளிலிருந்து ஈட்டிய வருமானங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிரந்தர பணியாளர்களூ மாத்திரம் இக் கடன் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. 10% வருட வட்டியின் கீழ் உயர்ந்த பட்சம் ரூபா 150,000.்.ஸ்ரீஇற்கான தொகை 60 மாதங்களில் மீளச் செலுத்துவதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கடன் வழங்கப்படுகின்றது. 2014.12.31ம் திகதியின் பின்னர் மோட்டார் சைக்கிள் கடன்களை மாவட்ட மட்டத்தில் வழங்குவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2014.11.01ம் திகதியிலிருந்து இக் கடன் அறவீடுகளும் மாவட்ட மட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை – 35**

**2014.12.31ம் திகதியில் மோட்டார் சைக்கிள் கடன் (திரட்டியது)**

| வழங்கிய கடன் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| 4067 | 368.03 |

### 9.4.7 ஊழியர் உடல் உபாதைக் காப்புறுதி

சமுதாய அடிப்படை வங்கியிடமுள்ள பணத்தினை வங்கிச் சங்கத்திலிருந்து வணிக வங்கிகளுக்கு வைப்புச் செய்வதற்காக எடுத்துச் செல்லும் போதும் வணிக வங்கிகளிலிருந்து சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு பணத்தினைக் கொண்டு வரும்போதும் ஏற்படுகின்ற பணத்தினைக் கொள்ளையடிக்கும் சந்தர்ப்பங்களில் வங்கி பணியாளர்களுக்கு ஏற்படுகின்ற உடல் உபாதைப் பாதிப்புக்களுக்கு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நட்ட ஈடுகள் வழங்கப்படுகின்றது. 2005 ஒக்ரோபர் மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்ட உடல் உபாதைக் காப்புறுதி நிதியத்திற்கு ஒவ்வொரு வங்கிச் சங்கமும் ஆண்டுக்கு ரூபா 1000/= வீதம் செலுத்தி காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இதன் கீழ் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச நட்ட ஈட்டுத்தொகை

வாழ்வின் எழுச்சி முகாமையாளர் - ரூபா 200,000/=

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் - ரூபா 150,000/=

2014ம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் காப்புறுதித் தவணையாக வங்கிச் சங்கங்கள் ஊடாக ரூபா 808,400/=இற்கான தொகை கிடைக்கப் பெற்றுள்ளது.

### 9.4.8 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்களின் கையிலுள்ள காசுக் காப்பீடு

- வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்களின் கையிலுள்ள காசு மற்றும் அந்த வங்கிச் சங்கங்களிலிருந்து வணிக வங்கிகளுக்கு எடுத்துச் செல்லும் போதும் எடுத்து வரும்போதும் ஏற்படுகின்ற பணம் திருட்டுக்கள் அல்லது கொள்ளைகளின் போது பணத்திற்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் இதன் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது.
- வங்கிச் சங்கங்கள் மகாசங்கங்களில் நாளாந்த திரவச் சொத்து ரீதியான தேவைகளைக் கவனத்திற் கொண்டு அதன் பிரகாரம் இந்த காப்பீட்டு பாதுகாப்பின் பொருட்டு வங்கி நிதிப் பிரிவில் அறிந்து கொள்ள முடியும். அதற்கான வருடாந்த தவணைப் பணம் வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பி காப்பீட்டு பாதுகாப்பினைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்துள்ளது. இதன் முன்னேற்றமானது 2014.12.31ம் திகதியில் 1069 வங்கிச் சங்கங்களும் 271 மகாசங்கங்களும் இந்த காப்பீட்டுப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொண்டுள்ளது.
- வங்கிச் சங்கம் (உடல் உபாதைப் பாதுகாப்புத் தொகையும் உட்பட) மற்றும் மகா சங்கத்தால் அனுப்பப்பட்ட தவணைப் பணம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிதியத்தில் வரவு வைத்து பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தி நிதியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- 2014ம் ஆண்டின் பொருட்டு வங்கிச் சங்கங்களின் கையிருப்பிலுள்ள காப்பீட்டுத் தவணைப் பணமாக ரூபா 11,631,909/=இற்கான தொகை அனுப்பப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டில் 01 சம்பவத்திற்காக ரூபா 44,930.50 தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டுள்ளது.

### 9.4.9 வங்கிச் சங்க மகாசங்க நிதி நெறிப்படுத்தல் நடவடிக்கைகள்

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க நடவடிக்கைகளை ஒவ்வவொரு நிதியாண்டின் இறுதியில் அடுத்துவரும் ஜனவரி 1ம் திகதியிலிருந்து டிசெம்பர் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் ஏற்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வு செய்து வருடாந்த கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் ஆரம்ப கால அந்த அறிக்கைகளைத் தயாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. பிரதேச செயலக கணக்காளராக இருப்பினும் அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறாத காரணத்தினால் அவ்வாண்டுக்குரியவாறு தயாரிக்கப்படாத கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரிக்கும் பொருட்டு அரச மற்றும் அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனங்களின் கணக்காளர்களை வெளியக கணக்காய்வாளர்களாகப் பயன்படுத்திக் கொண்டு அச்சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

2006ம் ஆண்டுக்குப் பின்னரான ஆண்டுகளில் கணக்காய்வு செய்து நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வு அபிப்பிராயங்களுடன் சமுதாய அடிப்படை வங்கி பிரிவுக்கு சமர்ப்பிப்பது உள்ளக கணக்காய்வு பிரிவால் இதுவரையில் மேற்கொள்ளப்படுகின்றது.

### 9.4.10 வங்கி கண்காணிப்பு பிரிவு

வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவால் வெளியிடப்பட்ட நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க நெறிப்படுத்தல் செயற்பாட்டு முறைகள் முறையாக நடைபெறுகின்றதா எனக் கணக்காய்வு செய்வதும் வழிகாட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முழு வங்கிச் சங்க வலையமைப்பையும் செயற்திறன் மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் விருத்தி செய்யும் நோக்கில் ''வங்கி கண்காணிப்பு பிரிவு''சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவில்

தாபிக்கப்பட்டுள்ளதுடன் கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் அந்த அலகில் நிறைவேற்றப்படுகின்றது.

- வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் மூலமும் ஏனைய விதங்களில் கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்கமையவும் பின்பணிதொடர் ஆய்வுகளை மேற்கொள்ளல், அதன் பிரகாரம் வெளிக்காட்டப்படுகின்ற தவறுகளைத் திருத்திக் கொள்வதும் உள்ளக கணக்காய்வு, நீதி விசாரணை மற்றும் உரிய பிரிவுகளுக்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்கின்றது.
- வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணக்கீட்டு நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகளியுலும், நாளாந்த நடவடிக்கைகளிலும் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.
- மாதாந்த, வருடாந்த பரீட்சை மீதிகளைச் சமப்படுத்தும் நடவடிக்கைகள், வங்கி நடமாடும் சேவைகள், வாழ்வின் எழுச்சி வங்கிகளை ஒன்றிணைத்தல், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வங்கிச் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் காரணமாக வங்கி நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மீண்டும் சிறந்த நிலைக்குள்ளாக்க தேவையான ஆலோசனைகளை வழங்குதல், மற்றும் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளிலும் வங்கிச் சங்கங்களிலும் ஏற்படுகின்ற பல்வேறு வகையான காலத்திற்கேற்புடைய தேவைகளை நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதனூடாக வங்கிச் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் பயன்களை மேம்படச் செய்வதற்கு பங்களிப்புச் செய்தல். வங்கி/ வங்கிச் சங்க ஒழுங்குகள் வங்கிக் கண்காணிப்பு அலகின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.
- தொடர்ச்சியாக கண்காணித்தல், தீடீரென ஏற்படுகின்ற தேவைகளின் பொருட்டு ஒத்துழைப்புக்களை வழங்குதல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டு வங்கிச் சங்க ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு அலகுகள் நாடு பூராகவும் 25 மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டு வங்கி/ வங்கிச் சங்க ஒழுங்குகள் வங்கிக் கண்காணிப்பு அலகின் தேசிய மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுகள் 03 நடாத்தப்பட்டுள்ளதுடன் அங்கு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் அதிகமாக அவ்வாண்டிலேயே தீர்க்கப்பட்டுள்ளது.

### 9.4.11 பயிற்சி நடவடிக்கைகள்

1043 சமுர்த்தி வங்கி வலையமைப்பினதும் 317 மகாசங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள், வங்கி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களுக்குரியவாறு வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் பயிற்சி பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு செயற்திறன்மிக்க பயனுள்ள சேவைகளை உருவாக்கும் பொருட்டு வங்கிப் பணியாளர்களுக்கான அறிவு, திறமை மற்றும் சிறந்த மனப்பாங்கினை இரட்டிப்புச் செய்வது இப்பிரிவின் பணியாகும்.

அதன் பிரகாரம் வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பான தெளிவை வழங்குகின்ற வங்கி நடவடிக்கைகள் மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகள் தொடர்பான ஆரம்ப பயிற்சிப் பாடநெறியினை சகல வங்கி உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மகாசங்க நடவடிக்கைகள் மற்றும் மகாசங்கத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்றுவிக்கப்படாத மகாசங்க பணியாளர்களுக்கு பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 9.4.12 முகாமைத்துவ தகவல் பிரிவு

1073 சமுதாய அடிப்படை வங்கிகளின் தகவல்களை முகாமைத்துவம் செய்யப்படுவது வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் முகாமைத்துவ தகவல் பிரிவின் மூலமேயாகும். அதன் பிரகாரம் ஒவ்வொரு வங்கிச் சங்கங்கமும் மகாசங்கங்கமும் மாதாந்தம் தமது வங்கிச் சங்கங்களின் முன்னேற்றத்தினை வழங்கியுள்ள படிவங்களின் மூலம் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ அலகிற்கு அறிக்கையிட வேண்டியதுடன் அத்தரவுகளைத் தயாரித்து வங்கிச் சங்கங்களிலுள்ள நிலைமைகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதும் வங்கிச் சங்கங்களின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான வீதாசார பகுப்பாய்வு ஒன்றினைக் கட்டியெழுப்புவதும் அதன் பிரகாரம் வங்கிச் சங்க மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கணனி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வங்கிகள் மற்றும் வங்கிகளின் தகவல்களை வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 9.4.13 சந்தைப்படுத்தல் மேம்பாட்டு அலகு

வங்கியியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரிவு ஒன்றாக சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் அண்மைக் காலத்திலிருந்து சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கத் துறையில் அறிமுகப்படுத்துவதற்கு வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் சமுதாய அடிப்படை வங்கிகளில் வைப்பு மேம்பாட்டு பணிகளின் பொருட்டு வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவில் சந்தைப்படுத்தல் அலகின் ஊடாக விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ 2014ம் ஆண்டிற்குள் தேசிய கலாசார பழக்கவழக்கங்கள் மற்றும் நாட்டார் விளையாட்டுக்களை எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாத்துக் கொடுப்பதும் சமுதாய அடிப்படை வங்கிகளை மக்களிடத்தே பிரபல்யப்படுத்தும் நோக்கில் நாடு பூராகவும் ஒவ்வொரு வங்கிச் சங்கமும் உட்படுகின்றவாறு புத்தாண்டு வைபவங்கள் 1000 நடாத்தப்பட்டுள்ளது. அதன் பொருட்டு சேமிப்பினை ரூபா மில்லியன் 10.5 தொகை வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவால் வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.

- ❖ சமுதாய அடிப்படை வங்கிகளில் சேமிப்பு மேம்பாட்டின் பொருட்டு 2014ம் ஆண்டிற்குள் கீழ் குறிப்பிடப்படும் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

  I. தமிழ் சிங்கள புத்தாண்டு வைபவத்தோடு இணைந்ததாக புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் வாரம் எனப் பெயரிட்டு அதன் மூலம் ரூபா மில்லியன் 1,489 வைப்புத் தொகை சேமிக்கப்பட்டது.

II. 2014 மார்ச் 08ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தினைக் கொண்டாடி திரியமாதா வைப்பு மேம்பாட்டு முறைகளை வங்கிச் சங்கத்தில் நடைமுறைப்படுத்தி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

III. உலக சிறுவர் தினத்தினை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்.

IV. தைப்பொங்கல் தினத்தினை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்

V. நத்தார் உற்சவத்தினை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்.

### 9.4.14 பொதுவான விடயங்கள்

புதிய ஆண்டில் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய வேலைத்திட்டங்களும் செயற்பாடுகளும்.

- 2014ம் ஆண்டின் பொருட்டு வங்கிச் சங்கங்களுக்கான ஐந்து இலக்குகளுடனான முறையின் பிரகாரம் வருடம் பூராகவும் பரவுகின்ற வங்கி நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமிடலைத் தயாரித்து வங்கிச் சங்கங்கள் அதில் ஈடுபடுத்தப்பட்டது. அதிகமான வங்கிச் சங்க நடவடிக்கைகள் தற்போது கணனி வசதிகள் வழங்கப்பட்டு இணையத்தள வசதிகள் ஊடாக தலைமைக் காரியாலயத்தின் முகாமைத்துவ தகவல் பிரிவுக்கு தகவல்களை வழங்குவதும் தேவையான வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2014ம் ஆண்டிற்குள் அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் கீழ் வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கஉட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திய முன்னேற்றங்கள் கீழுள்ளவாறாகும்.

**அட்டவணை – 36**

**வங்கிச் சங்கம் மற்றும் வங்கிக் கட்டிட நிர்மாணம் திருத்தங்களை மேம்படுத்துதல், பிறிதொரு பகுதியினை சேர்த்தல் மற்றும் காணி கொள்வனவு தொடர்பான விபரங்கள்**

| வேலைத்திட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா மில்.) |
|---|---|---|
| புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சங்க கட்டிடங்கள் | 33 | 43.53 |
| திருத்தஞ் செய்யப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சங்க கட்டிடங்கள் | 04 | 2.82 |
| பகுதி ஒன்றினைச் சேர்த்தல் | 25 | 24.05 |
| காணி கொள்வனவு | 04 | 4.22 |

- 2014ம் ஆண்டிற்குள் கணக்காளர்கள் மற்றும் விசாரணை உத்தியோகத்தர்களின் பொருட்டு வங்கிச் சங்கங்கள் மற்றும் மகா சங்கங்களுக்கு திடீர் விஜயத்தினை மேற்கொள்வதற்கான பிரயாணப் படியாக ரூபா 2,270,837/= தொகை வழங்கப்பட்டுள்ளது.

- வங்கிச் சங்கங்களை கணனிமயப்படுத்தியுள்ள இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மொனராகலைக்கு மேலதிகமாக ஏனைய மாவட்டங்களின் வங்கிச் சங்கங்களை கணனிமயப்படுத்தும் பொருட்டு தேவையான மென்பொருட்களை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சகல வங்கிகளினதும் பயனாளிகளது தரவுத் தொகுதி ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 37** **ஒதுக்கீட்டு கணக்கு 2014**

**செலவுத் தலைப்பு இலக்கம்: 218** **திணைக்களத்தின் பெயர்: சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வேலைத்திட்ட இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வேலைத்திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கம் | (2) மேலதிக நிதி ஒதுக்கீடும் மேலதிக மதிப்பீட்டு ஒதுக்கீடும் | (3) நி.பி. 66 மற்றும் நி.பி. 69இற்கமைய மாற்றங்கள் | (4) **மொத்த தேறிய ஒதுக்கங்கள் (1+2+3)** (1+2+3) | (5) மொத்த செலவுகள் | (6) தேறிய பெறுபேறு மிகை/ நிலுவை (4-5) | பக்க இலக்கம் (D.G.S.A 2 படிவத்திற்கமைய) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 1 | <u>மீண்டெழும் செலவுகள்</u> நெறிப்படுத்தல் வேலைத்திட்டம் | 15,500,125,000 | 4,000,000 | 48,888,300 -48,888,300 | 15,504,125,000 | 15,503,083,403 | 1,041,597 | |
| | உப மொத்தம் (மீண்டெழும்) | **15,500,125,000** | **4,000,000** | **0** | **15,504,125,000** | **15,503,083,403** | **1,041,597** | |
| | | | | | | | | |
| 1 | <u>மூலதனம்</u> நெறிப்படுத்தல் வேலைத்திட்டம் | 5,800,000 | 0 | 0 | 5,800,000 | 427,500 | 5,372,500 | |
| | உப மொத்தம் (மூலதனம்) | **5,800,000** | **0** | **0** | **5,800,000** | **427,500** | **5,372,500** | |
| | முழு மொத்தம் | **15,505,925,000** | **4,000,000** | **0** | **15,509,925,000** | **15,503,510,903** | **6,414,097** | |

பக்க இலக்கம் 02 இலிருந்து 21 வரையில் D.G.S.A 2லிருந்து D.G.S.A 10 வரையிலான படிவங்களிலிருந்து சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் பதிவிலக்கம் Iலிருந்து IV(ஆ) வரையில் உள்ளடங்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே உள்ளடங்கியுள்ள பகுதிகளாகும். ஆகையினால் மேலுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகள் அதற்குரிய கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு ஏற்றதாக தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திறைசேரி கணக்குப்

புத்தகங்களுடன் குறித்த கணக்குகள் இணங்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை சரியானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கு ஒப்படைக்கும் உத்தியோகத்தர் | கணக்கு ஒப்படைக்கும் உத்தியோகத்தர் | பிரதம கணக்காளர் |
| பெயர்: P.H.L.விமலசிறி பெரேரா | பெயர்: R.A.A.K.ரணவக்க | பெயர்: R.M.M.G.ரத்நாயக்க |
| பதவி: செயலாளர் | பதவி: பணிப்பாளர் தலைமையதிபதி | பதவி: பிரதம கணக்காளர் |
| (வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு) | (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்) | (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்) |
| திகதி: | திகதி: | திகதி: |

**அட்டவணை – 38** **ஒதுக்கீட்டு கணக்கு 2014**

**செலவுத் தலைப்பு இலக்கம்: 305** **திணைக்களத்தின் பெயர்: உடரட்ட கிராமிய புனருத்தாபனத் திணைக்களம்**

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வேலைத்திட்ட இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வேலைத்திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கம் | (2) மேலதிக நிதி ஒதுக்கீடும் மேலதிக மதிப்பீட்டு ஒதுக்கீடும் | (3) நி.பி. 66 மற்றும் நி.பி. 69இற்கமைய மாற்றங்கள் | (4) **மொத்த தேறிய ஒதுக்கங்கள் (1+2+3)** (1+2+3) | (5) மொத்த செலவுகள் | (6) தேறிய பெறுபேறு மிகை/ நிலுவை (4-5) | பக்க இலக்கம் (D.G.S.A 2 படிவத்திற்கமைய) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2 | <u>மீண்டெழும் செலவுகள்</u> அபிவிருத்தி வேலைத்திட்டம் | 20,275,000 | 0 | 0 | 20,275,000 | 18,866,678 | 1,408,232 | 2 |
| | உப மொத்தம் (மீண்டெழும்) | **20,275,000** | **0** | **0** | **20,275,000** | 18,866.678 | 1,408,232 | |
| | | | | | | | | |
| 2 | <u>மூலதனம்</u> அபிவிருத்தி வேலைத்திட்டம் | 1,350,000 | 0 | 0 | 1,350,000 | 1,318,298 | 31,702 | |
| | உப மொத்தம் (மூலதனம்) | **1,350,000** | **0** | **0** | **1,350,000** | 1,318,298 | 31,702 | |
| | முழு மொத்தம் | **21,625,000** | **0** | **0** | **21,625,000** | **20,185,066** | **1,439,934** | |

அட்டவணை – 39 ஒதுக்கீட்டு கணக்கு 2014

செலவுத் தலைப்பு இலக்கம்: 105

| தொ.இல. | செலவுக் குறியீட்டுத் தலைப்பு | நிதி ஒதுக்கீடு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01 | 105-2-1-1-2105 | 397194500.00 | 1882896604.21 | 1189048395.79 |
| 02 | 105-2-1-2-1503 | 9255000000.00 | 8619601398.14 | 635398601.86 |
| 03 | 105-2-1-2-2201 | 41102209.63 | 47612114.15 | 2387885.85 |
| 04 | 105-2-1-3-1503 | 64786063.97 | 91060182.72 | 25939817.28 |
| 05 | 105-2-1-3-2201 | 8320685.45 | 42968963.48 | 7031036.52 |
| 06 | 105-2-1-4-1503 | 20333573.33 | 20533692.54 | 5966307.46 |
| 07 | 105-2-1-4-2201 | 10814229.44 | 25000000.00 | 0.00 |

பக்க இலக்கம் 02 இலிருந்து 21 வரையில் D.G.S.A 2லிருந்து D.G.S.A 10 வரையிலான படிவங்களிலிருந்து சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் பதிவிலக்கம் Iலிருந்து IV(ஆ) வரையில் உள்ளடங்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே உள்ளடங்கியுள்ள பகுதிகளாகும். ஆகையினால் மேலுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகள் அதற்குரிய கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு ஏற்றதாக தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் குறித்த கணக்குகள் இணங்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை சரியானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பிரதான கணக்கு ஒப்படைக்கும் உத்தியோகத்தர்
பெயர்: P.H.L.விமலசிறி பெரேரா
பதவி: செயலாளர்
(வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு)
திகதி:

கணக்கு ஒப்படைக்கும் உத்தியோகத்தர்
பெயர்: R.A.A.K.ரணவக்க
பதவி: பணிப்பாளர் தலைமையதிபதி
(வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்)
திகதி:

பிரதம கணக்காளர்
பெயர்: R.M.M.G.ரத்நாயக்க
பதவி: பிரதம கணக்காளர்
(வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்)
திகதி:

**குறிப்பு**

2014ம் ஆண்டில் திணைக்களத்தின் செலவுகளை மேற்கொள்ளும் பொருட்டு வரவு செலவுகளினூடாக மதிப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் உள்ளீர்க்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகார சபை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை, சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் உடரட்ட கிராமிய புனருத்தாபன திணைக்களங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொண்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்ட